# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9: வள்ளுவர் ஆண்டு 2031 தை 22 சனிக்கிழமை(05-02-2000) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்:36


நாட்டு மக்களுக்கு சுதந்திரதின உரை

# அனைத்துக் கட்சிகளையும் புலிகளையும் இணக்கத்துக்கு வர ஜனாதிபதி அழைப்பு



## பட்டது போதும் என்கிறார்

கொழும்பு,பெப்ரவரி5

**இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு ஒன்றை எட்டும் முயற்சியில் கருத்து ஒற்றுமையும், இணக்கமும் காண தமது அரசியல் கோட்பாடுகளை மறந்து ஒன்றுபட்டு முன்வருமாறு சகல அரசியல் கட்சிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

**"இதுவரை நாம் பட்டது போதும் என்று கூறுவதற்கு உரிய தருணம் வந்துவிட்டது" என்று அவர் கூறினார்.**

**நாட்டின் 52 ஆவது சுதந்திரதினத்தை ஒட்டி நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய உரையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.**

அலரிமாளிகையில் முப்படைத் தளபதிகள் பிரசன்னமாக இருக்க ஜனாதிபதி இந்த உரையை ஆற்றினார். அவரது உரை ரூபவாஹினியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

(9ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கியப்பட்டுச் செயற்படுமாறு ரணிலும் அழைப்பு விடுக்கிறார்



கொழும்பு,பெப்.5

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சகல அரசியல் கட்சிகளும், அரசாங்கமும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அமரர் டி.எஸ். சேனநாயக்காவின் சிலைக்கு முன்பாக நேற்று நடந்த கட்சியின் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

நாட்டின் பிரதேச ஒற்றுமைப்பாட்டுக்கு சவால் விடுக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் இலங்கையர்கள் தமது மாறுபட்ட அரசியல் கருத்துக்களைக் கைவிட்டு செயற்படவேண்டியது அவசியம். இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக நாம் அரசாங்கத்துக்குப் பகிரங்கமாகவும், கடிதம் மூலமும் அறிவித்துள்ளோம். ஆனால் அரசாங்கமோ இதுவரை அது குறித்து பதில் எதனையும் தெரிவிக்கவில்லை.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அரசாங்கம் உட்பட அனைத்துத் தரப்பினரும் அரசியல் இலாபம் கருதாது செயற்படவேண்டும்.

(பத்தாம் பக்கம் பார்க்க)

## பயணிகள் சேவைக்கான கப்பல் இன்று திருமலைக்கு!

செஞ்சிலுவை வழித்துணையுடன் திருமலைக்கும் காங்கேசனுக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடவிருக்கும் ஜப்பான் நாட்டுக் கப்பல் கொழும்பிலிருந்து இன்று திருமலைத் துறைமுகத்துக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கப்பலின் தரம், தகைமை ஆகியன தொடர்பான பரிசோதனைகள் அங்கு இடம்பெறவிருக்கின்றன என்றும் -

கப்பலைச் சேவையில் ஈடுபடுத்தத் தேவையான ஆரம்பப் பணிகள் அங்கு இடம்பெறும் என்றும் - கூறப்பட்டது.

பெரும்பாலும் எதிர்வரும் 12ஆம் திகதி இந்தச் சேவை ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம் - இந்தக் கப்பலில் பயணம் செய்ய விரும்பும் பயணிகளைப் பதிவுசெய்யும் பணி இன்று திருமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தில் ஆரம்பமாகவிருக்கின்றது.

## விமான சேவை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.5

பலாலிக்கும் - கட்டுநாயக்கவுக்கும் இடையில் நடைபெறும் பயணிகள் விமான சேவையில் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை அடுத்து நாளை மறுதினம் தொடக்கம் வாரத்தில் மூன்று தினங்கள் மேலதிக சேவை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திங்கள், புதன், சனி ஆகிய தினங்களில் மட்டும் இந்த மூன்றாவது சேவை இடம்பெறும். (உ-3)

## அரச எம்.பியின் காவலர் இருவர் சுட்டுக் கொலை!

கொழும்பு,பெப்.5

அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான பாரதலக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மெய்ப்பாதுகாவலர்கள் இருவர் நேற்றுமுன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டி கொட்டியாவத்தையில் உள்ள எரிபொருள் நிலையத்தில் எம்.பியின் பஜிரோவில் வந்திறங்கிய எம்.பியின் பாதுகாவலர்களை ஓட்டோவில் வந்த இனந்தெரியாதோர் கலைத்துச் சென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் -

அதில் இந்திக என்ற பொலீஸ் கான்ஸ்டபிள் உட்பட இரு மெய்ப்பாதுகாவலர் உயிரிழந்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (உ-3-7)

## சுதந்திர தின நிகழ்வுகளில் ஜனாதிபதி, பிரதமர் இல்லை!

கொழும்பு,பெப்.5

கொழும்புஜெயவர்த்தனபுர நாடாளுமன்றத்துக்கு முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்ற சுதந்திரதின நிகழ்வுகளில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முப்படைத்தளபதிகள் பங்குபற்றவில்லை.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே ஜனாதிபதி மற்றும் பிரதமர் இந்நிகழ்வில் பங்குபற்றவில்லை எனக் கூறப்பட்டது.

அலரி மாளிகையில் இருந்தவாறு ஜனாதிபதி நாட்டுமக்களுக்கு உரையாற்றினார். அங்கு முப்படைத் தளபதிகளும் பொலீஸ்மா அதிபரும் பின்னணியில் பிரசன்னமாயிருந்தனர்.

இதுவரைகாலமும் நடந்த சுதந்திரதின விழாக்களில் நாட்டின் தலைவரும் முப்படைத்தளபதிகளும் பங்குபற்றாத முதலாவது நிகழ்வாக நேற்றைய வைபவம் அமைந்தது என்று செய்தி ஏஜென்சிகள் குறிப்பிட்டன.

அதேநேரம் - சபாநாயகர் கே.பி. ரட்னாயக்க தலைமையில் நாடாளுமன்றத்துக்கு முன் நடந்த நிகழ்வில் அரசியல்வாதிகள், இராஜதந்திரிகள் என இருநூறு பேர் வரையில் கலந்து கொண்டனர். (உ-க-3-7)

## பேச்சுக்கான முன்முயற்சியாக நோர்வே அமைச்சர் வருகிறார்!

கொழும்பு,பெப்.5

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்வதற்காக நோர்வே வெளிவிவகார அமைச்சர் நட்வெ வோபொன் அடுத்தவார முற்பகுதியில் - அடுத்து வரும் தினங்களில் - கொழும்பு வருகின்றார்.

ஒருவாரம் தங்கியிருக்கும் இவர் அரச மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள், அரசஉயர்மட்டத்தினர் ஆகியோருடன் ஆரம்பகட்டப் பேச்சுக்களில் ஈடுபடவிருக்கிறார். அதன்பின் ஐரோப்பிய நாடு ஒன்றில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை அவர் சந்தித்துப் பேசவும் ஏற்பாடாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அரசும் - புலிகளும் ஏப்ரல் மாதத்தில் நேரடியாகப் பேச்சு நடத்தக்கூடிய சூழ்நிலையை இவர் ஏற்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பலஸ்தீனம், பிலிப்பைன்ஸ், கௌதமாலா ஆகியநாடுகளில் நிலவிய உள்நாட்டுப்போருக்கு முடிவு ஏற்பட இவர் முன்னின்று பாடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுதந்திர தின நிகழ்ச்சிகள் வடக்கு - கிழக்கில் அமைதியாக!

இலங்கையின் 52 ஆவது சுதந்திர தினத்தை ஒட்டிய நிகழ்வுகள் வடக்கு - கிழக்கில் அமைதியாக நடைபெற்றன.

யாழ்.மாவட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நேற்றுக்காலை இடம்பெற்ற விசேட பூசையுடன் ஆரம்பமான நிகழ்ச்சிகளில் முதலில் செயலக முன்றலில் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. அதன் பின்னர் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. மரநடுகை, சிரமதானம் ஆகியவையும் இடம்பெற்றன.

வவுனியா செயலகத்தில் நடந்த நிகழ்வில் அரசஅதிபர் கே.கணேஷும் மட்டக்களப்பில் கொட்டும் மழையில் இடம்பெற்ற நிகழ்வில் அரச அதிபர் ஆர்.ரி.பத்மநாதனும் தேசியக் கொடியை ஏற்றினர்.

திருமலையில் மாகாண ஆளுநர் அசோகா ஜெயவர்த்தனா தேசியக் கொடியை ஏற்றினார்.

### பகிஷ்கரிப்பு

ஊவா மாகாணசபையில் இடம்பெற்ற சுதந்திரதின வைபவ நிகழ்வுகள் தமிழில் நடைபெறாததை ஆட்சேபித்து இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினர் பி.வி.சென்னன், மாகாண அமைச்சர் எம்.சச்சிதானந்தன் ஆகியோர் அந்த வைபவத்தைப் பகிஷ்கரித்தனர்.

நிகழ்வுகளைத் தமிழில் நடத்த இணக்கம் ஏற்பட்டிருந்த போதும், அது இறுதி நேரத்தில் கைவிடப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

### ஷெல் தாக்குதல்

வவுனியா நகரத்தில் இருந்து இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகள் நோக்கி நேற்றுமுதல் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டுவருவதாகக் கூறப்பட்டது.

## மாணவன் உட்பட இருவர் திருமலைக் கடலுக்குப் பலி

திருகோணமலைக் கடலில் நேற்று முன்தினம் மாலை குளிக்கச் சென்ற மூன்று இளைஞர்களில் மாணவன் ஒருவன் கடலில் மூழ்கி உயிரிழந்தான்; ஒருவர் மீட்கப்பட்டார்; மூன்றாவது இளைஞனைக் காணவில்லை. அவர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்பட்டது.

சின்னியாவைச் சேர்ந்த ஸெரப்டீன் மனாஸ் என்ற - திருமலை இந்துக்கல்லூரியில் தரம் பத்தில் கல்வியயிலும் - மாணவனே உயிரிழந்தவனாவான்.

தமது இரு நண்பர்களுடன் கடலில் குளிக்கச் சென்ற சமயமே இந்த வியரீதத்தில் மாணவன் சிக்கினான்.

ஏனைய இருவரில் ஒருவர் மீட்கப்பட்டு திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-3)

### கைதிகள் விடுவிப்பு

சுதந்திர தினத்தை ஒட்டி ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் சிறைச் சாலைகளில் இருந்து ஆயிரத்து 700 சிறைக்கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ்.சிறைச்சாலையில் இருந்தும் ஒரு பெண்கைதி உட்பட மூன்று கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

## நன்றி தெரிவிக்கின்றோம்

உரும்பிராயைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராஜா வளர்மதி அவரின் மகள் பிரியா (வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) மகன் வினோத் (உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்) ஆகியோரை விடுவிக்க முயற்சி செய்த யாழ். மாவட்ட மாணவர் சமூகத்திற்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவகுலவீதி,
உரும்பிராய் மேற்கு.

T.கோமதி
(சகோதரி)

(73403)

## கண்ணீர் அஞ்சலி

### கந்தையா திருஞானம்

(ஓய்வுபெற்ற அஞ்சலர், தபாலகம் அளவெட்டி)

என்னை வாழவைத்த அன்புத் தெய்வத்தின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தவருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைக் காணிக்கையாக்கி ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றேன்.

ப. உதயகுமார்
(செய்தியாளர்-உதயன்)
அளவெட்டி வடக்கு

(73394)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
சிவஞான வைரவர் ஆலய பாலஸ்தாபன

## அபிஷேகம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வளாகத்தினுள் அமர்ந்து அருள்பாலிக்கும் சிவஞான வைரவமூர்த்திக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன அபிஷேகம் 07-02-2000 ஆம் ஆண்டு திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணிமுதல் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அடியார்கள் யாவரும் கலந்து அருள்பெற்றுய்யவும்.

(C/10934) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## மங்களகரமான திறப்புவிழா

### நகுலேஸ்வரி தொலைத் தொடர்பகம்

வடமராட்சி கிழக்கு
அம்பன், குடத்தனை

*07-02-2000 திங்கள் நண்பகல் 12 மணிமுதல் 2 மணி வரையுள்ள சுபவேளையில் மேற்படி தொலைத் தொடர்புச் சேவையை ஆரம்பிக்க உள்ளோம்.*

உள்ளூர் இலக்கம் 070-213002
சர்வதேச இலக்கம் 0094-70213002


உற்றார், உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்றைய தினம் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

*நகுலேஸ்வரி அரைக்கும் ஆலை,
வடமராட்சி கிழக்கு,
அம்பன், குடத்தனை.*

மு. நகுலராசா,
பா. கிரிதா
குடும்பத்தினர்.

(73395)

## ஆண்டிரண்டுத் திதியின்று



மலர்வு 28 - 08 - 1961

உதிர்வு 28 - 01 - 1998

அமரர்

### தருமலிங்கம் சத்தியசீலன்

(வ.கி.தெ. பகுதி ப.நோ.கூ. சங்க முன்னாள் கிளை முகாமையாளர்)

பாசத்தோடு அரவணைத்து
பண்போடு எம்மை வளர்த்த
அன்புத் தந்தையே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் இரண்டு என்ன
ஆயிரம் தான் கடந்தாலும்
உங்களின் பாசமிகு நினைவலைகள்
எம்மை விட்டு அகலாது!

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும

நாவலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

மனைவி, பிள்ளைகள்.

(73390)

## நாளை

தை - 23
ஞாயிற்றுக்கிழமை
திதி – பிரதமை
முன்இரவு 8.07 வரை
நட்சத்திரம்:– அவிட்டம்
முன்இரவு 10.47 வரை
சுபநேரம்:– 9.35–11.05
ராகுகாலம்:– 5.05–6.35
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## பொதுக்கூட்டம்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## புத்தாயிரம் ஆண்டை வரவேற்கும் நிகழ்ச்சி

"அபிவிருத்திப் பொருளியல்" சஞ்சிகை வெளியீட்டு நிதிக்காக யாழ். பல்கலைக்கழக இளம் பொருளியலாளர் மன்றம் வழங்கும் "வெல்கம மிலேனியம ஷோ" நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் காலை 10 மணிக்கும் பிற்பகல் 2.30 மணிக்கும் இரு காட்சிகளாக இடம்பெறவுள்ளது.

## நூல்வெளியீடு

அருள்திரு அன்ரன் மத்தாயஸ் எழுதிய "இன்றைய உலகில் நாம்" எனும் நூலின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 4மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள மறைக்கல்வி நிலையத்தில் கவிஞர் யாழ். ஜெயம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.ஆயர் பேரருட் திரு. தோமஸ்சவுந்தரநாயகம் அடிகளார் ஆசியுரை வழங்கி நூலை வெளியிட்டு வைப்பார்.

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், தென் இந்தியத் திருச்சபை யாழ். பேராயர் பேரருட்திரு. சு.ஜெபநேசன் அடிகளார் ஆகியோர் ஆய்வுரையினை நிகழ்த்துவர். (க)

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாராவின்
கோழிப்புரியாணி,
பிறைட் றைஸ்,
நூடில்ஸ்
ரூபா 95
ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஒழுங்கை)
சுண்டுக்குளி.
(C/109121)

ராஜா
யாழ்ப்பாணம்
ரசிகர்களே!
கடைசி வாரமாக
அஜித் – சிம்ரன்
மற்றும் பலர் நடித்த
அவள்வருவாளா?
10.30, 2.00, 5.00
(C/10925)

லிபேட்டி
அச்சுவேலி
விஜய், சாலினி நடித்த
கண்ணுக்குள் நிலவு
(புதிய வெளியீடு)
காட்சிகள் –
10.30 – 2.30
T.P. No. 070-212223
070-212678
(C/10931)

நாகம்ஸ்
சுன்னாகம்
கடைசிவாரம்
சரத்குமார், தேவயாணியின்
சூரியவம்சம் (ரீல்ஸ்)
காட்சிகள்:- 10.30, 2.30
(புதிய நேரம்)
(C/10935)

## விளக்கமளிக்க இளைஞனுக்கு உத்தரவு

இளம் பெண் ஒருவரை கையில் பிடித்திழுத்து பலாத்காரம் செய்ய முயன்றதாக குற்றம்சாட்டப்பட்டுயாழ். நீதிமன்றில் நேற்றுமுன்தினம் ஆஜர் செய்யப்பட்ட இளைஞரை இது தொடர்பான விளக்கத்தை மார்ச் 15 ஆம் திகதி நீதிமன்றில் தோன்றி தெரிவிக்குமாறு நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

புத்தூரைச் சேர்ந்த செல்லையா தஜீதரன் என்ற இளைஞரே மேற்படி குற்றச்சாட்டு தொடர்பாக கைதுசெய்யப்பட்டு தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா சின்னத்துரை

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடாவை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய செல்லையா சின்னத்துரை 3-02-2000 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இரத்தினம்மாவின் (திரவியம்) அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான குணரத்தினம்மா, சண்முகநாதன் மற்றும் நவமலர்தேவி (கோண்டாவில்), கைலாயநாதன் (கொக்குவில் மேற்கு) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5-2-2000) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
சி. கைலாயநாதன்
(மகன்)

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(73396)

### கணபதிப்பிள்ளை பாக்கியரெத்தினம்

சரவணை மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பாக்கியரெத்தினம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் கமலாதேவி, செல்வமணி, [illegible]வமணி வசந்தா ஆகியோரின் அன்புத்தாயாரும், பாக்கியநாதன், கைலாசபிள்ளை (A.P.C. வேலணை), கந்தசாமி (வவுனியா), அருந்தவராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொற்பதி வீதியில் உள்ள மருமகன் கைலாசபிள்ளையின் இல்லத்தில் இன்று (5-2-2000) சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
இ. கைலாசபிள்ளை
(மருமகன்)

பொற்பதிவீதி,
கொக்குவில்.

(73389)

### கந்தையா திருஞானம்

(ஓய்வு பெற்ற அஞ்சலர், தபாலகம் - அளவெட்டி)

அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா திருஞானம் நேற்றுக் காலை மரணமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா - தவமணியின் அன்பு புதல்வனும், இந்திராவின் அன்புக் கணவரும் ரஜனி, ஜெகஜெனனி காலஞ்சென்ற ஜெயந்தி, மனாதீபன் (மாணவன் - அருணோதயாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராஜா, மகாதேவன் ஆகியோரின் அன்பு மாமனும் குணரத்தினம், கண்ணுத்துரை (ஓய்வு பெற்ற சாலைப் பரிசோதகர் இ.போ.ச - யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற மல்லிகாதேவி மற்றும் இந்திராணி, சரோஜினிதேவி ஆகியோரின் சகோதரனும் தேவி, சரஸ்வதி (ஓய்வு பெற்ற தாதியர் உத்தியோகத்தர் போதனா வைத்தியசாலை யாழ்). உமாபதி சிவம் காலம்சென்ற கதிரவேலு காலம்சென்ற வேலாயுதம் ஆகியோரின் மைத்துனரும் நீரஜா, கௌரீசன், சிந்துஜா, திருவரதன் ஆகியோரன் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் அளவெட்டி மேற்கு கொட்டுப்பனை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
தி.மனாதீபன்(மகன்)

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

(73393)

### பொன்னம்பலம் சந்திரசேகரம்பிள்ளை

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் பொன்னம்பலம் சந்திரசேகரம்பிள்ளை 02.02.2000 புதன்கிழமை அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் காலம்சென்ற ஆசிரியை இராசம்மாவின் அன்புக்கணவரும் சிறிகரன் (அமெரிக்கா), யோகராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரமி (அமெரிக்கா), சந்திரகுமாரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், பிரியதர்சனி, கார்த்திகாயினி, தட்சாயினி, சித்தார்த்தன், சுகந்தினி ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2000) சனிக்கிழமை நியூயோர்க் நேரப்படி நண்பகல் 12.00மணிக்கு அமெரிக்காவில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
பேராசிரியர் க.குணரத்தினம்
(மைத்துனர்)

கோண்டாவில் மேற்கு

(73388)

### மாதர் கந்தையா

மாதகலைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் ராஜகாரியர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாதர் கந்தையா அவர்கள் நேற்று வெள்ளிக் கிழமை (04-02-2000) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும், இராசையாவின் மைத்துனரும், நாகேஸ்வரி, யோகமலர், துரைசிங்கம் (வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தந்தையும், ஐயம்பிள்ளை, தம்பித்துரை, விஜயசிங்கம்(ப.நோ.கூ.ச.பண்டத்தரிப்பு), விஜயராணி, விமலா, விஜயகுமாரி ஆகியோரின் மாமனும் சிறிதரன், சிறிவரதன், சிறிகாந்தன் (பிரான்ஸ்), சிறிமோகன், ஜெயந்தி சிவம், சகுந்தலா, பிறேமினி, சிவகுமார், சிவரூபன், சர்மிலா, சுரேஸ், சுபாஜினி, சுகிர்தினி, சயந்தினி, சாரங்கன், துவாரகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (05-02-2000) சனிக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க.துரைசிங்கம
(மகன்)

இராஜகாரியர் வீதி,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

(73405)

# தேவையான மருந்து வகை வரவில்லை

# ஆஸ்பத்திரிகளில் தட்டுப்பாடு நீடிப்பு

யாழ்ப்பாணம், பெப்.5

நேற்றுமுன்தினம் வந்த செஞ் சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கப்பலில் யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் யாழ். மத்திய மருந்தகம் ஆகியவற்றிற்கு தேவையான மருந்து வகைகள் எடுத்துவரப் படவில்லை. இதனால் யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்து ஆஸ்பத்திரிகளிலுமே மருந்துத் தட்டுப்பாடு நீங்காதநிலை நீடிக்கிறது.

இக்கப்பலில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு 50 ஒட்சிசன் சிலிண்டர்கள் மட்டுமே எடுத்துவரப் பட்டுள்ளன. வழமையை விட குறைந்த எண்ணிக்கையில் இவை வந்துள்ளதால் ஒட்சிசன் சிலிண்டர்களும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பாவிக்கவேண்டிய அவசியம் ஆஸ்பத்திரிக்கு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை - யாழ். குடாநாட்டு வைத்தியசாலைகள் அனைத்திலும் ஏற்புத்தடை ஊசி மருந்துக்கான தட்டுப்பாடு நீடிக்கிறது. (ஜ-15)

## குழந்தைகள் பராமரிப்பு நிலையம்

யாழ். மாவட்ட மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தின் தென்மராட்சிப் பிரிவினர் குழந்தைகள், முதியோர் பராமரிப்பு நிலையத்தினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர். குழந்தைகளை பகலில் பராமரிப்பதற்கும், முதியோர்களை அந்தந்த வீடுகளில் வைத்து பராமரிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் தென்மராட்சி பிரிவுத் தலைவி திருமதி செ. யோகரத்தினம் தெரிவித்தார். (ஜ-117)

கூட்டுறவுச் சங்கங்களின்

# இயக்குநர்களுக்கான படி 600 ரூபாவாக அதிகரிப்பு

அரியாலை, பெப். 5

கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர்சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் இயக்குநர்களுக்கான படி மாதம் ஒன்றிற்கு 600 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

வடக்க- கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி க. சிவசிதம்பரம் சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கை மூலம் இதனை அறிவித்துள்ளனர்.

இயக்குநர் சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் இயக்குநர்கள் ஒரு கூட்டத்திற்கு 200 ரூபா வீதம் மாதம் ஒன்றிற்கு 600 ரூபாவுக்கு உட்பட்ட படியை பெற்றுக்கொள்ள முடியும்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், இரண்டாம்படிக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் இயக்குநர்களுக்கே இந்த மாதாந்தப் படி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இப் படியினைப் பெறுவதற்கு குறைந்தது இரண்டு மணித்தியாலங்களாவது இயக்குநர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதோடு கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் செயற்படவேண்டும். அத்துடன் இயக்குநர் தமது பிரயாணச் செலவையும் பெற்றுக் கொள்வதோடு சொந்த வாகனம் வைத்திருப்பவர் ஒரு கிலோ மீற்றருக்கு 2ரூபா பெற்றுக் கொள்ள முடியும் என்றும் இப்படியினை சங்கத் தலைவரும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஜ-17)


## பிறந்த நாள் வாழ்த்து

**திரு. கந்தையா அருந்தவராஜா**
(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

புத்தம் புதிதாய் பூத்த மிலேனியம் ஆண்டில் தனது 32 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் இன்று (05-02-2000) இவரை சகல சீரும் சிறப்பும் பெற்று கற்பகதருவாய் பல்லாண்டு காலம் வாழ்க, வாழ்க என வாழ்த்துகின்றோம்.

புதுறோட்,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை

மருமக்கள்-
த.மயூரன், வை. அகஸ்திகா,
ர. பிருந்தன்

(73382)

## விற்பனைக்கு

அர்ஜுனாவின் மாணவர் தேசப்படப்புத்தகம் யாழ்ப்பாணத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.
விலை:- 225 ரூபா மட்டுமே

கிடைக்குமிடம்:~
இல. 23, கச்சேரி நல்லூர்வீதி,
(கச்சேரி பஸ்நிலையம் முன்பாக)
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(73375)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சகமாணவி உலகநாதன் உமிலாதேவி அவர்களின்
அன்புத் தந்தையாரான
**அருணாசலம் உலகநாதன்**
அவர்களின் 31 ஆவது நினைவுநாளில் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

4 ஆம் வருட B பிரிவு
மாணவர்கள்
இந்துநாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(73358)

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 - 08 - 1932



மறைவு 05 - 02 - 1999

**திருமதி அன்னம்மா தனேஸ்வரன்**
(இளைப்பாறிய ஆசிரியை, கோண்டாவில்)

திதி: 25-01-2000

எங்கள் குலதெய்வமாகத் தோன்றி வழிகாட்டி, வாழ்வளித்த அன்பின் உறைவிடமே! ஆண்டொன்று போன்று எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்திடினும் தங்கள் திருவுருவும் பாச நினைவுகளும் எங்கள் நெஞ்சங்களில் என்றென்றும் நீங்காது நிலைத்திருக்கும். தோன்றாத் துணையாக இருக்க இறைவனை வேண்டுகின்றோம். தங்களது ஆத்ம சாந்திக்காகவும் இறைஞ்சுகின்றோம்.

கணவர், சகோதரன், மக்கள்,
மருமக்கள், பேரமக்கள், உறவினர்கள்.

தகவல்:-
திருமதி பூங்கோதை சிவராஜா,
முகத்துவாரம்.

(C/10922)

சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

*நிகழும் சுபமங்களகரமான பிரமாதி வருஷம் தைத்திங்கள் 22 ஆம் நாள் (05-02-2000) சனிக்கிழமை மாலை 5.10 மணிமுதல் 6.30 மணிவரையுள்ள அவிட்ட நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்*

கோண்டாவில் மேற்கு
திரு.திருமதி V.K. கானமூர்த்தி (நாதஸ்வரவித்துவான்)
தம்பதிகளின் புத்திரன்
திருநிறை செல்வன்
**கண்ணதாசன்** (தவில் வித்துவான்)
அவர்களுக்கும்

மட்டக்களப்பு
திரு. திருமதி S. முருகமூர்த்தி
தம்பதிகளின் புத்திரி
திருநிறை செல்வி
**நவநந்தினி**
அவர்களுக்கும்

*இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்யதாரணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

வைபவ இடம்:- ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம்
Siegenbeck Str.4, 59071 Hamm-Uentrop,Germany. Tel. 02382/302223

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி V.K. கானமூர்த்தி குடும்பத்தினர்
(நாதஸ்வர வித்துவான்-இலங்கை)
ஸ்ரேசன்வீதி, கோண்டாவில்.

திரு. திருமதி மதிவாணன் குடும்பத்தினா
(நாதஸ்வரவித்துவான் - பாரிஸ்)

திரு. திருமதி ராம்குமார் குடும்பத்தினர் (இலங்கை)

* இருவீட்டார் அழைப்பு

(73331)

## மானிப்பாய் மெடி கிளினிக்

## திறப்பு விழா

(மானிப்பாய் சுகாதார சமூக சுற்றாடல் விவகாரச் சபை ஆதரவில்)

இடம்:- 'திருத்தணிகை', யாழ்வீதி, மானிப்பாய்.

காலம்:- 07-02-2000 திங்கள் பிற்பகல் 3.30 மணி (இ.நே)

தலைவர் – திரு. இரா. வசந்தசேனன் சட்டத்தரணி அவர்கள்
(மேற்படி சபைத் தலைவர்)

பிரதம விருந்தினர் - யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி
மாண்புமிகு இ. த. விக்னராஜா அவர்கள்

சிறப்பு விருந்தினர்கள் –

* திரு. A.C. செபநாயகம் அவர்கள்
இணைப்பதிகாரி (வடக்கு-கிழக்கு மாகாணம்)
* திரு. ஆ. மகாலிங்கம் அவர்கள்
சண்டிலிப்பாய் பிரதேச செயலரும், மேலதிக அரசாங்க அதிபரும்
* வைத்தியக்கலாநிதி இ. தெய்வேந்திரம் அவர்கள்
பிரதம சுகாதார வைத்திய அதிகாரி, யாழ் மாநகரசபை)
* வைத்தியகலாநிதி சிவராணி சிவஜோதி அவர்கள்
(மாவட்ட வைத்திய அதிகாரி தெல்லிப்பழை)
* திரு. சி. பத்மநாதன் ஜே. பி அவர்கள்
முன்னாள் யாழ். பிராந்திய பொறியியலாளர், மானிப்பாய் பரிஷ் பிராந்திய சபை (306B) லயன்ஸ் கழக தலைவரும் ஆலோசகரும்)
* திரு. S. சிவஞானம் அவர்கள்
ஓய்வுபெற்ற அரச அதிபர், வவுனியா.

வரவேற்புரை – திரு. த. சிதம்பரநடராசா அவர்கள்
மேற்படி சபை உபதலைவரும் மானிப்பாய். மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தாவும்

நன்றியுரை – திரு. இ. வல்லிபுரம் ஜே.பி. அவர்கள்
ஓய்வுபெற்ற அதிபரும், 'சபைச் செயலரும்

அனைவரும் வருக,
மானிப்பாய் மெடி கிளினிக் வளர நல்லாதரவு தருக

'திருத்தணிகை'
யாழ். வீதி, மானிப்பாய்.

இயக்குநர் சபை
சுகாதார சமூக சுற்றாடல் விவகாரச் சபை,
மானிப்பாய்.

(C/10889)

UNOPS

இதழ் :10

February 2000

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடான ஐக்கிய நாடுகள் திட்ட சேவைகள் அலுவலகம்

## கண்ணிவெடி விழிப்புணர்வுத் திட்டம்

### பாடசாலை மட்டத்திலான கண்ணிவெடி விழிப்புணர்வு நிகழ்வுகள்

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு கண்ணிவெடி தொடர்பான விழிப்புணர்வை வழங்கும் நோக்குடன் வலயக் கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் வகுப்பாசிரியர்கள் மூலமாக மாணவர்களுக்கு கண்ணிவெடி விழிப்புணர்வை வழங்கும் செயறதிட்டம் ஒன்றினை UNOPS/JRRP யின் கண்ணிவெடி விழிப்புணர்வுக் குழுவினர் தை மாதம் ஆறாந் திகதி தொடக்கம் செயற்படுத்தி வருகின்றனர்.

இத்திட்டத்திற்காக மொத்தம் 85 பாடசாலைகள் வலயக் கல்விப்பணிப்பாளர்களினால் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் கண்ணிவெடி விழிப்புணர்வை மாணவர்களுக்கு வழங்குவதற்கான கலந்துரையாடல்கள் வகுப்பாசிரியர்களுடன் நடாத்தப்பட்டு, பின்னர் அவ்வகுப்பாசிரியர்கள் கண்ணிவெடி விழிப்புணர்வை தமது பாடவேளையின் போது மாணவர்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். மேலும் இத்திட்டத்தில் ஆசிரியர்கள், மாணவர்களுக்கு கண்ணிவெடி விழிப்புணர்வை வழங்கிய பின் இத்திட்டத்தில் பங்குபெறும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் கல்வித் திணைக்களத்தினால் கண்ணிவெடி விழிப்புணர்வு தொடர்பான பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டு பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில்



அருணோதயாக் கல்லூரியில் UNOPS/JRRP இன் கண்ணிவெடி விழிப்புணர்வுக் குழுவின் அங்கத்தவர் ஒருவர் ஆசிரியர்களுக்கு கண்ணிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடாத்துவதைப் படத்தில் காணலாம்.

சிறந்த பரிசில்கள் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பாடசாலைகளுக்கும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள் யாவும் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பரீட்சை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### கண்ணிவெடி விழிப்புணர்வு நாடகப்போட்டி

பாடசாலை மட்டத்திலான கண்ணிவெடி விழிப்புணர்வின் மற்றுமொரு நடவடிக்கையாக கண்ணிவெடி விழிப்புணர்வு தொடர்பான நாடகப் போட்டி ஒன்றினை யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்குமிடையில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. போட்டி நடாத்தப்படும் காலம், போட்டி தொடர்பான விதிகள், போட்டிக்கான பரிசில்கள் போன்ற விபரங்கள் வலயக் கல்விப்பணிப்பாளர்கள் ஊடாக அந்தந்த வலயங்களில் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இப்போட்டியானது முதலில் வலயமட்டத்திலும் பின்னர் மாவட்ட மட்டத்திலும் நடைபெறும். வலயமட்டத்தில் முதலிடம் பெறும் பாடசாலைகளுக்கு பரிசில்களும், மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று நாடகங்களுக்கு வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்படும்.

### உங்களுக்குத் தெரியுமா?

* இன்று உலகில் சுமார் 600 க்கும் மேற்பட்ட வகையான வெவ்வேறு பெயர் கொண்ட மிதிவெடிகள் உண்டு.
* மிதிவெடிகள் வட்டம், உருளை, சதுரம், நீள்சதுரம் போன்ற பல வடிவங்களில் காணப்படுகின்றன.
* கறுப்பு, பச்சை, சாம்பல், கபிலநிறம் அல்லது மேற்குறிப்பிட்ட நிறங்களின் சேர்க்கை ஆகிய நிறங்களை மிதிவெடிகள் கொண்டுள்ளன ஆனால் மிதிவெடிகள் மண்ணில் புதைக்கப்பட்டதும் அதன் நிறம் மண்ணின் நிறத்திற்கேற்ப மாறுபடக் கூடியது.
* உலோகம், பிளாஸ்ரிக், மரப்பலகை இவை பொதுவாக மிதிவெடிகளின் மேல் கவசங்களாகும்.
* மிதிவெடிகளில் தனிநபர் எதிர்ப்பு (Anti personnel) மிதிவெடிகள், தாங்கி எதிர்ப்பு (Anti tank) மிதிவெடிகள் என இரு பிரதான வகைகள் உண்டு.
* ஆசியாவில் முந்நிலை வகிக்கும் மிதிவெடி உற்பத்தி நாடுகள் சீனா, பாகிஸ்தான், சிங்கப்பூர் ஆகும்.

### கண்ணிவெடிக் கவிதைகள்



கடந்த மாதம் UNOPS/JRRP யின் கண்ணிவெடி விழிப்புணர்வு இதழில் வெளியிடப்பட்ட மேலே உள்ள படத்திற்கு வாசகர்களால் எழுதி அனுப்பப்பட்ட பொருத்தமான பல கவிதைகளில் தெரிவு செய்யப்பட்ட மூன்று சிறந்த கவிதைகளை கீழே தருகின்றோம். கவிதைகள் சிறுகதைகள் வரைந்து அனுப்பிய அனைத்து வாசகர்களுக்கும் எமது நன்றிகள்.

### UNDP யிடம் கேட்டுப்பாரும்

எங்கிருந்து வந்தீர்
எங்குதான் போகிறீர்
கருடருக்குப் பயந்து வந்தீரோ
பாதைதான் மாறினீரோ
இருக்க வேண்டிய இடமும் இதுவல்லவே
பாவம் நீர்
ஆண்டவன் கழுத்து என நினைத்தீரோ
அட, தெரியாது போலும்
தமிழரிடம் கேட்டுப்பாரும்
பெரும் விரிவுரை நடத்துவார்கள்
தயவு செய்து சென்றுவிடும்
வெடித்துவிட்டால்
நான்தான் பொய் சொல்வேனா
நம்பவேண்டாம் விடும்
பக்கத்தில்
UNDP யிடம் கேட்டுப்பாரும்
தூரமா
சனிக்கிழமை சஞ்சீவியாவது பாரும்
கவனம் மிதிவெடிகள்.

ச.எட்வின், திருநெல்வேலி

### அர்த்தமுள்ள ஒற்றுமைகள்

சீர்தூக்கிப் பார்க்கையிலே
பாம்புக்கும் எறிகணைக்கும்
பல விதத்தில் ஒற்றுமைகள்
அத்தனை ஒற்றுமையும்
அர்த்தமுள்ள ஒற்றுமைகள்

தீண்டாத வரையினிலே இரண்டும்
எமக்கு
தீங்கு பயப்பதில்லை
அவற்றை சீண்டாத வரையினிலே – உயிருக்கு
அழிவுதான் ஏதுமில்லை

சிலசமயம் இரண்டும்
எம்மைத்
தேடிவந்து தாக்கும்
அத்தாக்குதலில் நாம் காயப்படநேரும்
சில சமயம் உயிர்பிரிந்தும் போகும்.

ஆயினும்,
நாம் விழிப்புணர்வு கொண்டிருந்தால்
இவற்றால் தீங்கேதும் வருவதில்லை – ஆதலால்
இவைகுறித்து விழிப்புணர்வு கொண்டிருப்போம்.

தாரிணி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி

### மானிடனே

மானிடனே உனக்கு ஓர் வேண்டுகோள்
என்னை அடித்தால் - நான் இறந்து விடுவேன்
நான் சுற்றியிருப்பவனை அடித்தால் - நீ இறந்து விடுவாய்
நான் கொத்தினால் - உன் உடல் மிஞ்சும்
அவன் வெடித்தால் -உன் உடல் சிதறும்
நான் விஷம் - அவனோ வெடி
என்னை அடிப்பது போல் அவனையும் அடித்திடாதே

கௌரி, பளை



பாதுகாப்பான பாதையை விட்டு விலகி பழம் பொறுக்க
அல்லது வேறு பொருட்களை எடுக்கச் செல்லுதல்
ஆபத்தானது அவதானமாக இருங்கள்

### அழகான பொருட்களினால் ஆபத்து

சிறுவர் சிறுகதை

ஓர் ஊரில் எழிலன் என்றொரு சிறுவன் இருந்தான். அவன் மிகவும் திறமைசாலி. அறிந்தே செயற்படுவான். அவன் சினேகிதர்களுடன் சேர்ந்து விளையாடுவது வழக்கம்.

ஒருநாள் வழமையாக விளையாடும் பொழுது அவர்கள் விளையாடிய பந்து குப்பை மேட்டில் விழுந்து விட்டது. அதை எடுப்பதற்காக சிறுவனொருவன் சென்றான். அப்பொழுது அந்த குப்பை மேட்டினுள் ஒரு அழகான பொம்மை போன்ற பொருள் ஒன்று தலையை அசைத்துக் கொண்டு கிடந்தது. அதைக் கண்ட அந்தச் சிறுவன் மகிழ்ச்சியோடு மற்ற சினேகிதர்களை கூவி அழைத்தான். எல்லோரும் ஓடி வந்து பார்த்தார்கள். ஒரு சிறுவன் அதை எடுக்கச் சென்றான். அப்பொழுது எழிலன் அதைத் தொடாதே என்று கத்தினான்.

சினேகிதர்கள் எல்லோரும் ஏன் என்று அவனை வியப்புடன் கேட்டார்கள். அதற்கு எழிலன் அது மிதிவெடியாக அல்லது ஏதும் வெடிக்கத்தக்க பொருளாக இருக்கலாம் அதை எடுத்தால் அது வெடித்து நமக்கு பாதிப்புக்கள் வரலாம் 'என்று அமைதியாக பதிலளித்தான். எல்லோரும் அவன் சொன்னதைக் கேட்டு அதைத் தொடவில்லை. ஆனால் குமார் என்ற குறும்புப் பையன் அவன் கூறியதைப் பார்த்து கைதட்டிச் சிரித்தான். எல்லோரும் அவன் பக்கம் திரும்பினர்.

நான் இதைப்போல எத்தனையோ அழகான பொருட்களைக் கண்டிருக்கின்றேன். அவற்றை எடுத்தும் இருக்கின்றேன். அவை ஒன்றும் வெடிக்கவில்லை. இதுவோ வெடிக்கப் போகின்றது என்று கூறிக் கொண்டு அந்தப் பொம்மையை எடுக்கச் சென்றான்.

உடனே மற்ற சினேகிதர்கள் அவனை எடுக்கவிடாது தடுத்தனர். அவனுக்கு எவ்வளவு சொல்லியும் கேட்பதாக இல்லை. அந்த முரட்டுச் சிறுவன் அவர்களைத் தாக்கினான். ஆனால் அவர்கள் அவன் தாக்கியதையும் பொருட்படுத்தாமல் அவனைத் தடுத்தனர். என்றாலும் அவனைத் தடுக்க முடியவில்லை. எனினும் இடைவிடாது முயற்சி செய்தார்கள் "முயற்சி திருவினையாக்கும் அல்லவா" இறுதியில் அந்தச் சிறுவனை மடக்கிப் பிடித்துக்கொண்டார்கள்.

இதற்கிடையில் எழிலன் வீதிக்கு ஓடினான். வீதியில் நடந்து வந்து கொண்டிருந்த ஒரு பெரியாரிடம் நடந்தவற்றைக் கூறினான். உடனே பெரியவர் அந்த இடத்திற்கு விரைந்து சென்று குமாருக்கு மிதிவெடி பற்றிய புத்திமதிகளைக் கூறினார். பெரியவரின் புத்திமதிகளைக் கேட்ட குமார் தான் செய்தது பிழை என்று ஒப்புக் கொண்டு தனது சினேகிதர்களிடம் மன்னிப்புக்கேட்டான்.

பின்னர் பெரியவர் எழிலனை புகழ்ந்து பேசி, மற்றச் சிறுவர்களைப் பார்த்து நீங்கள் உங்களுடைய இடத்திற்குச் சென்று சந்தோஷமாக விளையாடுங்கள். இந்தப் பக்கத்திற்கு வரவேண்டாம் என்று கூறி அந்த இடத்தில் ஓர் அடையாளத்தை இட்டார். பின்னர் அண்மையில் உள்ள காவலரணுக்குச் சென்றார்.

அழகான பொருட்களை எடுத்தால் ஆபத்து வரலாம் ஏனென்றால் அது மிதிவெடியாக அல்லது வெடிக்கத்தக்க பொருளாக இருக்கலாம்.

கோ.துஷியந்தன் கைலாசபிள்ளையார் கோவில் பின்வீதி நல்லூர்

மிதிவெடி விழிப்புணர்வு சம்பந்தமான ஆக்கங்களை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி:
கண்ணிவெடி செயற்திட்ட மையம்
யாழ் புனர்வாழ்வு மீள்குடியேற்ற நிகழ்ச்சித் திட்டம் (JRRP), கச்சேரி, யாழ்ப்பாணம்.

# பதினொரு தொழிற்சங்கங்கள் இணைந்து செயற்பட முடிவு

வலி வடக்கு, பெப். 5

பொது இலக்கின் நோக்கில் 11 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து செயற்பட முடிவு எடுத்துள்ளன.

நல்லூர் முத்திரைச் சந்தைக்கு அருகில் உள்ள சாதனா பாடசாலையின் இ.தவராசா தலைமையில் தொழிற் சங்க உறுப்பினர்களுக்கான கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நவலங்கா தொழிலாளர் சங்கம், லங்கா சிமெந்து நிறுவன கிளையைச் சேர்ந்த பொதுத் தொழிலாளர் சங்கம், இலங்கை வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம், சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன், வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்க பொது சிற்றூழியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம், அகில இலங்கை தபால் தந்தி ஊழியர் சங்கம், உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம், ஆனையிறவு உப்புக்கூட்டுத்தாபன ஊழியர் நலன்புரிச்சங்கம், ஸ்ரீலங்கா சுதந்திர தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம் ஆகியன ஒன்றிணைந்துள்ளன.

இச்சங்கங்கள் யாவும் ஒன்றிணைந்து வடபிராந்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு என்ற பெயரில் செயற்படவுள்ளன.

கூட்டத்தில் இத் தொழிற்சங்கத்துக்கான யாப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தலைவராக இ.தவராசாவும் செயலாளராக சா.தியாகலிங்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.(ஐ-86)

## தென்மராட்சியில்

# 500 மாணவருக்கு முறைசாராக் கல்வி

தென்மராட்சி, பெப்.5

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 17 பாடசாலைகளில் முறைசாராக் கல்வி பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கணனிப்பயிற்சி, தட்டெழுத்து சுருக்கெழுத்து, (தமிழ்) மோட்டார் வாகனம் திருத்துதல், உடையமைத்தல் வீட்டு மின்னிணைப்பு போன்ற பயிற்சிகளை நடத்த இரண்டு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலைகளை விட்டு வெளியேறிய 500 மாணவர்களுக்கு இப்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக முறைசாராக் கல்விப் பிரிவு பணிப்பாளர் வீ.கே.பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (ஐ-117)

# பழங்கள் பதனிடும் தொழிற்சாலை

## சாவகச்சேரியில் அமைக்கப்படும்

தென்மராட்சி, பெப்.5

உலக பட்டினி ஒழிப்பு இயக்கத்தினர் சாவகச்சேரி பலநோக்கக் கூட்டுறவுச் சங்க கட்டடத்தில் பழங்கள், மரக்கறிகள் பதனிடும் தொழிற்சாலையினை ஆரம்பிக்கவுள்ளனர்.

இந் நிறுவத்தினர் கடந்த வருடம் மீசாலை, சாவகச்சேரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 60 மகளிர்களுக்கு பழங்கள், மரக்கறிகள் பதனிடுவது பற்றிய பயிற்சி வகுப்பினை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

தொழிற்சாலை ஆரம்பவேலைகள் நடைபெறுவதாகவும் எதிர்வரும் மே மாதமளவில் பழங்களின் சீசன் ஆரம்பித்ததும் முழு அளவில் செயற்படுமெனவும் தொழிற்சாலை இயங்கத் தொடங்கியதும் தென்மராட்சி பகுதியில் உள்ள மேலும் பல இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சியும், வேலை வாய்ப்பும் வழங்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

விரைவில் மீசாலை கிழக்கு மகளிர் அபிவிருத்தி நிலையத்திலும் இந்த தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## தென்மராட்சி பாடசாலைகளில்

# பயிற்றப்பட்ட ஆசிரியர் இன்றி கணனிகள் பல முடக்கம்

தென்மராட்சி, பெப்.5

தென்மராட்சி கல்வி வலயத்தினால் கடந்த வருடம் எட்டுப் பாடசாலைகளுக்கு கணனிகள் வழங்கப்பட்ட போதிலும் அவற்றில் ஆறு பாடசாலைகளுக்கு இதுவரை அதற்கான ஆசிரியர்கள் நியமிக்கப்படாததால் மாணவர்களுக்கு கணனிப் பயிற்சியை வழங்க முடியாத நிலையில் அவை அலுமாரிக்குள் வைக்கப்பட்டுள்ளன.

பளை மத்திய கல்லூரி, உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம், மட்டுவில் மகாவித்தியாலயம் கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே கணனிகள் பயன்படுத்தப்படாமல் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களின் கல்வி நலன் கருதி இப்பாடசாலைகளுக்கு கணனிப்பயிற்சி ஆசிரியர்களை விரைவில் நியமிக்குமாறு இப்பகுதி பெற்றோர்கள் கல்வி அதிகாரிகளைக் கேட்டுள்ளனர். (ஐ-117)


உ

சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் தைத் திங்கள் 26 ஆம் நாள் (09-02-2000) புதன்கிழமை காலை 10.00 மணி முதல் 11.30 மணி வரையுள்ள மேட இலக்னமும் சதுர்த்தி திதியும் சித்த யோகமும் உத்திரட்டாதி நட்சத்திரமும் சாத்விககுண வேளையும் இறையருள் கூடிய சுபவேளையில்

எனது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
செல்வக்கமலன்
அவர்கட்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
பாமா
அவர்கட்கும்

திருமணம் நடத்த திருவருள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதித்துத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்- ஷபானா மண்டபம், ஹோட்டல் சபையர்,
371, காலிவீதி, கொழும்பு-6

தங்கள் நல்வரவை அன்புடன் எதிர்நோக்கும்.

திருமதி ச. செல்வராஜா
சிக்னல் வியூ
வீமன்காமம், தெல்லிப்பழை.

திரு. திருமதி நிற்சிங்கம்
'மணி பவனம்'
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

(இருவீட்டார் அழைப்பு)

No. 157, Forest Woods st.
Richmond Hill
Ontario L4s1ya.
Canada.

No. 39, Gajaba Place.
Kirulapone
Colombo - 06
Srilanka.

(73345)



உ

விராட்விஸ்வப்பிரம்மணே நம

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருடம் தைத்திங்கள் 24 ஆம் நாள் (07-02-2000) திங்கட்கிழமை பிற்பகல் 12. 25 மணி முதல் 2.15 மணி வரை வரும் இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன் திருநிறை செல்வன்
சூரியகுமாரன்
(கணனி நிகழ்ச்சித்திட்ட இயக்குநர்,
டோகா, கட்டார்)
அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி
உமா
(ஆசிரியை, யா/பெரியபுலம்
மகா வித்தியாலயம்)
அவர்களுக்கும்

பார்வதி பரமேஸ்வரன் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமணம் நடத்தத் திருவருள் பாலித்திருப்பதால் அத்தருணம் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி. திலகரத்தினம்
மொடேர்ன் றேடியோ சேவிஸ்
கண்டிவீதி,
சாவகச்சேரி.

திருமதி க. நாகராஜா
நா. ஜெயகிருஷ்ணன் (ஜெயா)
இல. 70, காரைக்காட்டு ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

இப் பொது அழைப்பை தனி அழைப்பாக ஏற்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

(73333)






| | 180மி.லீ | 375மி.லீ | 750மி.லீ |
|---|---|---|---|
| ரொக்லண்ட் பழைய சாராயம் 34% | 99/= | 165/= | 320/= |
| ரொக்லண்ட் பழைய சாராயம் 29% | 85/= | 155/= | 295/= |
| திரீ ஸ்டார் அதிசக்தி | 70/= | 122/= | 220/= |

இப்போது கீழ்காணும் எமது ஏக விநியோகத்தர்களிடம் கிடைக்கும்.

வாமாஸ் 148/11, ஸ்டேன்லி வீதி, யாழ்ப்பாணம்.

ROCKLAND

றொக்லண்ட் டிஸ்றிலறிஸ் லிமிட்டெட்

ஏழு தசாப்தத்திற்கும் மேலான சிறந்த தரம்!

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broilers) கல்பேட்ஸ் என்பன தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல.40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (73313)

இறைச்சிக்கோழி புறொயிலர் கல்பேட்ஸ் விற்பனைக்குண்டு. இலவசமாக சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: மான் பாடசாலை வீதி உடுவில், சுன்னாகம். (73260)

Broiler, Cull Birds தினமும் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (73280)

இறைச்சிக்கோழி(Broiler)விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல.15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடை அருகில்) (73288)

சகல நிறைகளிலும் புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. 54/2, சந்தன மாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறைவீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். அல்லது 217/A ஆஸ்பத்திரிவீதி, (முலவைச்சந்தி) யாழ்ப்பாணம். (73349)

## யாழ்ப்பாணம்

யாழ். சேவையில் வாழ்க்கைத் துணை நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் நூல்கள் 1. யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடகநூல் 2. யாழ்ப்பாணம் சிறுகதைகள் 3. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் ரூபா 50. (73292)

## பொருளியல்

சுயமாக கற்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட பணம், சர்வதேச வர்த்தகம், வர்த்தக மாற்றுவீதம் பொதுப்பொருளாதாரம், பேரினப் பொருளாதாரம் போன்ற நூல்கள் யாழ். நகரம், சுன்னாகம், நெல்லியடி புத்தகசாலைகளில் விற்பனையாகின்றன. ஆசிரியர் வே. கருணாகரன். (73294)

## ஆங்கிலம் விசேடமாக

A/L, O/L (Spoken English) புதிய பாடத்திட்டம் 6,7,9,10 துரிதமாக ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். அனுபவமுள்ள B.Sc (Ceylon) Lond Inter ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, சிவன்கோவில் பின்புறம் திருநெல்வேலி. (73343)

## வீடு விற்பனைக்கு

இலக்கம் 89, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள வீடும் காணியும் விற்பனைக்குண்டு. மேலதிக விவரங்களுக்கு தொலைபேசி இலக்கம் கொழும்பு 865596 உடன் தொடர்பு கொள்ளவும். (C/10884)

## தேவை

தமிழ் ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் தேவை. நியாயமான விலைக்கு கொள்வனவு செய்யப்படும். தொடர்புகளுக்கு R. மருதம், இல-66, மணிக்கூட்டுவீதி, (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். (73330)

## மணமகள் தேவை

31 வயது நிரம்பிய செவ்வாய் தோஷமற்ற பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு படித்த அழகிய குடும்பப் பண்பு அடங்கப் பெற்ற மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஆசிரியர் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு விள - இல. 995 மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (73303)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 37 வயது நிரம்பிய 5'6" உயரம் உடைய லண்டனில் பொறியியலாளராகப் பணிபுரியும் மணமகனுக்கு பெற்றோர் படித்த, அழகிய, குடும்பப்பண்பு நிறைந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். எல்லா விவரங்களுடனும் எவரும் தொடர்பு கொள்ளலாம். பொருத்தமற்ற கடிதங்கள் கௌரவமாகத் திருப்பி அனுப்பப்படும். தொடர்பு: விள. இல. 997, மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (73341)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள குளிர் சாதனப்பெட்டி, 2 கட்டில்கள், ரேபிள் பான், ஓர்கன், சிக்சாக் தையல் மெசின், செற்றி கதிரைகள், மேசை, றோவைற் முட்டை இடும் கோழிகள் 300 உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. நாதன் இல.16/3, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (73305)

புது வருஷ 2000 ஆண்டுப் பலாபலன்கள் 'அழகியல்' ஆரம்பக்கல்வி தரம்1-5 வரை 'பொதுஅறிவு' ஆங்கிலத்தில் 40 கட்டுரைகள். வெளியீடு V.A. சிவராசா 152 B, அரசடிறோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (73314)

4 Head Multi Digital Converter 110V-240V Stereo, Video casette Recorder Panasonic -Fax Photocopy பெரிதாக்க, சிறுப்பிக்கக் கூடியது. Honda C -70 (விவரம் 29-1-2000 சஞ்சீவி பார்க்கவும்) ஆனந்தன் (கனடா) இல. 5, மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு (மஞ்சவனப்பதி ஆலய அருகில்) பாலன் சலூனில் தொடர்பு கொள்ளவும். (73342)

சுத்த இன சணன் பால் ஆடு 15 நாள் குட்டியுடனும், சினைகலப்பு ஆடு ஒன்றும் உடன் விற்பனைக்கு உண்டு. மனோன்மாஸ்ரர் நவாலி தெற்கு, மானிப்பாய். (73293)

மா, பலா, தோடை, தேசி, குறோட்டன், கமுகு, றோஸ், செவ்வரத்தை மற்றும் பூங்கன்றுகளும், பூச்சாடிகளும் விற்பனைக்கு உண்டு. இல.19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (73348)

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 - 11 - 1942

உதிர்வு 06 - 02 - 1999

அமரா சிவஸ்ரீ சோமாஸ்கந்தகுருக்கள விஜயரட்னகுருக்கள்

(முன்னாள் பிரதமகுரு புற்றளை சித்தி விநாயகர் ஆலயம்)

எந்தையே என் ஆருயிர்த் தெய்வமே
என்தனைப் பெற்றவன் நீயே
ஊரறியத் தீயிட்டேன், முறையாய்
பெற்றவள் தன்னிலும் பரிவுடன் நடந்தாய்
ஊன் உடல் விட்டு ஆவியகன்று ஆண்டொன்றானாலும்
நீங்கிடுமோ உன் நினைவு.

விஜிதா தவலிங்கம் (மகள்)

முத்திரைச்சந்தி,
நல்லூர்.

(C/10886)

## புத்தாயிரம் ஆண்டை வரவேற்கும் நிகழ்வு

தென்மராட்சி, பெப்.5

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் புத்தாயிரம் வரவேற்கும் வைபவத்தினை நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரி மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

இவ் வைபவத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 100 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

கழகத் தலைவர் லயன் க.சந்திரகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்திற்கு முதன்மை விருந்தினராக கழகத்தின் முன்னாள் தலைவர் லயன் டாக்டர் வே.பொ.தம்பித்துரையும் சிறப்பு விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக பார்வைக்கு முதலிடம் பிரிவின் பிராந்தியத் தலைவர் லயன் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தமும் கலந்து கொள்வர் என கழகச் செயலாளர் லயன் வீ.வீ.மகாலிங்கம் தெரிவித்தார். (ஐ-117)

## நூலகத்தை பிரதேச சபை பொறுப்பேற்பு

தென்மராட்சி, பெப். 5

கச்சாய் தெற்கு வினோபா சன சமூக நிலையத்தினால் நடத்தப்பட்டு வந்த கிளை பொதுநூல் நிலையத்தை சாவச்சேரி பிரதேச சபை பொறுப்பேற்கவுள்ளது.

இந்தக் கிளை பொதுநூலகத்திற்கு கட்டடம் அமைக்கவென சன சமூக நிலையத்தலைவர் இராசையா சோதிநாதன் என்பவர் அமரர் தன பாலசிங்கம் நினைவாக காணி ஒன்றினை பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையாவிடம் அண்மையில் வழங்கினார். (ஐ-117)

## மெய்வல்லுநர் போட்டி

வலிகாமம் தெற்கு, பெப். 5

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1மணி முதல் நடைபெறவுள்ளது.

அதிபர் செ.சிவநடராசா தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் முதன்மை விருந்தினர்களாக உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பராந்தனும், யாழ்ப்பாணம் மக்கள் வங்கி பிராந்திய உதவி முகாமையாளர் கே.ஏ.கிங்ஸ்லி இராசநாயகமும் கலந்து கொள்கின்றனர்.

சிறப்பு விருந்தினராக சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் க. ஆனந்தராசா கலந்து கொள்வார். (ஐ-152)

## மெடி கிளினிக் திறப்பு விழா

வலிகாமம் தெற்கு, பெப். 5

மானிப்பாய் சுகாதார, சமூக, சுற்றாடல் விவகார சபை ஆதரவில், மானிப்பாய் யாழ் வீதியில் உள்ள திருத்தணிகை கட்டடத்தில் அமைக்கப்பட்ட புதிய மானிப்பாய் மெடி கிளினிக் திறப்பு விழா சட்டத்தரணி இரா. வசந்தசேனன் தலைமையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்.

யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ.த.விக்கினராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பு அதிகாரி ஏ.சீ.செபநாயகம், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் கா. சந்திரராசா, டாக்டர் இ.தெய்வேந்திரம், வைத்தியகலாநிதி செல்வி சிவராணி சிவசோதி, யாழ் பிராந்திய பொறியியலாளர் லயன் சி. பத்மநாதன், ஓய்வுபெற்ற அரச அதிபர் எஸ். சிவநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வர். (ஐ-152)

## பண்ணிசைப் போட்டி

கொழும்பு, பெப்.5

யாழ். சைவ பரிபாலன சபையினரால் புண்ணிய நாச்சிய அம்மையார் நினைவுதினத்தை ஒட்டி நடத்தப்படும் பண்ணிசைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு யாழ். வண்ணார் பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ். நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சபையின் தேர்வுச் செயலாளர் வ.கந்தசாமி தெரிவித்துள்ளார். (ஐ-30)

## MC Leod Hospital - Inuvil
## இணுவில் மிஷன் வைத்தியசாலை

நோயாளர் நலன் கருதி இந்த வைத்தியசாலையில் 13-02-2000 ஆம் திகதியிலிருந்து சத்திர சிகிச்சை நிபுணர்

DR. M. சிவகுமார்

MBBS (SL.) M.S (SL.) FRCS (Eng.)

அவர்கள் சத்திரசிகிச்சை ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகளை வழங்கவுள்ளார். மாதம் இரு ஆலோசனைகள் (Surgical Consultation) ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெறும்.

ஆலோசனை தேவைப்படுவோர் முன்கூட்டியே இந்த வைத்தியசாலையில் பதிவு செய்யும்படி கேட்கப்படுகின்றனர்.

- நிர்வாகம்

(73338)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 10 - 04 - 1940



ஆண்டவன் திருவடியில் 18 - 01 - 1999

அமரர்

Dr. நடராசா சுந்தரலிங்கம்

திதி: 06-02-99 (ஞாயிற்றுக்கிழமை) பிரதமைதிதி

குடும்பத்தின் ஒளிதரு விளக்காய்
குவலயம் போற்ற வாழ்ந்த
எம் அன்புத் தந்தையே!


காலத்தின் கோலமதால் காலன் இட்ட கட்டளையால்
நிழல் தந்த விருட்சம் வேரோடு சாய்ந்ததுவே!
நெஞ்சங்கள் யாவும் நிசப்தமாகிப் போனதுவே
ஊமையாய் அழுகின்றோம் உரிமை உறவுகள்-நாம்
அப்பா, உங்கள் இலட்சியக் கனவுகள்
நனவாகும் வேளைதன்னில் அதைக்காண
நீங்கள் இங்கு இல்லை அப்பா!
அயராது உழைக்கின்றோம் உங்கள் விழுதுகள்
நாங்கள் இங்கே
உங்கள் கனவுகள் நனவாகும் நாள்
வெகுதூரம் இல்லை அப்பா.
அதைக்காண எப்போ அப்பா வருவீர்கள்?
கனவுகள் கண்ணீரால் நனைய
தேடுகின்றோம் உங்கள் வரவை.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவால்
துயருற்றிருக்கும்
தாய், மனைவி, பிள்ளைகள்.

புகையிரத வீதி,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

C/10883

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தேவராசா ஜேசுதாசன்

(குணசிங்கம்)

தாயின் மடியில் 06 - 05 - 1951

இறைவனடியில் 05 - 02 - 1999

திதி:- 05 - 02 - 2000

வாழவைத்த தெய்வம் வான் விட்டு சென்ற நாளை
வாரி அணைக்க வாடுதே எம் நெஞ்சம்
ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன உங்கள்
அன்புக்கீடாகுமோ தேறுதல் சொல்லிட
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் ஆறிடுமோ
உங்கள் நினைவுகளைச் சுமந்து நிற்கும்

மனைவி - மேரிவசந்தா
மகன் - குணரெக்சன்
குடும்பத்தினர்கள்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

(73208)

## நோயினால் புகையிலை செய்கை பாதிப்பு

புன்னாலைக்கட்டுவன், பெப். 5

புன்னாலைக்கட்டுவன், ஈவினை, குப்பிளான் பகுதிகளில் விவசாயிகளினால் செய்கை பண்ணப்பட்ட புகையிலைக் கன்றுகளில் குருமன் நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் இப்புகையிலைக் கன்றுகள் வளர்ச்சிகுன்றி காணப்படுகின்றன. சில விவசாயிகள் இத்தகைய புகையிலைக் கன்றுகளை அழித்துவிட்டு புதிய கன்றுகளை நடுகை செய்து வருகின்றனர்.

மேலும் இந்த நோய்த் தாக்கத்தினால் விவசாயிகள் பெரும் நட்டம் அடைந்துள்ளனர். தற்போதைய கால நிலையே மேற்படி நோய்த் தாக்கத்திற்கு காரணம் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (இ-133)


தரமான அச்சுவேலைகளை தாமதமின்றி செய்துகொள்ள

2789

DEVI PRINTERS JAFFNA

தேவி அச்சகம்

114/19, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(தேவி அச்சக. ஒழுங்கை)

(73251)



இல்லற தீபம் ஏற்றும்
தம்பதிகளை வாழ்த்துகின்றோம்

திரு. திருமதி அப்பாப்பிள்ளை தம்பதிகளின்
செல்வப்புதல்வி

விஜயராஜ் - சவுதினி தம்பதிகள்

லண்டனில் இன்று (05-02-2000) சனிக்கிழமை தாம்பத்திய வாழ்வில் இணைந்து கொள்கின்றார்கள். இவர்களைப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ மனதார இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

அப்பா, அம்மா,
அண்ணன்மார், அண்ணிமார்,
அக்கா, அத்தான்,
மருமக்கள், பிள்ளைகள்.

82/3, பருத்தித்துறை வீதி,
3 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(73258)




## தன்னலமற்ற சேவை

இளவாலை றோமன் கத்தோலிக்க தமிழ் ஆண்கள் பாடசாலை அதிபர் உயர்திரு ம.அ.அல்பிறெட் அவர்கள் தமது 60ஆவது அகவையைப் பூர்த்தி செய்யும் இவ்வேளையில் இவரை வாழ்த்துவதில், பாடசாலையின் போஷகரும் இளவாலைப் பங்குத்தந்தையும் ஆகிய நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இம்மணி விழா வேளையில் இப்பாடசாலை ஒரு சேவைநலன் பாராட்டு விழாவையும் மேற்கொள்வதையிட்டு உவகையுறுகின்றேன்.

மனித மாண்பு சிதைக்கப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு, சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்களாக மீளக்குடியமர முடியாமல் தவிப்போர் ஒருபுறமும், சொகுசான வாழ்வுதேடி அமர்ந்ததனால் சொந்த இடங்களின் பெயர்களைக் கூட மறந்தவர்களாக வாழ்வோர் மறுபுறமுமாக யதார்த்தநிலை காணப்படும் இந்நாள்களில் தனது சொந்த இடத்திலிருந்து வந்து இப்பாலகர்களின் கல்வியில் அக்கறைகொண்டு தன்னை அவர்களுக்காக அர்ப்பணித்து சேவையாற்றித் தற்போது ஓய்வுபெறும் அதிபர் அவர்களின் தன்னலமற்ற சேவையை வாழ்த்துகிறேன். இவர் எங்கிருந்தாலும் இறைவன் இவரை நிறைவாக ஆசிர்வதிப்பாராக.

பேஷகரும், பங்குத்தந்தையும்,
**அருட்திரு C.J. அன்ரனிபாலா.**

## மனிதாபிமானமிக்கவர்

திரு.ம.அ.அல்பிறெட் இளவாலை றோ.க.த. பாடசாலையில் ஏறக்குறைய 8வருடங்கள் அதிபராகக் கடமையாற்றியவர். சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அதிகாரியாக இருந்தபோது அவரது சேவை மனப்பான்மையையும் அவரது மிகச் சிறந்த குணமான மனிதாபிமான உணர்வுகளையும் அறியக்கூடியதாக இருந்தது. ஆசிரியர் பற்றாக்குறையாக இருந்தபோதிலும் இருக்கின்ற ஆசிரிய வளத்தை உயர்வாகப் பயன்படுத்தியவர். தனது பாடசாலையை ஒரு குடும்பமாக மதித்துத் தன்னுடன் பணியாற்றும் ஆசிரியர்களுடன் முரண்படாமல் அன்புடன் அணுகி நிர்வாகத்தை நடத்தியவர். தனது பாடசாலைத் தேவைகளைப் பற்றிக் கலந்துரையாடும்போது முகத்தில் புன்முறுவல் கலையாமல் - ஆனால் ஆணித்தரமாக - எடுத்துக்கூறி காரியத்தைச் சாதிப்பவர்.

நோயுற்றபோதும் வேறுபல இடர்கள் வந்துற்றபோதும் பாடசாலைக் கடமைகள் அதனால் பாதிப்புறா வண்ணம் நிலையாக நின்று கடமையாற்றியவர். இதுவரை இளவாலை றோ.க.த. பாடசாலையில் தளர்வுகள் ஏதும் இன்றிச் சிறப்புற நிர்வாகம் நடத்திய திரு.ம.அ.அல்பிறெட் அவர்கள் தமது ஓய்வுக் காலத்தில் நற்சேமத்துடன், சமூகத்துக்கு நற்பணியாற்றிட வாழ்த்துகின்றேன்.

**திருமதி றெஜினா இருதயநாதன்,**
பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
வலிகாம வலயம்.

## கடமையில் கண்ணானவர்

இளவாலை றோ.க.த. ஆண்கள் பாடசாலையில் தனது சேவையின் இறுதி எட்டு ஆண்டுகளையும் இனிதே முடித்து இன்று மணிவிழாக் காணும் திரு.ம.அ.அல்பிறெட் அவர்களுக்கு, அவருடைய மணிவிழாச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மிகுந்த மனநிறைவை அடைகின்றேன். தனது கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து சுகவீனமுற்றிருந்த தனது இறுதிச் சேவைக்காலத்திலும் நாள் தவறாது பாடசாலைக்கு சமுகமளித்து தனது கடமையை திறம்பட ஆற்றியமையை இளவாலைக் கல்விச் சமூகம் நன்கு அறியும்.

இராணுவ நடவடிக்கையால் பாடசாலைகள் இடம்பெயர்ந்து சென்ற வேளையிலும் பொருத்தமான இடங்களில் பாடசாலையை தொடர்ந்து நடத்தியமை பாராட்டுக்குரியது. மணிவிழா நாயகனாக ஓய்வுபெறும் இந்த அதிபர் தனது பிற்கால வாழ்க்கையை சமூகப் பணிகளுக்கு அர்ப்பணித்து மனநிறைவோடும், சாந்தி சமாதானத்தோடும் வாழவேண்டுமென வாழ்த்தி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**க. தனபாலசிங்கம்,**
கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர்,
சண்டிலிப்பாய்.

இளவாலை றோ.க.த. ஆண்கள் பாடசாலை
அதிபர் உயர்திரு **ம.அ. அல்பிறெட்**
அவர்களின்

# 60 ஆவது அகவை நிறைவில் சேவை நலன் நயப்பு விழா மலர்



*ஆசிரியர் சேவைக்காலம்*
1963.06.01 - 2000.02.05

## சேவை விவரம்

1963.06.01 - 1977.06.06
ப/பிற்றத்தமலைத் தோட்டத் தமிழ் கலவன் பாடசாலை. இல.1

1977.06.07 - 1977.12.31
ப/பிற்றத்தமலை அரசினர் தமிழ் வித்தியாலயம்

1978.01.01 - 1979.12.31
யா/அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

1980.01.01 - 1980.01.31
ப/சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்

1980.02.01 - 1981.11.12
ப/தொட்டுலாகல கனிஷ்ட வித்தியாலயம்

1981.11.13 - 1982.04.06
ப/தம்பேதன்ன அரசினர் தமிழ் வித்தியாலயம் இல.1

1988.09.21 - 1990.02.26
ப/தொட்டுலாகல தமிழ் கனிஷ்ட வித்தியாலயம்

1990.03.01 - 1992.02.25
யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலை

1992.02.26 - 1992.02.19
யா/வலித்தூண்டல் றோ.க.த.க. பாடசாலை

1992.03.20 - 2000.02.05
யா/இளவாலை றோ.க.த. ஆண்கள் பாடசாலை

## கிராமசேவையாளர் வாழ்த்து

இளவாலைக்கே பெருமை தேடித்தந்த இளவாலை றோ.க.த. ஆண்கள் பாடசாலை அதிபர் திரு.ம.அ.அல்பிறெட் அவர்களின் சேவைநலம் பாராட்டு விழாவும் மணிவிழாவும் இன்று நடைபெறுவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன். பல கல்விமான்களை உருவாக்கி சேவையிலிருந்து ஓய்வுபெறும் அதிபர் அவர்கள் தெய்வ ஆசியுடன் நீண்டகாலம் வாழ மனதார வாழ்த்துகிறேன்.

நன்றி

**க. சுதர்சன், கி.அ**
J/155 இளவாலை,
சண்டிலிப்பாய்.

(C/10920)

## சிறந்த கல்விமான், தொண்டன்

இளவாலை றோ.க.' ஆண்கள் பாடசாலை அதிபர் திரு.ம.அ.அல்பிறெட் அவர்களுக்கு மணி விழா எடுத்தல் மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாகும். அவரின் மணிவிழாச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் நான் பேருவகையடைகின்றேன்.

இன்றைய காலகட்டத்தில் எமது சமூகம் எதிர்நோக்கியுள்ள தேவைகளுக்கும் அறைகூவல்களுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் சிறுவர்களைப் பயிற்றுவிக்கும் அவர் திறனை நயந்து பாராட்டுகின்றேன்.

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வின் போது பல துன்பங்களுக்கு மத்தியிலும் அப்பாடசாலை செவ்வனே நடைபெறத் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டு மீண்டும் அப்பாடசாலையை உரிய இடத்துக்கு கொண்டுவந்து கல்விச் செயற்பாடுகளை வழிநடத்திய பெருமைக்குரியர் இவர் ஆவார்.

சிறந்த கல்விமானாகத் தொண்டனாக விளங்கும் இவர் மாணவர் நல மேம்பாட்டில் அதிக அக்கறை உடையவர். சிறந்த ஆசிரியர், அதிபர் ஆகிய பாத்திரங்களைத் தாங்கிச் செயற்திறம் படைத்து விளங்கும் தன்மையோடு, இறைபக்தி, யாவரையும் இன்முகம் காட்டி உபசரிக்கும் உயர்பண்பு, அன்பான பேச்சு என்பவற்றினால் அனைவரையும் வசீகரிக்கும் தன்மை உடையவராகத் திகழ்கின்றார்.

அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இறைவன் திருவருள்பாலிக்க வேண்டுவதோடு, என்றும் சிறப்புடன் வாழவேண்டுமென்று வாழ்த்தி நிற்கின்றேன்.

**அருட்கலாநிதி**
**ஜ.பே.ஞானப்பிரகாசம் அடிகளார்,**
அதிபர், யா/புனித ஹென்றியரசர் கல்லூரி,
இளவாலை.

## 'நல்லதோர் கடமை வீரன்' எங்கள் அதிபர்

புத்திஜீவிகள் பொலிந்து விளங்கும் பூமியாகிய கரம்பொன் ஊரில் 6.2.1940இல் பிறந்த உயர்திரு. ம.அ.அல்பிறட் அவர்கள் காவலூரின் கலையூற்று என்று கல்விமான்களால் வர்ணிக்கப்படும் புனித அந்தோனியார் கல்லூரியில் வல்லமை செறிந்த நல்லறிஞனாகப் புடம் போடப்பட்டார். நல்ல சமுதாய சிற்பிகளை வார்த்தெடுக்கும் ஆசிரியப்பணி இவர் உள்ளத்தை ஈர்த்திழுத்தது. இவரது அறிவையும் ஆற்றலையும் நுகரும் வாய்ப்பை முதலில் பெற்ற பதுளை பிற்றத்த மலைத்தோட்டப் பாடசாலை மாணவர்கள் பாக்கியவான்கள். ஆரம்பக் கல்வியில் விசேடபயிற்சி பெற்றுத் தனது ஆசிரியவாண்மையை மேலும் விருத்தி செய்து பல வெளிமாவட்டப் பாடசாலைகளில் கல்விப் பணியைத் தொடர்ந்தார்.

தொல்லைகளும் துயரங்களும் துளிர்விட்ட 1992 ஆம் ஆண்டிலே இளவாலை றோ.க.த. ஆண்கள் பாடசாலைக்கு அதிபராக ஆண்டவரினால் அனுப்பப்பட்ட அல்பிறெட் ஐயா போர்க்கள சூழலிலே நன் மேய்ப்பனாக ஆற்றிய புனிதமான பணிகளை பிஞ்சுள்ளங்களும் பெற்றோரும் என்றென்றும் நன்றியுடன் நினைவிற்கொள்ளக் கடப்பாடுடையவர்கள்.

வளம்நிறைந்த இளவாலை மண்ணைவிட்டு எம் வித்தியாலயம் புலம்பெயர்ந்த போதிலும் நவாலி விவேகானந்த வித்தியாலயத்திலும் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு அருகிலும் மறவன் புலோ மகாலட்சுமி வித்தியாலயத்திலும் எமது பாடசாலையை வளமாக இயங்க வைத்து, 1996ஆம் ஆண்டு இந்த வித்தியாலயத்தை மீளவும் அதன் சொந்தக் கட்டடத்தில் இயங்கவைத்த கருமவீரர் அல்பிறெட் ஐயா அவர்களுக்கு இன்று அவரது அறுபது அகவை நிறைவில் மணிவிழா எடுப்பதில் நாம் ஒவ்வொருவரும் உளம் பூரிக்கின்றோம்.

அத்தோடு எமது பாடசாலை இன்று காலடி எடுத்து வைத்திருக்கும் மிலேனியம் ஆண்டில் புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கு உறுதுணையாக விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எங்கள் அதிபர் உயர்திரு. ம.அ.அல்பிறெட் அவர்களும் அவர்தம் மனைவி, மக்களும் நீண்டகாலம் நல்ல உள, உடல் நலத்தோடு இப்புவியில் இன்புற்று வாழ ஆண்டவரின் நற்கருணைக்காக இந்நாளில் மன்றாடுகின்றோம்.

***வாழ்க அவர் கல்விப்பணி! வளர்க அவர் சமூகப்பணி!***

**நன்றி பொங்கும் நெஞ்சுடன்**

**ஆசிரியர்கள், மாணவர்கள்.**


*குளிர்மையின் மறுபெயர்!*

**NIPPON**

இலங்கையில் அதிகூடிய தெரிவு 30ற்கும் மேற்பட்ட மாதிரிகள்!

**மின்விசிறிகள்**

- TABLE FANS
- CEILING FANS
- STAND FANS
- BOX FANS
- EXHAUST FANS
- WALL FANS
- ORBIT FANS
- AIR COOLING FANS, ETC.ETC

LANKA NIPPON
'தரத்தின் சின்னம்'

No.18,Keyzser Street, Colombo - 11
T.P:- 437735 Fax:-437736
No.10, Trelawny Place (Behind Milk Bar)
Bambalapitiya Junc., Colombo- 04 Tel: 589992.

(C/10932)


# கைதிகள் மீதான தாக்குதல் திருச்சபைகளின் குழு கவலை

### ஐ.நா.செயலருக்கு மகஜர்

வவுனியா,பெப்.5

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் குறித்து வன்னியில் இயங்கும் திருச்சபைகளின் குழு ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

களுத்துறைச் சிறைச்சாலையில் இடம்பெற்றுவரும் மனிதாபிமானமற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்துத் தாம் அதிர்ச்சியும் வேதனையும் அடைவதாகவும் -

பலநூறுபேர் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தச் சிறைச்சாலையில் குற்றம் செய்யாத பலர் இன்னும் குற்றம் நிரூபிக்கப்படாமலும் விசாரணைக்கு உட்படுத்தப்படாமலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். ஆனாலும் நீதி நிர்வாகத்தால் குற்றம் நிரூபிக்கப்படாதவர் நிரபராதியாக நடத்தப்படுவது வழமை எனத் தாம் நம்புவதாகவும் -

தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச்சட்டம் என்பவற்றின் கீழ் நடைமுறையில் உள்ள கடுமையான விதிகள் தடுத்துவைக்கப்படுவதை அனுமதித்தாலும் கைதிகள் அனுபவிக்கும் கொடுமைகள் ஏற்கமுடியாதவை.

எனவும் அவர்கள் அனுப்பிய மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-8)

# அதிரடி அரங்கு

அரசாங்கம் வழங்கும் தொண்டர் ஆசிரியர் பதவிகளுக்கான நியமனக்கடிதங்கள் கல்வி அலுவலகங்களில் வைத்து அதிகாரிகளினால் வழங்கப்படாமல் கட்சி அலுவலகம் ஒன்றில் வைத்து விநியோகிக்கப்பட்ட 'அரசியல் ஸ்ரண்ட்' விவகாரம் குறித்து கடந்த டிசெம்பர் கிறிஸ்மஸ் சஞ்சீவி இதழில் இதே பத்தியில் நாம் பிரஸ்தாபித்திருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அந்தத் தகவலில் நாம் பின்வரும் கேள்விகளை எழுப்பியிருந்தோம்.

"மகாணசபை வழங்கும் நியமனத்தில் அரசியல் கட்சிக்கு என்ன வேலை? அங்கு கியூவில் நின்று நியமனக் கடிதத்தைப் பெறவேண்டுமா? அரச நியமனங்களை வழங்கும் அதிகாரம் கட்சி அலுவலகத்துக்கு வழங்கப்பட்டு விட்டதா? நியமனக் கடிதங்களை கட்சி அலுவலகத்துக்கு அனுப்பிய அதிகாரி யார்? நியமனக் கடிதத்தில் ஒப்பமிட்ட திருவாளர் திருகுதாளத்திற்கு நிர்வாகம் என்றால் என்னவென்பது தெரியாதா? உரிய முறையில் - உரிய இடத்தில் இது குறித்து கேள்வி எழுப்பப்படும்போது என்ன குத்துக்கரணத்தை அடித்து அவர் சமாளிக்கப்போகிறார்? ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் விசாரணைக்கு எடுக்கப்பட வேண்டிய விடயமாக இது மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை" - என்று குறிப்பிட்டிருந்தோம்.

ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு விசாரணைக்குப் போக முன்னரே இந்த விடயம் குறித்து ஆராய்வதற்கு வாய்ப்பு ஏற்படும் சூழ்நிலை தோன்றுவது மகிழ்ச்சிக்குரியது.

சம்பந்தப்பட்ட அதிகாரி திருவாளர் திருகுதாளம், மேற்படி அதிரடி அரங்குத் தகவலால் தனது மதிப்புக்கும் புகழுக்கும் இழுக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்காக சஞ்சீவியில் மன்னிப்புக் கோரா விட்டால், பத்திரிகைக்கும் ஆசிரியருக்கும் எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக சஞ்சீவியை மிரட்டும் கடிதம் ஒன்றை அனுப்புவதற்குத் தயாராகிவருவதாகத் தெரியவருகின்றது.

நல்லது. திருகோணமலையில் இருந்து கிடைத்த இத்தகவல் உண்மையானால் "சஞ்சீவி" அதை விருப்புடன் வரவேற்கின்றது.

சஞ்சீவித் தகவலுக்கு எதிராக நீதிமன்ற வழக்குத் தாக்கல் செய்வதற்கு அவர் மாகாண மற்றும் மத்திய அரசின் அனுமதியை நாடும்போது அவை இத்தகைய குளறுபடிகள், திருகுதாளங்கள் குறித்து விசாரிக்க ஒரு வாய்ப்பு ஏற்படும். அத்தோடு வழக்கிலும் இவை பற்றியும் இதற்கு முந்திய பல குளறுபடிகள் குறித்தும் அக்குவேறு ஆணிவேறாக பிய்க்கப்பட்டு உண்மைகள் வெளிவரவும் வாய்ப்புக் கிட்டும். கலகம் பிறந்தால் நன்மை பிறக்காமலா போகும்?

அத்தோடு திருவாளர் திருகுதாளம் என்ற தொப்பியை போட்டுக் கொண்டவர் யார் என்பதை அவரின் ஒப்புதல் கடிதத்தோடு நாம் பிரசுரிக்கவும், வாசகர்கள் அறிந்துகொள்ளவும் வாய்ப்புக்கிட்டும்.

* * * *

உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த இரு மாணவரையும் தாயையும் விடுவிக்கக்கோரி இவ்வாரம் மாணவர்கள் நடத்திய பகிஷ்கரிப்புப் போராட்டத்துக்கு சுமுகமாகத் தீர்வு காணப்பட்டிருக்கிறது.

விரைந்து தீர்வு காணவேண்டும் என்பதற்காக (பிரச்சினை முற்றிய பிறகாவது) பொறுப்புடன் செயற்பட்ட பலாலி ராணுவ அதிகாரிகள் விதந்துரைக்கப்பட வேண்டியவர்கள்.

ஆனால் இது விடயத்தில் சில பாடசாலை அதிபர்களின் 'குசும்புத்தனம்'தான் புரியமுடியாததாக இருக்கின்றது.

நகருக்கு வெளியே உள்ள ஒரு பாடசாலையின் அதிபர், பகிஷ்கரிப்புப் போராட்டம் முடிந்து நேற்று முன்தினம் மாணவர்கள் பாடசாலைக்குத் திரும்பிய போது அவர்களின் சிரேஷ்ட மாணவர்கள் சிலரை பாடசாலைக்குள்ளே அனுமதிக்க மறுத்துவிட்டார்.

பகிஷ்கரிப்பு நாள்களில் பாடசாலை வளவுக்குள் வந்து அங்கு வந்திருந்த மாணவர்களை பகிஷ்கரிப்பில் ஈடுபடுமாறு தூண்டினார்களாம் இவர்கள் என்பது தான் குற்றச்சாட்டு.

இதற்காகத்தான் இவர்களுக்குத் தற்போது பாடசாலைக்குள் நுழைய அனுமதி மறுக்கப்படுகிறது.

சமூகத்தில் பல சிக்கல்களை ஏற்படுத்தக்கூடிய - உணர்வுபூர்வமான - விடயத்திற்காகத்தான் இவ்வார பகிஷ்கரிப்பு இடம்பெற்றது என்பது பலரின் கணிப்பு.

இத்தகைய விடயங்களை கையாளும்போதும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்போதும் அதிபர்கள் தங்கள் அதிகாரங்கள் என்ன என்பதை ஒன்றுக்கு, இரண்டு தடவை சிந்தித்துப் பார்ப்பது நல்லது - கைதுசெய்யப்படும் மாணவர்கள் விவகாரத்தில் தமக்குரிய கையாலாகாத்தனமான நிலைமை உட்பட.

* * * *

'ஓவ்செட்' மற்றும் கம்பியூட்டர் தட்டச்சு செய்யும் முறைகள் சிறிது சிறிதாக யாழ்ப்பாணத்துக்கு அறிமுகப்படுத்தப்பட்டதால் குடாநாட்டின் அச்சுத்துறையில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்பது வாஸ்தவம்தான். ஆனால் அதனால் சில மோசமான பாதிப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

கொழும்பிலும், வெளிநாடுகளிலும் தயாரிக்கப்படும் பாவனைப்பொருள்களின் லேபல்களை உள்ளூரில் தயாரித்து அதனைப்பயன்படுத்தி போலிகளைப் பாவனைக்கு விடும் சில கலப்பட மன்னர்களுக்கு இந்த அச்சுமுறை நன்கு கைகொடுத்துதவத் தொடங்கியிருக்கிறது!

கொழும்பு மற்றும் வெளிநாட்டுத் தயாரிப்புகளின் லேபல்கள், பெட்டிகள் போன்றவற்றை இங்கு உள்ளூரில் அச்சொட்டாகப் பிரதிபண்ணித் தயாரிப்பதற்கு இந்தக் கம்பியூட்டர்களும், 'ஓவ்செட்' மற்றும் ஏனைய அச்சுமுறைகளும் உதவுகின்றன.

கொழும்பில் உள்ள நிறுவனங்களின் பெயரில், Rose Brand சந்தனாதித் தைலம், Lotus Brand சந்தனாதித் தைலம், Lion Brand சந்தனாதித் தைலம் போன்றவை எல்லாவற்றுக்குமான 'லேபல்'களை - கண்ணுக்குப் பளிச்சிடும் விதத்தில் - நான்கு வர்ணத்தில் - தயாரித்துள்ளது கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள ஒரு (போலி) நிறுவனம்.

அந்த லேபலில் 'ஒரிஜினல்' என்ற குறிப்பு வேறு. அத்தோடு கொழும்பு நிறுவனம் என்பதை நம்ப வைப்பதற்காக லேபலின் ஒரு பகுதி சிங்களத்தில்.

இதேபோன்று "ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தேன்" என்ற பெயரிலும் உயர் தரத்தில் லேபல்(மட்டும்) இங்கு தயாராகிக்கொண்டிருந்ததை காணமுடிந்தது.

லேபல்களையே மோசடி செய்பவர்கள் அதனோடு சேர்ந்த பொருள்களின் தயாரிப்பில் எத்தனை மோசடி செய்வார்களோ?

மருந்துத் தேவைக்கென்று ஆஸ்திரேலிய தேன், சந்தனாதித் தைலம் என்று வாங்குவோர் தமக்கும் சிறிய குழந்தைகளுக்கும் அவற்றைப் பயன்படுத்தி விட்டு என்ன விளைவுகளைச் சந்திக்கப் போகின்றார்களோ?

இது இந்த இரு பொருள்களில் மட்டும்தான் என்பதல்ல. பல்வேறு பாவனைப் பொருள்களிலும் இத்தகைய மோசடி நடப்பதாகக் கேள்வி. சட்டம், ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்படுவது சீரற்றுப்போயிருப்பதை பயன்படுத்தி, தமது திருவிளையாடல்களை சமூகத்தின் மீது கட்டியடித்து, குறுக்குவழியில் பணம் சம்பாதிக்க முயலும் சில சமூகவிரோதிகளின்செயல் இது.

இத்தகைய சமூகவிரோதிகளின் செயலால் ஒட்டுமொத்த சமூகத்தோடு நாம் ஒவ்வொருவரும் கூட, பெரிதும் பாதிக்கப்படப்போகின்றோம் என்பதை அனைவரும் உணரவேண்டும் - இத்தகைய அநியாய செயல்களுக்குத் துணைபோகும் வர்த்தகர்கள், ஏஜெண்டுகள், அச்சகக்காரர்கள், கம்பியூட்டர் சேவை வழங்குவோர் உட்பட.

யாழ்ப்பாணத்தில் இத்தகைய குளறுபடி லேபல்களை மொத்தமாகத் தயாரித்து - சில்லறைக்கு - விநியோகிப்பதிலும் ஓரிரு நிறுவனங்கள் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் இது சமர்ப்பணம்.

நிலைமை மோசமடைந்தால் இத்தகைய குளறுபடிகளில் ஈடுபடும் அனைவரையுமே பெயர்குறிப்பிட்டு அம்பலப்படுத்தவேண்டிய தேவை கூட ஏற்படலாம்.

* * * *

அநாதரவானவர்கள், புலனிழந்தோர்களுக்கு ஆதரவும் உதவியும் வழங்கும் நான்கு "அன்பு" இல்லங்கள் கைதடியில் உள்ளன. அவற்றில் ஒன்றில் அண்மையில் நடைபெற்ற அசிங்மாக விடயம் குறித்து அங்குள்ள வயதானவர்கள் மனம் நொந்து போயுள்ளனர்.

சம்பந்தப்பட்ட நிலையத்தில் மனவளர்ச்சி குன்றிய இளம் பெண் ஒருவரை அங்கு பணிபுரியும் ஊழியர்கள் இருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதால் அந்தப்பெண் கருத்தரித்தார். கருவைக் கலைப்பதற்காக அந்தப்பெண்ணுக்கு தேநீருடன் சேர்த்து "மருந்து" கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் விளைவாக வெகுளித்தனமுள்ள அந்தப் பெண் இரத்தப் பெருக்கு ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு ஊழியர்களும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அந்தப்பிரதேசத்து உயர் அதிகாரியும் குறிப்பிட்ட இல்லத்துக்குச் சென்று விசாரித்துள்ளார்.

விஷயம் இப்போதுதான் தெரியவந்ததெனினும், இரண்டு மாதங்களுக்கு முன்னரே சாடைமாடையாகப் பேசப்பட்டதாகவும், இத்தகைய சம்பவங்கள் இது போன்ற இடங்களில் நடைபெறாமல் தடுக்கப்பட வேண்டும் என்றும் சமூக விரோதிகள் தகுந்தமாதிரித் தண்டிக்கப்படவேண்டும் என்றும் வயோதிபர் ஒருவர் உரத்த குரலில் கூறினார்.

- *மின்னல்.*

## அனைத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து ஒற்றுமை ஏற்படும் பட்சத்தில் நாட்டுமக்கள் அனைவரையும் பிரதிநிதித்துவம் செய்யும் சகல ஜனநாயக அரசியல் கட்சிகள், மற்றும் குழுக்கள் ஆகியவற்றுடன் உடன்பாடு ஒன்றை எட்டமுடியும்.

இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாணும் இந்த உன்னதமான பணியில் விடுதலைப் புலிகளும் கலந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் துன்ப, துயரங்களுக்கு முடிவுகாணும் வகையில் விடுதலைப்புலிகள் இந்தச் சமாதான முயற்சிகளில் முக்கியபங்கு வகிக்க வேண்டும்.

தமிழ் - சிங்கள தலைவர்களையும்அப்பாவி மக்களையும்படுகொலை செய்வதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளையோ சிறுபான்மையினரின் பிரச்சினைகளையோ ஒருபோதும் தீர்த்துவிடமுடியாது என்பதை புலிகள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இனியும் பல உயிர்களை எம்மால் தியாகம் செய்யமுடியாது.

எமது குழந்தைகளைக் கொல்வதற்கும் கொல்லப்படுவதற்குமாக அனுப்பக்கூடாது. அதற்குப் பதிலாக அவர்களது உயிரைப்பேணிப் பாதுகாக்கவேண்டும்.

எனவே அனைவரும் ஒன்றிணைந்து பிரச்சினைக்குத் தீர்வு காணவும், கனவை நனவாக்கவும் முயலவேண்டும்.

பேச்சு, சமரசம், கலந்துரையாடல் ஆகியன மூலமே இந்த உயரிய இலட்சியத்தை அடைய முடியும்.

தமிழ் மக்கள் கனவுகாணும் எதிர்காலமும் அனைத்து இலங்கையரின் அபிலாஷைகளும் பேச்சு மூலமும் கூட்டு முயற்சிகளின் வாயிலாகவுமே அடையப்படமுடியும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். எனவே பேச்சுகளுக்கு தொடர்ந்து முயற்சி செய்யப்படும்.

இலங்கை மக்கள் அனைவரும் தமது தனிப்பட்ட மற்றும் கூட்டான எதிர்காலத்துக்கு பல கனவுகளைக் கொண்டிருக்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியும்.

வடக்கு - கிழக்கு மக்கள் பாதுகாப்பாகவும் சுபீட்சமாகவும் வாழ்வதற்கு கனவு காண்கிறார்கள். ஆயிரக்கணக்கான படைவீரர்கள் தமது வீடுகளுக்குத் திரும்பவும் குடும்பங்களுடன் இணையவும் கனவு காண்கிறார்கள்.

(10 ஆம் பக்கம் பார்க்க)


INSTITUTE OF INFORMATICS STUDIES

### அலுவலக உத்தியோகத்தர், ஆசிரியர்கள், தொழில்சார் வல்லுநர்கள் ஆகியோருக்கான பிரத்தியேக வகுப்புக்கள்

2000/2001 கல்வி ஆண்டுக்காக இன்று சனிக்கிழமை தொடங்க இருக்கின்ற எமது முதலாம் பிரிவுக்கான பயிற்சி நெறிகளில் மேற்குறிப்பிட்டோருக்கான விசேட பிரத்தியேக வகுப்புக்கள் வார/இறுதி நாள்களில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அலுவலக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், தொழில்சார் வல்லுநர்கள் ஆகியோரின் வேண்டுகோளுக்கும் ஆர்வத்துக்கும் இணங்கவே இப்பிரிவுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இப்பிரிவுகள் எக்காரணம் கொண்டும் மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்

* நிறுவன ரீதியாக மேற்குறிப்பிட்டோர் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பத்திலும் வகுப்புகள் ஒழுங்கு செய்து தரப்படும்.

இயக்குநர்

(C/10918) IIS, 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.


### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 1935 - 09 - 11



உதிர்வு 2000 - 01 - 07

அமரர்

**ஐயம்பிள்ளை - வைத்திலிங்கம்**
(ஓய்வு பெற்ற தபால் ஊழியர், சுன்னாகம்)

எங்கள் அன்புத் தெய்வமே!
எம்மை விட்டுப் பிரிந்து மாதம்
ஒன்று சென்றாலும் துயர்
தாங்காது துடிக்கின்றோம்.
தந்தையே எங்களை பாசத்துடன்
வளர்த்து மாறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொள்ளச் சென்றீரோ!

**அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம். நாளை (06-02-2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

மோட்டியான் கூடல்,
சுன்னாகம்.

(73404)

பிரிவால் துயருறும்
**சகோதரர்கள், மனைவி, மக்கள், பெறாமக்கள்.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி காளியன் சின்னம்மா

தல்லையப்புலம் துன்னாலை தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த காளியன் சின்னம்மா நேற்று வெள்ளிக்கிழமை காலை மரணமானார்.

இவர் காலஞ்சென்ற காளியனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இரத்தினம், மற்றும் மணியம் (முகாமையாளர், கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்), திருமதிகளான, சரஸ்வதி, கனகம்மா, சூசைப்பிள்ளை, சிவக்கொழுந்து, திரு.பொன்னையா (மெக்கானிக், மந்திகை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நண்பகல் 12மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சோனப்பு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

(73409)

தகவல்:
**கா.மணியம்**
(மகன்)

## சின்னப்பு மகாலிங்கம்

**(ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு மகாலிங்கம் (யாழ்.போதனா வைத்தியசாலை ஓய்வு பெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்) 04.02.2000 அன்று காலமானார்.

அன்னார் லீலாவதியின் அன்புக் கணவரும், தர்மேந்திரா, சத்தியேந்திரா, நவநேந்திரா, வேணுகா, றமேஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10.00மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(73408)

தகவல்
**மனைவி, பிள்ளைகள்**

## மழை தொடருமாம்

வடபகுதியில் தற்போது பெய்து வரும் மழை இன்னும் இரண்டு தினங்களுக்கு நீடிக்க வாய்ப்புண்டு.

இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய ஆபத்து இருப்பதனால் பொது மக்கள் மின்சாரசாதனங்களின் பாவனையைத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளதாக இலங்கை வானொலி குறிப்பிட்டது.

## தேடுதல்

மட்டக்களப்பு,பெப்.5

சுதந்திர தினமான நேற்று மட்டக்களப்பு புளியந்தீவுப் பகுதி சுற்றி வளைக்கப்பட்டு வீடுவீடாகத் தேடுதல் இடம்பெற்றது.

அதைத் தொடர்ந்து ஆண்கள், பெண்கள் அனைவரும் கோவிந்தன் வீதியிலுள்ள முகாமுக்குக் கூட்டிச் செல்லப்பட்டு முகாமுக்கு வெளியே வீதியோரத்தில் கொட்டும் மழையில் பலமணிநேரம்நிற்கவைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-21)

## பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கத்தின் தலைவர் நா.நவரத்தினராசா தலைமையில் இணுவில் மத்திய கல்லூரியில் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

(ஐ-4-86)

## ஐக்கியப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு காண்பதற்கு உதவுவதாக ஐ.தே.க தெரிவித்துள்ள போதிலும் அரசாங்கமோ தொடர்ந்தும் எம்மீது தாக்குதல் நடத்துவதையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

பத்திரிகைச் சுதந்திரத்துக்காகவும், வாக்குச் சுதந்திரத்துக்காகவும் போராடுவது என இன்றைய சுதந்திரதின நிகழ்வுகளில் ஐ.தே.க. உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும். - என்றார்

## அனைத்து.........

(9ஆம் பக்க தொடர்ச்சி)

தென்பகுதி மக்கள் பயங்கரவாதத்துக்கும் யுத்தத்துக்கும் முடிவு கட்டவும் சுபீட்சம் காணவும் கனவு காண்கிறார்கள்.

இந்தக் கனவுகளை நனவாக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டும். இல்லாவிட்டால் இந்தக் கனவுகள் நனவாகா என்பதை இலங்கையர் அனைவரும் உணர்ந்து கொள்ளும் நாள் இதுவாகும்.

இந்த மோதலின் கொடுமை இனியும் வேண்டாம். 'பட்டது போதும்' என்று கூறுவதற்கு இன்றுதான் உரிய தருணமாகும்.

சிறுபான்மையினரின் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியது அவசரமான மிக முக்கியமான சவாலாகும். நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரஜைக்கும் சமமான சந்தர்ப்பங்களை வழங்கவும் அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளவும் இவை அனைத்தையும் அரசியல்யாப்பு ரீதியில் உத்தரவாதம் செய்யவும் நாம் தொடர்ந்து உறுதியாகப் பாடுபடவேண்டும். சுதந்திர தினமான இன்று, இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வைக் காணும் பாதையில் காலடி வைத்திருக்கிறோம் என நான் உறுதியாக நம்புகிறேன் - என்றார். (உ-3-க)


**வடமராட்சிக் கிளை நிறுவனம் இடம்மாற்றம்**

நாவலர் மடம், நெல்லியடியில் இயங்கிவந்த எமது கிளை நிறுவனம் 5.02.2000 திகதி முதல 'குன்பொல்லை வீதி, கரவெட்டி வடக்கு, நெல்லியடி கரவெட்டி' என்னும் முகவரியில் உள்ள புதிய கட்டடத் தொகுதிக்கு இடம்மாற்றப் படுகின்றது என்பதை அறியத் தருகின்றோம்.

இயக்குநர்,
IIS. யாழ்ப்பாணம்.
(C/10917)



"அபிவிருத்திப் பொருளியல்"
சஞ்சிகை வெளியீட்டு நிதிக்காக

யாழ் பல்கலைக்கழக
இளம் பொருளியலாளர் மன்றம்
வழங்கும்

**WELCOME MILLENNIUM SHOW**

* "மீண்டும் பிறப்பு உண்டேல்" (நாடகம்)
* "வசந்த ராகங்கள்" (MILLENNIUM SHOW)

(யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களும் இணைந்து வழங்கும் புதிய திரையிசைப் பாடல்கள்)

நிகழ்ச்சித் தொகுப்பு : S.K.குணா
இடம் : கைலாசபதி கலையரங்கு
காலம் : 06.02.2000 (ஞாயிறு)
நேரம் : மு.ப.10.00மணி, பி.ப.2.30மணி
பிரவேசம் : ரூ.50.00, ரூ.100.00

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இளம் பொருளியலாளர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.



**லிங்கன் ஸ்ரோர்ஸ்**

இறக்குமதி செய்யப்பட்ட பிறந்ததின, திருமண வாழ்த்து மடல்கள் LAMINATING & FAX PAPER என்பன விற்பனைக்கு உண்டு.

**லிங்கன் ஸ்ரோர்ஸ்**
168, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/10908) தொலைபேசி இல - 3368


## மரண அறிவித்தல்கள்

### திருமதி மாணிக்கம் கணபதிப்பிள்ளை

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மாணிக்கம் கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (04.02.2000) சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் துரைராஜா (பிரான்ஸ்), புஷ்பராணி (தாதி, யாழ்.போதனா வைத்திய சாலை), கருணாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இராஜேந்திரம் (முகாமையாளர், சிங்கர் கொம்பனி), மல்லிகாதேவி, சுந்தரம்பிள்ளை ஆகியோரின் அன்பு மாமியும் தயானந்தன், ஜீவானந்தன், தேவானந்தன், சுகிர்தா, சதீஸ்கண்ணா, ஷகிலா (யாழ்.பல்கலைக்கழகம், கலை முதலாம் வருடம்), கவிதா, வினோத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2000) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 2.00 மணியளவில் செம்மணி மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
க.துரைராஜா (மகன்)

541, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (73410)

### கந்தையா இளையப்பா

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இளையப்பா 04.02.2000 பிற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சின்னாச்சியின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சீனியர்- தெய்வானையின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இரத்தினம் செல்லையா, சின்னத்துரை, தம்பிராசா, அழகம்மா ஆகியோரின் சகோதரனும், சரஸ்வதி (லண்டன்), பாக்கியலட்சுமி (கனடா), மனோரஞ்சிதம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற யேசுதாசன், யோகராசா (கனடா), ஜெகதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிமல் (நியூசிலாந்து), ஸ்ரெலா (லண்டன்), கில்டா (லண்டன்), யோச் (லண்டன்), ஏபிரகாம் (கனடா), மற்றில்டா (லண்டன்), மயூரன், சரணியா, பிரணவன், சிவாஜினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2000) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கொட்டைக்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:-
சி.சிறிபாலசிங்கம் (பெறாமகன்)

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு. (C/10936)


**Institute of Informatics Studies (IIS)**

No. 100 Clock Tower Road, Jaffna.
(Affiliated with *IMIS*, UK)

Telephone No. : 21-2831 E-Mail : iis@sltnet.lk


புதிய கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பம் 05/02/2000 பகல் 10.00 மணி



Personality leads to pride of success



Finest and the latest best equipped laboratory admired by one and all



Appearance proves a milestone in success

கிளை நிறுவனங்கள் :
* IIS நெல்லியடி, கரவெட்டி.
* IIS பிரதான வீதி, சங்கானை.
* IIS துணைவீதி கிழக்கு, சாவகச்சேரி.

**Diploma Courses**

* Advanced Diploma in Applied Computer Science
* Diploma in Software Engineering
* Diploma in Computer Programming
* Diploma in Personal Computer Specialist
* Technician Diploma in Computer Hardware
* Diploma in Microsoft Office 2000
* Diploma in Internet & E-Mail Communication

**Professional Courses**

* BCS Stage I & Stage II Conducted by British Computer Society, U.K.
* ACS Stage I to Stage IV Conducted by Australian Computer Society, Australia.
* NECS Stage I to Stage VI Conducted by National Examination in Computer Studies, Sri Lanka
* NCCA 1- Basic Level Exam and 2- Intermediate Level Exam Conducted by National Certificate in Computer Application Sri Lanka

**Certificate Courses**

MS Excel 2000, MS Word 2000, MS Access 2000, MS Power Point 2000, AutoCad, Page Maker, Corel DRAW, Visual Basic, Pascal, Visual C, C++ and dBase III+.

ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான கல்வி நிறுவனம்

* எத்துறை சார்ந்தவர்களாயினும் உங்கள் தேவைக்கேற்ப பிரத்தியேக வகுப்புக்கள் ஒழுங்குசெய்து தரப்படும்.
* மாணவர்களின் வசதிகருதி வார்நாட்களிலும் வாரஇறுதி நாட்களிலும் காலை மாலை வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
* தகுதி, திறமை, அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை
* மாணவர்களின் வசதி கருதி கட்டணங்கள் இலகுவான முறையில் தவணைக்கட்டணங்களாக செலுத்தும் வசதி.

நீங்களும் கணனித்துறையில் ஓர் பட்டதாரியாகலாம்!
மிகவிரைவில் ஐரோப்பிய பல்கலைக்கழகம் ஒன்றின் அங்கீகாரத்துடன் Bachelor of Science in Computer Science என்னும் கற்கை நெறியை அறிமுகப்படுத்தவுள்ளோம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05-02-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சஞ்சீவி

சஞ்சீவி 05-02-2000

வியக்க வைக்கும் விதம் விதமான துணிமணிகளை விரும்பியவாறு தெரிவு செய்து கொண்டிட ஏற்றதோர் புடைவையகம்?

ம்...... அதுதான்.....



விநாயகர் புடைவையகம்

ஆச்சே...!

60A, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(C/10897)

## கருத்துக் கலசம்

மயூரா

### குருடனாகாதீர்!

**கண் பார்வை அற்றவன் குருடன் அல்லன். தனது குற்றங் குறைகளை உணராதவன் இருக்கிறானே, அவன்தான் சரியான, உண்மையான குருடன்.**

**- மகாத்மாகாந்தி -**

தவறு இழைக்காத மனிதர்கள் என்று எவரும் உலகில் இருந்ததில்லை. இருக்கப்போவதுமில்லை. மக்களால் மகான்களாகவும் தலைவர்களாகவும் போற்றப்படுவோர் கூட, ஏதோ சில தவறுகளை, பிழைகளைச் செய்தவர்களே. அதனாலேயே தவறு செய்யாதவர்களைத் தெய்வப் பிறவிகளாகக் கருதலாம் என்று கூறப்படுவது உண்டு.

தவறு இழைக்காத மனிதர்களே இல்லை என்பதால் தாமும் பிழைகளைச் செய்யலாம், அநீதிகளைப் புரியலாம்தானே என்று எவரும் எண்ணலாகாது. பொது வாழ்க்கையிலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் தவறு செய்யக்கூடாது என்ற நல்ல நோக்கம், குறிக்கோள் ஒவ்வொருவருக்கும் அவசியம்.

அந்த நோக்கமும் குறிக்கோளும் வெறும் மனத்தளவில் இருந்தால் மட்டும் போதாது. செயலளவில், நடைமுறையில் தவறு இழைக்காதவர்களாக வாழப் பழகவேண்டும். அதற்கான பயிற்சி சிறு வயது முதலே அவசியம். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதல்லவா? ஆகையால் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் நல்லவராக வளர வேண்டும் என்பதில் அதிக அக்கறை செலுத்துவது இன்றியமையாதது.

தமது பிள்ளைகள் நல்லவர்கள், வல்லவர்கள், சான்றோர்கள் என்று மற்றவர்கள் கூறும் போது பெற்றோர்களின் மனமகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தமது பிள்ளைகள் தீயவர்கள், தவறிழைப்பவர்கள், குற்றங்கள் செய்பவர்கள் என்று அறியும் போது அதே அளவு கவலையும் துன்பமும் கொள்வர் பெற்றோர். ஆகையால் நீதி நியாயத்துக்குப் பணிந்த, அடுத்தவனுக்குத் தீங்கு விளைவிக்காத, சமூகக் குற்றங்களைப் புரியாத பிள்ளைகளை வளர்ப்பதற்கு ஒவ்வொரு பெற்றோரும் பாடுபடவேண்டும்.

பெற்றோர்கள் தமக்குரிய இந்தக் கடமையைச் சரிவரச் செய்து நல்ல பிள்ளைகளை வளர்த்தாலும் அந்தப் பிள்ளைகள் தவறுகளைச் செய்ய மாட்டார்கள் என்று உறுதிப்படுத்த முடியாது. தெரிந்தோ தெரியாமலோ தவறு செய்வது மனித இயல்பு என்று வைத்துக் கொள்ளலாம்.

தவறு அல்லது குற்றம் செய்பவன் எப்போதும் சிறியோனாகவே நோக்கப்படுவான். இழைக்கப்பட்டது பெரியதவறா அல்லது சிறியதவறா என்று நோக்கப்படுவது குறைவு. அளவு எவ்வாறாயிருந்தாலும் குற்றம் குற்றமே. அவ்வாறாயின் குற்றம் செய்யாது இருப்பதற்கு என்ன வழி?

குற்றம் ஒன்றைச் செய்துவிட்டால் அடுத்தவர்கள் அதனை எடுத்துச் சொல்லும்போது ஏற்றுக்கொள்ளப் பழக வேண்டும். அந்தக் குற்றத்தை மனதளவில் உணர்ந்து திருந்த முயலவேண்டும்; தன்னைத்தானே திருத்திக் கொள்ளவேண்டும். அவ்வாறு செய்யாதவரின் குற்றங்குறைகள் பெருகிக்கொண்டே போகும்.

செய்த குற்றத்தை மறக்க முயல்வதும், தாம் செய்தது சரியே என்று பொது நீதியையும் மீறி நிலைநாட்ட முயல்வதும் சம்பந்தப்பட்ட குற்றத்தைவிட மாபெரும் குற்றமாகும். அதுவே உண்மையான குருட்டுத் தன்மை என்றால் மிகையில்லை.

# தமிழ் மகாகவி கம்பனின் தத்துவமும் தனித்துவமும்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை அண்மையில் பேராசிரியர் க.கைலாசபதி நினைவு தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்திருந்த நினைவுப் பேருரையில் பேராசிரியர் நா.சுப்பிரமணியன் கம்பனின் பார்வையை மையப்படுத்தி வழங்கிய திறனாய்வுத் தொகுப்பின் முதல் பகுதி இது.**


மகாகவி கம்பன் தமிழ்க் கவியாற்றலின் உன்னதத்தின் குறியீடாகக் கணிக்கப்படுபவன்; அவ்வகையில் அனைத்துலகப் பெருங்கவிஞர்களுடன் ஒருங்குவைத்து எண்ணப்படுபவன். கம்பராமாயணம் பற்றிப் பெருந்தொகையான ஆய்வுகளும் திறனாய்வுகளும் நிகழ்ந்துள்ளன. திருமணம் செல்வக்கேசவராய முதலியார், வ.வே.சு. ஐயர் ஆகியோர் முதல் அண்மைக்காலம் வரை பெருந்தொகையான ஆய்வாளர்கள் கம்பராமாயணத்தைப் பல்வேறு தளங்களிலும் கோணங்களிலும் நின்று தரிசித்துள்ளனர். இவ்வாறான தரிசன நூல்கள், ஆய்வேடுகள் மற்றும் ஆய்வுரைக்கட்டுரைகள் எனபனவாகப் பல்கிப் பெருகியுள்ளன.

மேற்படி ஆய்வு முயற்சிகளில் பெரும் பகுதியானவை விழிப்புணர்வால் தூண்டப்பட்ட நயப்புரைகள். குறிப்பிடத்தக்க தொகையின கட்டமைப்புசார் நுண்ணாய்வுகள். காண்டம், படலம், யாப்பு, அணி, மொழி மற்றும் பாத்திர உருவாக்கம், கதைப்புணர்ப்பு முதலிய கூறுகள் இவ்வகை ஆய்வுகளில் கவனத்தைப் பெற்றுள்ளன. மேற்படி இருவகை தவிர, கம்பராமாயாணத்துக்கூடாகப் புலப்படும் 'சமூக - பண்பாட்டு'க் கூறுகள் பற்றியும் சில ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. இவ்வகையில் கம்பன் காட்டும் அரசியல், சமூகம், சமயதத்துவச் சூழல் மற்றும் அறஒழுக்க விழுமியங்கள் முதலியன நுனித்து நோக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பல கோணங்களிலும் பெருந்தொகையான ஆய்வுகள் நிகழ்ந்துவிட்ட பொழுதிலும் கூட கம்பனைப்பற்றி திறனாய்வு நிலையிலான மதிப்பீடு இன்னும் முழுமையுறவில்லை. கம்பனது வரலாற்றுப் பாத்திரம் இயன்றவரை தெளிவாக இனங்காணப்படவில்லை என்பதே எமது கருத்து. தமிழ்ப் பெருங்கவிஞர் வரிசையில் கம்பனை வேறுபடுத்திக்காட்டும் வகையிலான பார்வைகள் - குறிப்பாகக் கம்பனது 'படைப்பு மனத்'தின் தனித்தன்மையை இனங்காட்டும் வகையிலான ஒப்பியல் நிலையிலான முயற்சிகள் - உரியவாறு மேற்கொள்ளப்படவில்லை என்பதே இந்தக் கணிப்பின் அடிப்படை.

கைலாசபதியவர்கள் பாரதியின் ஊற்றுக்கண்களைத் தேடும் முயற்சியில் தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், கோபாலகிருஷ்ண பாரதியார், சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார், இராமலிங்க சுவாமிகள், பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை, பங்கிம் சந்திரர், இரவீந்திரநாத் தாகூர், வால்ட் விட்மன், ஷெல்லி, பைரன் முதலியவர்களோடு அவரை ஒப்பிட்டதுபோல கம்பன் பற்றிய ஒப்பீடுகள் பரந்த அடிப்படையில் ஆழமாக நிகழ்ந்துள்ளனவா என நோக்கும்போதுதான் கம்பன் பற்றிய 'ஆய்வு - திறனாய்வு'ப் பார்வைகளின் நிறைவின்மையை நாம் உணர்ந்து கொள்ள முடியும். கம்பனது நிலைமட்டுமல்ல. இளங்கோ, சாத்தனார், மணிவாசகர், திருத்தக்கதேவர், சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், சேக்கிழார், வில்லிபுத்தூரர் முதலிய ஏனைய தமிழ்ப் பெருங்கவிஞர்களுடைய நிலையும் இதுதான். இவர்களை நயந்து போற்றி அல்லது விவாதப் பொருள்களாக்கி மகிழும் 'இலக்கியப்பண்பாட்டு'ச் சூழலிலிருந்து நாம் இன்னமும் விடுபடவில்லை என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகின்றது. மேற்படி பெருங் கவிஞர்களுட் பலர் தம்மைப் பற்றி நிலவும் தொன்மங்களிலிருந்து இன்றுவரை விடுவிக்கப்படவில்லை என்பதும் நமது கவனத்துக்குரியதாகிறது.

இவ்வாறான சூழலில், கம்பனது தனித்தன்மை, அதற்கு அடிப்படையாக அவன் சார்ந்து நின்ற தத்துவத்தளம், தனது காவியத்தினூடாக அவன் உணர்த்தவிழைந்த உலகியலறம் என்பனவற்றை இனங்காண முற்படும் ஒரு தேடல் இங்கு மேற்கொள்ளப்படுகின்றது. மேற்படி கூறுகளில் ஏனைய தமிழ்க் கவிஞர்களிலிருந்து அவன் எவ்வாறு வேறுபட்டுத் திகழ்கிறான் என்பதைக் கண்டறிய ஒப்பியல் அணுகுமுறை அவசியமாகிறது. கம்பனின் படைப்பு என்ற வகையில் இராமாவதாரம் (கம்பராமாயணம்) ஒன்று மட்டுமே இங்கு கவனத்திற் கொள்ளப்படுகின்றது. அவன் பெயரால் வழங்கப்படும் பிற ஆக்கங்கள் எவையும் இங்கு கருத்திற் கொள்ளப்படவில்லை.

கம்பராமாயணத்தின் சிறப்பியல்புகள் என்ற வகையில் பலராலும் விதந்து பேசப்பட்டுவரும் அம்சங்களில் ஒன்று அதில் புலப்பட்டுநிற்கும் 'மனிதம்'. சராசரி மனித மனத்தின் எண்ணக் கோலங்கள், அவற்றின் மோதல்களில் உருவாகும் சிக்கல்கள் என்பனவற்றை வாசகர்கள் பரிவுணர்வுடன் தரிசிக்க வைத்துள்ள பாங்கே இங்கு 'மனிதம்' எனப்படுகின்றது. விதந்து பேசப்படும் இன்னொரு அம்சம் 'சொற்களை ஏவல் கொள்ளும் திறன்'. இது கம்பனுடைய அறிவுத்திறன், கற்பனையாற்றல், மொழிப்புலமை என்பன சார்ந்தது. மேற்சுட்டிய முதலாவது அம்சத்தை உள்ளீடு எனவும் இரண்டாவதை வெளிப்



பாட்டுத் திறன் எனவும் கொள்ளலாம்.

மேற்படி உள்ளீடாகிய மனிதம் என்ற அம்சம் கம்பனது பாத்திர உருவாக்கங்களில் முழுவீச்சுடன் தொழிற்பட்டு நிற்கிறது. ஏற்கனவே வால்மீகி படைத்துவிட்ட பாத்திரங்களை - பக்தியுணர்வுச் சூழலில் தொன்மப்படிமங்களாகிவிட்ட கதை மாந்தரை - 'இரத்தமும் சதையுமுள்ள சராசரி மனிதர்களாக' புதிய குணச்சித்திரங்களுடன் கம்பனிடம் நாம் தரிசிக்கிறோம் என்றால் அதற்கு அடிப்படை அவற்றிற் பொதிந்துள்ள 'மனித'மேயாகும்.

இந்த மனிதம் பாத்திரங்களின் அகநிலை - அடிமன - உணர்வுகளாக வெளிப்படுகின்றது. பாத்திரங்களை ஒன்றோடொன்று கருத்து நிலையில் மோதிக்கொள்ள - விவாதிக்க - வைக்கிறது; மேலும் கதை நிகழ்வுகளில் - குறிப்பாகக் கதா பாத்திரங்கள் எய்தும் 'துன்ப, துயர'ங்களில் வாசகர்களைப் பங்கேற்க வைக்கிறது. இராமன், சீதை, இலக்குமணன், பரதன், குகன், வாலி, சுக்கிரீவன், இராவணன், கும்பகருணன், வீபீடணன் முதலிய பலரும் சராசரி மனிதர்களாக நம்முன் வருகின்றார்கள். இவர்களுட் பலர் தத்தம் பலம், பலவீனம் ஆகிய இரண்டையும் நம்மிடம் நேரடியாக வெளிப்படுத்துகிறார்கள்; சிலர் தத்தம் நிலைப்பாட்டுக்குச் சார்பாக நாங்கள் சிந்திக்கத் தக்கவகையில் தர்க்க பூர்வமான நியாயங்களை நம்முன் வைக்கிறார்கள். முரண்பட்டு நிற்கும் கருத்து நிலைகளில் தக்கது எது? தகாதது எது? என்பதைத் தீர்மானிப்பதில் வாசகர்கள் திகைக்கும் வகையில் அவர்களது நியாயவாதங்கள் கூர்மையாக அமைகின்றன. (சான்று:- வாலி - இராமன்; விபீடணன் - கும்பகருணன்). சில கதாபாத்திரங்களுக்கு வழங்கப்படும் 'தீர்ப்பு'க்கள் வாசகருள்ளங்களில் 'இது நியாயமா?' என்ற வினாவை எழுப்புகின்றன. (சான்று:- அகலிகை கல்லானமை, சீதையின் அக்கினிப் பிரவேசம்)

இவ்வாறான பல்தளப்பரிமாணங்கள் கொண்ட உயிரோட்டமுள்ள கதை மாந்தரை பாரதிக்கு முற்பட்ட தமிழிலக்கியப் பெரும் பரப்பில் கம்பனிடம் தவிர வேறு எந்தக் கவிஞரிடமாவது எம்மால் தரிசிக்க முடிகின்றதா? இதற்கு விடை 'இல்லை'. இளங்கோ, வில்லிபுத்தூரர் ஆகியோரிடத்தில் ஓரளவு - ஓரளவுதான் - இத்தகு பாத்திரங்களை நம்மால் தரிசிக்க முடிகின்றது. இவர்களுக்கு அடுத்த வரிசையில்தான் சாத்தனார், திருத்தக்கதேவர், சேக்கிழார் முதலியவர்களின் கதை மாந்தர்கள் நமது கவனத்துக்கு வருகின்றார்கள். இந்நிலை ஏன்? எதனால்? விடையிறுக்கப்பட வேண்டிய வினாக்கள் இவை.

இவற்றுக்கான விடை கூற முற்படுவோர் மேற்படி கவிஞர்கள் தேர்ந்து கொண்ட கதையம்சங்களின் வன்மை, மென்மைகளைக் காரணம்காட்ட முயலலாம். அதாவது கம்பன் தேர்ந்து கொண்ட இராமகதையிலே இயல்பாகவே அமைந்துள்ள பல்களப் பரிமாணங்கள் மற்றும் உணர்ச்சி மோதல்களுக்கான சந்தர்ப்பங்கள் என்பன போல ஏனையோர் தேர்ந்துகொண்ட கதைகளில் பரிமாணங்களும் சந்தர்ப்பங்களும் அமையவில்லை எனச் சிலர் வாதிக்க இடமுண்டு. இதில் ஓரளவு உண்மையும் உளது. ஓரளவு உண்மையும்தான். இளங்கோ, சாத்தனார், திருத்தக்கதேவர் மற்றும் இவர்கள்போன்ற சிலருக்கு இராமகதை போல உலகியல் வாழ்வின் பன்முகத் தரிசனங்களாக அமையக்கூடிய கதைகள் கிடைக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்வதில் தடையில்லை.

இன்னொரு வகையாக நோக்கினால் அவர்கள் இராமகதைபோலப் பன்முகத்தரிசனங் கொண்ட கதைகளைத் தேடவோ அன்றேல் புனைந்து உருவாக்கவோ முற்பட்டார்களா? என்ற வினாவுக்கு இடம் உளது.

**பேராசிரியர் கலாநிதி**
**நா.சுப்பிரமணியன்**

வில்லிபுத்தூரர் இராமகதை போலவே வாழ்வின் பன்முகத்தரிசனத்துக்கு வாய்ப்பளிக்கும் பாரதக்கதையைத் தேர்ந்து கொண்டவர். அவரால் ஏன் கம்பனைப் போல அக்கதையிற் காவியமாந்தரைக் குணசித்திர நிலையிற் படைக்க முடியாது போயிற்று?

சேக்கிழார் தேர்ந்து கொண்ட நாயன்மார் வரலாறுகள் இராமகதை போல பலதள விரிவுடையனவல்ல. ஆயினும் தமிழ் நாட்டில் நிஜமாக வாழ்ந்த பலரின் உண்மை அநுபவங்களை உள்ளடக்கியவை. எனவே வாழ்வின் பன்முக நிஜ தரிசனங்களைத் தரத்தக்கவை. ஆனால் பக்தி என்ற ஒரு பேருணர்ச்சியின் தரிசனம் மட்டுமே சேக்கிழாரின் கதைமாந்தரூடாக எங்களுக்குக் கிட்டுகின்றது. ஏனைய உணர்ச்சிகள் முனைப்பாக வெளிப்படக் கூடிய, வெளிப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் கூட அவை வெளிப்படத் தவறிவிடுகின்றன.

எனவே கம்பனின் பாத்திரங்களும் ஏனையோரின் பாத்திரங்களும் தரவேறுபாடு கொண்டமைக்கு 'கதையம்சம்' என்ற ஒன்று மட்டுமே காரணி எனக் கொள்ள இடமில்லை. அதற்கு அப்பாலும் காரணிகளை நாம் தேடவேண்டும். அவ்வாறு தேடும்போது நம் கவனத்துக்கு வரும் முக்கியமான மற்றொரு காரணி படைப்பாளியின் 'பார்வை' அல்லது 'உலகநோக்கு' (Vision) ஆகும்.

வாழ்வியல் பற்றியும், குடும்ப - சமுதாயச் சூழல் பற்றியும், உலகம் பற்றியும் ஒருவருக்கு அமைந்திருக்கக் கூடிய சிந்தனைத் தெளிவே இங்கு பார்வை அல்லது உலகநோக்கு எனப்படுகின்றது. இதுவே அவரது நடத்தை மற்றும் இயங்கு நிலை என்பனவற்றைத் தீர்மானிப்பது. ஒரு படைப்பாளியைப் பொறுத்தவரை அவனது படைப்பூக்கம், எண்ணக்கரு, படைப்பின் கட்டமைப்பு முதலியவற்றைத் தீர்மானிக்கும் அடிப்படைக்காரணியாகத் திகழ்வது இந்தப் 'பார்வை'யேயாகும். இதனைப் படைப்பாளியின் தத்துவத்தனம் எனலாம். எனவே கம்பனையும் ஏனைய கவிஞர்களையும் வேறுபடுத்தி நிற்பன கதையம்சங்கள் மட்டுமல்ல, அவற்றைக்கூடத் தீர்மானிக்கும் காரணிகளான 'பார்வை'களுமாகும் என்பதை உய்த்துணரலாம்.

படைப்பாளிகளை அவர்கள் கொண்டிருக்கும் பார்வைகளின் அடிப்படையில் பொதுவாக இரு வகைப்படுத்தலாம். தமது கால அரசியல் மற்றும் சமுதாயக் கட்டமைப்புச் சூழல்களின் வரையறைக்குள் நின்று கொண்டு அவற்றுக்கூடாக உலகை நோக்குபவர்கள் - ஒரு வகையினர். மேற்படி சூழல்சார் வரையறைகளைத் தாண்டி, பொது மானிடத்தில் தளத்தில் நின்று

(XV ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தும் விவகாரத்தில்
# இரட்டை வேடம் போட்டுச் சாதிக்கப்போவது என்ன?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கம் இப்போது மேற்கொண்டு முயற்சியை சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான செயற்பாட்டின் புதிய கட்டம் என்று பலரும் சொல்லுகிறார்கள்.

இனப்பிரச்சினை - தமிழர்பிரச்சினை - இந்த நாட்டில் கடந்த சுமார் ஐம்பது வருடங்களாகவே இருந்து வருகிறது. அதனைத் தீர்ப்பதற்காக காலத்துக்குக் காலம் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய, அவர்களின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வு எதனையும் எட்டமுடியவில்லை .

தமிழர்களுக்கு அவர்களின் பிறப்புரிமையான ஆட்சியுரிமையை முழு அளவில் வழங்குவதற்கு கொழும்பு அரசாங்கங்கள் விரும்பவில்லை. தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்காக உறுதியளித்து, அதன் பொருட்டு உழைப்பதற்கு முயற்சிப்பதாக மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றிய அரசுகள் காட்டிக் கொண்டன. அது உண்மை ஆனால் தமிழர்களும் சிங்களவர்களைப் போல தமது போட்டு தனது முயற்சியை அது மேற்கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது. அவ்வாறின்றி நடைபெறும் முயற்சி காலத்தைவீணே விழுங்கி ஆக்கபூர்வமான விளைவைத் தராமல் தோல்வியில் முடியும். ஆயினும் அரசு வகுத்துள்ள அட்டவணைப் பிரகாரம் காரியங்கள் நடைபெற்று தீர்வு ஒன்றை எட்ட முடியுமா என்பது கேள்விக்கு உரியதாகவே உள்ளது.

தீர்வு ஒன்றை காண்பதற்காக சந்திரிக்கா தலைமையிலான அரசாங்கம் அதிகாரப் பரவல் திட்டம் ஒன்றை தயாரித்து 1995 ஒகஸ்ட் மாதத்தில் மக்களுக்கு பகிரங்கப்படுத்தியது. அதனை ஆராய்ந்து கருத்திணக்கம் காண்பதற்காகவென சட்ட வரைபு ஒன்றை 1996 மார்ச்சில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது. நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஆராய்ந்த பின்னர் அது நகல் திட்டமாக 1997 ஒக்டோபரில் கட்சிகளிடையே கருத்திணக்கம் இல்லாமலே சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. சுமார் மூன்று வருடங்கள் கழிந்த போதிலும் எவ்வித பயனுமின்றி அந்த முயற்சி வீண் போனது.

இப்போதைய (புதியகட்ட) முயற்சி - நாடாளுமன்றத்திற்கு வெளியே பேசும் முயற்சி -

## முழுமையான மாநில சுயாட்சியை தமிழ்க்கட்சிகள் வற்புறுத்த வேண்டும்

இறைமையை அனுபவிக்க வகை செய்யும் ஒரு தீர்வைக் காண தெற்கின் தலைவர்கள் மனவிருப்பத்துடன் உழைத்தார்களா என்றால் இல்லை.

தமிழர்களுக்கு அரைகுறை உரிமைகளையே வழங்க வேண்டும்; வழங்க முடியும் என்ற உள்நோக்கத்துடனேயே சமாதான முயற்சிகள், தீர்வுமுயற்சிகள் நடைபெற்றன. கடந்த பல வருடங்களில் சிங்களத் தலைவர்களுக்கும் தமிழ் தலைவர்களுக்கும் இடையில் பல தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று ஒப்பந்தங்கள் கூட எழுதப்பட்டன. ஆனால் இனப்பிரச்சினைக்கு இரு தரப்பு (சிங்களவர் - தமிழர்) கருத்திணக்கம் கண்டு முழுமையான தீர்வு இன்னமும் காணப்படவில்லை.

1957 ஆம் ஆண்டில், சந்திரிக்காவின் தந்தை எஸ் டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவும் தமிழர் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகமும் கைச்சாத்திட்ட, பிரசித்தி பெற்ற பண்டா -செல்வா ஒப்பந்தம் தொடக்கம் -

1995 ஜனவரியில் தொடங்கிய சந்திரிக்கா அரசு-விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சு வரைக்கும் - சுமார் இருபதுக்கும் மேற்பட்ட தீர்வு முயற்சிகள் (பேச்சுகள், உடன்பாடுகள்) மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் எல்லாமே தோல்வியில் முடிந்தன. காரணம் - தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை அல்லது அவர்கள் விரும்பும் உரிமைகளை வழங்குவதற்குத் சிங்கள அரசாங்கங்கள், ஆட்சித்தலைவர்கள் உள்ளூர விரும்பவில்லை.

இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு என்பதால் சமஷ்டி ஆட்சி முறையே இலங்கைக்கு சிறந்த ஆட்சி முறை. அதன் மூலமே மக்கள் சமாதானமாகவும் அமைதியாகவும் இலங்கையில் வாழ முடியும் என்று 1920 ஆம் ஆண்டிலேயே வாதாடியவர் காலஞ் சென்ற எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா.

ஆனால் 1957 ஆம் ஆண்டில் தந்தை செல்வாவுடன் எழுதிக் கொண்ட ஒப்பந்தத்தில் வெறும் பிராந்திய சபைகளை மட்டுமே (கால்வாசி சமஷ்டி அளவையே) வழங்க அவர் முன்வந்தார். அவ்வாறிருந்தும் அந்த ஒப்பந்தம் கூடக் கிழித்தெறியப்பட்டு அவரும் சுட்டுக் கொல்லப்பட்டார்!

"முழு இலங்கைக்கும் உரிய தூய பிரசைகள் சிங்களவர்களே" என்ற மகா வம்ச மாயையைச் சிங்கள அரசியல் தலைவர்கள் மனத்தரிசனம் செய்து கொண்டிருப்பதாலும் பௌத்த மதகுருமார் அதனை தூண்டுவதாலுமே தமிழர்களுக்குரித்தான, அவர்கள் விரும்பும் ஆட்சியை வழங்க முடியவில்லை; அதன் காரணமாகவே இனப்பிரச்சினைக்கு இன்னமும்

**உள்ளும் புறமும்**
**குறுமுனி**

தீர்வுகாணப்படவில்லை. அதற்கான முயற்சிகள் பல கட்டங்களாக நடைபெற்றும் நற்பலன் எதுவும் இல்லை; முடிவில்லாமல் நீண்டு கொண்டு செல்கிறது.

அந்த வகையிலும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் இப்போதைய தீர்வு முயற்சியை புதிய கட்டம் என நோக்கலாம். அரசாங்கம் தனது தீர்வு முயற்சியை மூன்று மாதகாலத்திற்குள் முடித்துவிட வேண்டும் என அட்டவணைப்படுத்தி உள்ளது. காலவரையறை மூலம் தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் உரிமைகள் கிடைக்குமா என்பது முக்கியமான கேள்வி. வெறும் அதிகாரப்பரவல் தீர்வு தமிழர்களை இந்த நாட்டின் சமத்துவமான சமபிரஜைகள் என்ற நிலைக்காவது உயர்த்துமா என்பது அது வெளியான பின்னரே தெரியவரும். அரசாங்கத்தின் அதிகாரப் பரவல் திட்டத்திற்குப் புதிய வடிவம் கொடுக்கப்படுகிறது. எனினும் அது எவ்வாறு அமையும் என்று தெரியாமல் தமிழ்க்கட்சிகள் விழிக்கின்றன. வெறும் அதிகாரப் பரவல் திட்டம் தமிழர்களின் நீண்டநாளைய அரசியல் அபிலாசைகளைத் தீர்க்குமா என்பது சந்தேகமே!

வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகம் என்பது அங்கீகரிக்கப்பட்டு அவை ஒரு மாநிலமாக, நிரந்தரமாக இணைக்கப்பட்டு பூரண சுயாட்சியுரிமை வழங்கப்பட வேண்டும் என்பது தமிழ் மக்களின் ஆகக் குறைந்தபட்ச கோரிக்கையாக இருந்து வருகிறது. அதனையேனும் அரசின் புதிய தீர்வு வடிவம் நிறைவேற்றாதிருப்பின் தமிழ்க்கட்சிகளின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்? ஆனால் அவை என்ன செய்யப் போகின்றன என்பது குறித்து 'இரகசியம்' பேணி வருகின்றன. 'வந்த பின்னர் பார்ப்போமே, வடிவம் வெளியே தெரியாமல் நாம் என்ன செய்வது?' என்று இப்போதைக்கு தப்பிக்கொள்ளலாம். எப்போதும் திரைக்குப் பின்னால் நடித்துக் கொண்டிருக்க முடியாது. அரங்கிற்கு வந்து நடித்தால் மட்டுமே நடிகரின் கலைத்திறமையை ரசிகர்கள் (மக்கள்) மதிப்பிட முடியும்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தீர்வுத் திட்டத்தின் வடிவத்தை இன்னும் பத்து நாட்களில் - பதின்நான்காம் திகதி - வரைந்து முடித்துவிடும் என்று தகவல் ஒன்று தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னர் தமிழ் கட்சிகளின் வேளை வரும். அவர்கள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் புரிந்து கொண்டு செயற்படுவார்களா அல்லது தங்கள் தனிப்பட்ட கருத்துக்கு இணங்க நடந்து கொள்வார்களா அல்லது ஏமாற்றப்படுவார்களா என்பது அனேகமாக இன்னும் இரண்டு வாரங்களில் தெரிந்து விடும்.

"லண்டன் ரைம்ஸ்" பத்திரிகையின் புதுடில்லிச் செய்தியாளராக இருந்த பிரபல பத்திரிகையாளர் நெவில்லி மாக்ஸ்வெல், இலங்கை இனப்பிரச்சினை குறித்து கூறியதை இப்போது தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கு ஞாபகப் படுத்துவது பொருத்தம் என எண்ணுகிறோம்.

மக்ஸ்வெல் "லண்டன் கார்டியன்" பத்திரிகையில் 1995 இல் பின்வருமாறு எழுதியிருந்தார்:-

*தமிழ் மக்களை நாட்டின் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தும் சிங்களவர்களின் செயற்பாட்டை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பல தசாப்தங்களாகத் தோல்வி கண்டதாலேயே தமிழர்கள் தனிநாட்டுக்கான ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.*

*சில முன்னேற்றகரமான, ஆனால் இலகுவில் தேய்ந்துவிடக்கூடிய உரிமைகளை வழங்குவதால் அவர்களின் ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி விட முடியாது. அரசு வழங்கக் கூடிய அத்தகைய உரிமைகளை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களாயின் அவர்கள் பெற்ற பெரு வெற்றிகளையும் அனுபவித்த பெரு இன்னல்களையும் தூக்கி எறிந்து விடுவது போலாகும்.*

*எனவே உண்மையான சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் தமிழர்களுக்கு பூரண சுயாட்சி அதிகாரம் வழங்குவதற்கு சிங்கள மக்களின் இணக்கத்தை பெற்றால் மட்டுமே புலிகள் தமது தனிநாட்டுப் போராட்டத்தை கைவிடுவார்கள் என எதிர்பார்க்கலாம்* - என்பதாகும்.

பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் போது தமிழ்கட்சிகள் பூரணமாநில சுயாட்சிக்கேனும் வற்புறுத்தாவிடில் அவற்றால் தமிழ் மக்களுக்கு எதனைத்தான் சாதித்துவிட முடியும்?

சந்திரிகா அரசின் தீர்வு முயற்சிகளுக்கு தமது கட்சி ஒத்துழைக்கும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்துவிட்டார். ஆனால் அரசு தயாரிக்கவிருக்கும் புதிய தீர்வு வடிவத்துக்கு எந்த வகையில் அவரின் ஆதரவு இருக்கும் என்பது ஐக்கிய தேசியகட்சியுடன் பேசத்தொடங்கியதுமே தெரியவரும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஐக்கிய தேசியக் கட்சி தடையாக இருந்தது என்ற ஜனாதிபதியின் குற்றச்சாட்டை அடித்து விடும் அரசியல் தந்திரமாகவே ரணில் விக்கிரசிங்கா ஒத்துழைப்பு என்ற சீட்டைப் போட்டிருக்கிறார் என்று கருதலாம்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவதற்கு வகைசெயயும் சட்டத்தை அரசாங்கம் கொண்டுவராமல் தடுப்பதற்கு ரணில் போட்ட தடுப்புச் சீட்டாகவும் ஒத்துழைப்பு அறிவிப்புக் கருதப்படுகிறது. தேசிய அரசாங்கம் அமைக்கும் அரசின் முயற்சியையும் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு அவர் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கம் தனது தீர்வு வடிவத்தை ஐக்கிய தேசியக் கட்சியிடம் எடுத்துக் கொண்டு பேச்சு நடத்தப் போகும் போது கருத்திணக்கம் காண்பது இலகுவானதாக இருக்கப் போவதில்லை. பழைய நிலைமையிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி முற்றாக விலகி புதிய அணுகு முறையைக்கையாளுமா என்பது குறித்துத் தெளிவான தகவல் எதுவும் வெளியாகவில்லை. ஆகையால் ஆளும்தரப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் பேசும் போது பெரும் "பிடுங்குப்பாடு" உண்டாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவை ஒருபுறமிருக்க -

அரசாங்கம் தனது தீர்வு முயற்சிக்கென வகுத்த முந்திய அட்டவணையை மாற்றி அமைத்திருப்பது காலதாமதத்தை குறைக்கவே என்று சொல்லப்படுகிறது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் முதலில் ஆராய்ந்து கருத்திணக்கம் கண்டு, தீர்வு நகலைத் தயாரித்த பின்னர் தமிழ்க்கட்சிகள், ஐக்கிய தேசியக்கட்சி, விடுதலைப்புலிகளுடன் பேசி அவற்றின் ஆதரவைப் பெறுவது, அதன் பின்னரே நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுவது என்பதே அரசின் ஆரம்ப அட்டவணையாக இருந்தது.

ஆனால் அந்த அட்டவணையில் திடீரென ஒரு மாற்றம் செய்ய அரசு முடிவு செய்திருக்கின்றது. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் கருத்திணக்கம் கண்டதும் நாடாளுமன்றத்தில் நகல்தீர்வை சமர்ப்பித்து விவாதித்த பின்னரே விடுதலைப் புலிகளுடன் பேசுவது என்பது அந்தத் திருத்தம்.

காலதாமதத்தை குறைப்பதற்காகவே இந்தத் திருத்தம் என்று சொல்லப்பட்ட போதிலும் விடுதலைப் புலிகளுடன் பேசுவதை பின்போடும் எண்ணத்துடன் அரசு இதனை செய்திருப்பதாக நம்பப்படுகிறது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை அன்றி, அனுசரணையாளரின் உதவியுடன் பேசுவதில் விடுதலைப் புலிகளுக்கு அக்கறை குறைவாகவே உள்ளதாகத் தெரிந்து கொண்டே அரசு அட்டவணையில் மாற்றத்தை செய்ததாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.உண்மை எது என்பது தெரியவராமலா போய்விடும்?

இதேவேளை-

விடுதலைப் புலிகளுடன் பேச்சு என்று வரும் போது ஆயுதங்களை கீழே வைத்து விட்டுத்தான் வரவேண்டும் என்று அவர்கள் கேட்கப்படுவார்கள் - என்று ஜனாதிபதி அறிவித்திருப்பது, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றில்லாமல் அரசு - விடுதலைப் புலிகளின் பேச்சு நடைபெறுவது அசாத்தியமே என்பதனை உறுதிப்படுத்துகிறது.

போராடிக் கொண்டிருக்கும் இரண்டு தரப்புக்களுக்கிடையே பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு சுமுகமான, நம்பிக்கையான சூழ்நிலை தேவை. இரண்டு தரப்புக்களுமே பேச்சுவார்த்தை முடியும் வரை ஆயுதங்களைக் கீழே வைத்துப் போர்நிறுத்தம் செய்வதன் மூலமே பேச்சு வார்த்தைக்கு உகந்த பின்னணியைத் தோற்றுவிக்கலாம்.

அத்தகைய ஒரு சூழலை உண்டாக்குவதற்குப் பதிலாக, விடுதலைப் புலிகளை மட்டும் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டுப் பேச்சுக்கு வருமாறு கேட்கப் போவதாக ஜனாதிபதி அறிவித்திருப்பது அவர்களுடன் பேசுவதற்குத் தனக்கு - அரசுக்கு - விருப்பமில்லை என்பதனையே மறைமுகமாக எடுத்துச் சொல்வதாகும்.

ஜனாதிபதி தமது முதலாவது பதவிக் காலத்தில் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக ஒடுக்கிவிட்டு, அவர்களை ஓரங்கட்டி விட்டு, தமிழர் பிரச்சினைக்கு தாம் விரும்பிய தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதற்குத் (அதாவது திணிப்பதற்குத்) திட்டமிட்டார். இதனை அவர் அவ்வேளை வெளிப்படையாக கூட்டங்கள், மாநாடுகளில் கூறியும் வந்தார். அதே போல ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவில்லாவிடினும் தமது தீர்வுத்திட்டத்தை நிறைவேற்றப் போவதாக "புளுகினார்". அதன் பொருட்டு அரசமைப்புப் புரட்சி மற்றும் பல உத்திகள் தம்வசமுண்டு என்று அவர் வெளுத்து வாங்கியதும் உண்டு.

ஆனால் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு மக்கள் ஆணை வழங்கிய இந்த இரண்டாவது பதவிக்காலத்தில், அவை எல்லாம் சாத்தியமற்றவை என்பதனை உணர்ந்து கொண்டு, யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு செயற்பட முனைவதாக எல்லோரும் நினைத்தார்கள்.

மூன்று மாதகாலத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அவர் வரைந்த துரித அட்டவணையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வகை செய்தவர், திடீரென தனது முடிவை மாற்றிக் கொண்டிருக்கிறார்!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாயின், விடுதலைப் புலிகளுடன் பேசும் எண்ணம் உண்மையாகவே உண்டெனின், போர்நிறுத்தம் என்ற கதவு திறக்கப்பட வேண்டும் என்று கடந்த வாரம் இந்தப் பத்தியில் வலியுறுத்தி இருந்தோம்.

ஆனால் பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது என்பதனை ஜனாதிபதி படை அதிகாரிகளின் மாநாட்டில் வெளியிட்ட தகவல் தெளிவாகத் தொட்டுக்காட்டுகிறது.

விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பேச்சு நடத்துவதை தமிழ் பிரதேசங்களைக் கஷ்டப்பட்டு கைப்பற்றிய இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகள் விரும்பமாட்டார்கள். இராணுவ அதிகாரிகளின் அதிருப்தியைத் தேடினால் போரைத் தொடரமுடியாது. தோல்விக்கு அத்திவாரம் போடுவதாகி விடும் என்று ஜனாதிபதி நினைத்திருக்கக் கூடும். அதிகாரிகளின் மன நிலை பாதிக்கப்படும் விதத்தில் எதனையும் கூறாதிருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் இவ்வாறு கூறியிருக்கலாம்.

வடக்கு கிழக்கில் படையினர் கைப்பற்றிய எந்தவொரு பிரதேசத்தையும் ஒருபோதும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி கூறியிருப்பதும் படை உயர் அதிகாரிகளை உற்சாகப்படுத்தி போருக்கு ஊக்குவிக்கும் பாங்கினதே.

படை அதிகாரிகாரிகளின் மனங்களை வெல்வதற்காகவே ஜனாதிபதியின் இந்தக் கருத்து வெளிப்பாடுகள். அவர் போர்நாடும் தன்மையையே அவை வெட்ட வெளிச்சமாக்குகிறது அல்லவா?

எதிரணியில் இருந்த வேளை அப்போதைய ஐக்கியதேசியக் கட்சி ஆட்சியினர் இராணுவத்தின் தயவில் இருப்பதாகவும் இராணுவ அதிகாரிகளின் சொற்படி நடப்பதாகவும் இராணுவ அதிகாரமே மேலோங்கி இருப்பதாகவும் கூறியவர் சந்திரிக்கா.

இப்போது இராணுவத்தின் அதிருப்தியைத் தேடிக் கொள்ளக்கூடாது என்பதில் வெகு கவனமாக இருக்கிறார்.

ஒரு பக்கத்தில் இத்தகைய இருள் சூழ்ந்திருக்க -

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரச தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவே செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு மக்கள் ஆணையைப் பெற்ற பின்னரும் இப்படியும் ஓர் இரட்டைவேடம் தேவையா?

இதனால் எதனைச் சாதிக்கலாம்? தமிழர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக வைத்திருக்கும் பேரினவாத விருப்பத்தை நிறைவேற்றுவதை தவிர.

* * *

யாழ்ப்பாணத்தில் இவ்வார முற்பகுதியில் பாடசாலை மாணவர்கள் நடத்திய வகுப்புப் பகிஷ்கரிப்பு எல்லோரது கவனத்தையும் ஈர்த்த விவகாரமாக விளங்கியது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரியான மாணவியும், சகோதரரான மாணவனும் கொழும்பில் இருந்து வந்த விசேட புலனாய்வுக் குழுவினரால் கூட்டிச் செல்லப்பட்டதால் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக மாணவர்களின் வகுப்புப் பகிஷ்கரிப்பு இடம்பெற்றது.

அதனை ஆட்சேபித்து, மாணவர்கள் இருவரையும் விடுவிக்குமாறு கோரியே மாணவர் போராட்டம் நடத்தப்பட்டது.

மாணவர்களின் சக்தியே இரு மாணவர்களையும் இவ்வளவு விரைவில் யாழ்ப்பாணத்துக்குக் கூட்டிவருவதற்குக் காரணமாக இருந்தது. இல்லையேல் விசாரணை, பரிசோதனை என்ற பெயரில் அவர்கள் மேலும் பல நாள்கள் கொழும்பில் புலனாய்வுத்துறையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பர். உயர் அதிகாரிகள் எவ்வளவு கனிவாக, இதமாகக் கதைத்தாலும் மாணவர்கள் இருவரும் இம்சைகளுக்கு ஆளாகியிருப்பர். மாணவர்களின் அகிம்சைப் போராட்டத்தினால் அவர்கள் இருவரும் அதிலிருந்து தப்பினர் என்று கொள்ளலாம்.

மாணவர்களை கைதுசெய்தாலும் சரி விசாரணைக்குக் கூட்டிச் சென்றாலும் சரி அதிபருக்கும் பெற்றோருக்கும் அதுகுறித்து படைத்தரப்பினர் அறிவிக்கும் நடைமுறையிருப்பின் இத்தகைய போராட்டங்களுக்கு இடமிராது.

# ஜெயலலிதாவின் வலையில் மூப்பனார்!

# ஆதரவு முடிவு விஷப் பரீட்சை!!

## இடைத்தேர்தலில் 3 தொகுதிகளையும் கைப்பற்றுவதில் அ.தி.மு.க தீவிரம்

அண்ணா தி.மு.க - தமிழ் மாநில காங்கிரஸ் உறவினால் தமிழ் நாட்டு அரசியலில் கடந்தவாரம் புதிய திருப்பம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இம் மாதம் 17 ஆம் திகதி தமிழ் நாட்டில் நடைபெற உள்ள சட்டப் பேரவை இடைத்தேர்தல்களில் அண்ணா தி.மு.க. வேட்பாளர்களை ஆதரிக்கப்போவதாக தமிழ்மாநில காங்கிரஸ் தலைவர் மூப்பனார் அறிவித்துள்ளர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் மூன்று கூட்டணிகள் போட்டியிட்டன. ஒன்று பாரதீய ஜனதாவை உள்ளடக்கிய தி.மு.க. தலைமையிலான கூட்டணி. மற்றது காங்கிரஸை உள்ளடக்கிய அ.தி.மு.க தலைமையிலான கூட்டணி. மூன்றாவது த.மா.கா தலைமையிலான கூட்டணி.

மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க தலைமையிலான கூட்டணியும் த.மா.கா தலைமையிலான கூட்டணியும் தோல்வி அடைந்தன. இதன் பின்னரே அ.தி.மு.க கூட்டணிக்குள் த.மா.கா கூட்டணியைக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் ,முடுக்கி விடப்பட்டன.

மரியாதை நிமித்தமான சந்திப்பு என்ற பெயரில் மூப்பனார்வீடு சென்று ஜெயலலிதா மூப்பனாரைச் சந்தித்துப் பேசினார். பின்னர் படிப்படியாக இடம்பெற்றுவந்த அரசியல் சதுரங்கக்காய் நகர்வுகள் எதிர்வரும் சட்டப் பேரவை இடைத்தேர்தல்களில் அ.தி.மு.க வேட்பாளர்களை நிபந்தனை எதுவும் இன்றி த.மா.கா ஆதரிக்கும் நிலைக்கு கொண்டுவந்து விட்டுள்ளது.

எந்த அ.தி.மு.கவுடன் காங்கிரஸ் சேருவதை எதிர்த்து த.மா.கா பிறந்ததோ அதே அ.தி.மு.கவுக்கே ஆதரவு வழங்கும் மூப்பனாரின் அறிவிப்பு சிறிது எதிர்பார்க்கப்பட்டது என்றாலும் தமிழக அரசியலில் இது பரபரப்பை ஏற்படுத்தி விட்டுள்ளது.

### மக்கள் விரோதக் கட்சி எது?

மத்திய, மாநில அரசுகளின் போக்கு மக்கள் விரோதப் போக்காக இருப்பதால் அதனை எதிர்க்க வேண்டும் என்பதே த.மா.கா தலைமையிலான கூட்டணிக் கட்சிகளின் பொதுவான உணர்வாக இருக்கிறது என்று அ.தி.மு.க. கவை ஆதரிக்கும் தமது முடிவுக்கு நியாயம் கற்பிக்கிறார் மூப்பனார். இதற்கு தி.மு.க தலைவர் கருணாநிதி பதில் அளித்துள்ளார். "மக்களுக்கு விரோதமாக நாங்கள் நடந்து கொண்டது 1996 மார்ச் 31ஆம்திகதி தான்" என்கிறார் கருணாநிதி. 1996மார்ச் 31ஆம்திகதி தான் தி.மு.க.வும் த.மா.காவும் கூட்டணி அமைக்கும் ஒப்பந்தத்தைச் செய்திருந்தன. 1996 மக்களவைத் தேர்தலில் தி.மு.க. - த.மா.கா கூட்டணி மிகப்பெரிய சக்தியாக வடிவெடுத்தது நினைவிருக்கலாம்.

1996 மக்களவைத் தேர்தலுக்கு முன் தமிழக காங்கிரஸ் தலைவர் களின்ஒருமித்த ஆட்சேபனையையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு ஊழல் கட்சியான அ.தி.மு.கவுடன் அப்போதைய பிரதமர் நரசிம்மராவ் தேர்தல் கூட்டணி அமைத்தார். இதனை எதிர்த்து உதயமானதே த.மா.கா.

தமிழகத்தை ஊழல் ஆட்சியில் இருந்தும் பண்பாட்டுச் சீரழிவிலிருந்தும் காப்பாற்றுவதற்கே இந்த புதிய கட்சியை தொடங்கியதாக அப்பொழுது மூப்பனார் கூறினார்.

ஆனால் அ.தி.மு.க.வுக்கு ஆதரவு வழங்கப்போவதாக மூப்பனார் அறிவித்தது மூலம் சந்தர்ப்பவாத அரசியலுக்கு தாமும் விதிவிலக்கு அல்லர் என்பதை வெளிகாட்டிவிட்டார்.

### இடைத்தேர்தல்களில் வெற்றியாருக்கு?

எதிர்வரும் 17 ஆம் திகதி தமிழ் நாட்டில் மூன்று சட்டப்பேரவைத் தொகுதிகளில் இடைத்தேர்தல்கள் நடைபெறுகின்றன. அறந்தாங்கி, திருச்சி-2, நெல்லிக்குப்பம் ஆகியவையே இந்த மூன்று தொகுதிகளும் ஆகும்.

த.மா.கா தமது கட்சியுடன் பகிரங்கமாக கூட்டணி அமைக்கும் பட்சத்தில் நெல்லிக்குப்பம் தொகுதியை த.மா.கா வேட்பாளருக்கு விட்டுக் கொடுக்கத் தயார் என்று ஜெயலலிதா அறிவித்திருந்தார். ஆனால் மூப்பனார் இதற்கு இணங்கவில்லை.

அ.தி.மு.க கூட்டணியில் பகிரங்கமாக இணைந்து செயற்பட மூப்பனார் இன்னும் தயார் இல்லை. நெல்லிக்குப்பம் சட்டப் பேரவைத் தொகுதியை உள்ளடக்கிய சிதம்பரம் மக்களவைத் தொகுதியில் கடந்த தேர்தலில் தமிழகசிறுத்தைகள் அமைப்பு வேட்பாளர் ஆர்.திருமாவளவன் சுமார் இரண்டு லட்சம் வாக்குகளைப் பெற்றிருந்தார். மக்களவைத் தேர்தலில் த.மா.கா அணியில் மிகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றவர் இவர் தான். இதனால் தான் நெல்லிக்குப்பம் சட்டப் பேரவைத் தொகுதியை நிபந்தனையுடன் த.மா.காவுக்கு விட்டுக் கொடுக்க ஜெயலலிதா முன்வந்தார்.

### புதிய தமிழகம் தனித்துப் போட்டி

கடந்த மக்களவைத் தேர்தலில் த.மா.கா. தலைமையிலான மூன்றாவது அணியில் போட்டியிட்ட கட்சிகளில் புதிய தமிழகம் கட்சி மட்டும் வெளியல் நிற்கின்றது. விடுதலைச் சிறுத்தைகள் அமைப்புஉட்பட ஏனைய கட்சிகள் மூப்பனாரின் த.மா.கா அணியிலேயே இன்னும் இருந்து வருகின்றன. இந்த இடைத்தேர்தல்களில் புதிய தமிழகம் கட்சி மூன்று தொகுதிகளிலும் தனது வேட்பாளர்களை நிறுத்தி உள்ளது.

தி.மு.க. இருதொகுதிகளில் தனது வேட்பாளர்களை நிறுத்தி இருக்கிறது. ஒரு தொகுதியை தனது கூட்டணியில் உள்ள எம். ஜி.ஆர். அ.தி.மு.க.வுக்கு விட்டுக்கொடுத்துள்ளது.

இந்த சட்டப்பேரவை இடைத்தேர்தல்கள் தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தப்போவதில்லை. ஆனால் மத்திய மாநில அரசுகளின் போக்குக் குறித்து தமிழக மக்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை வெளிக்காட்டப் போகின்றன. மத்திய, மாநில அரசுகளின் கடந்த நான்கு மாதகாலச் செயற்பாடுகள் இந்தியாவின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.


கடந்த ஆண்டு மக்களவைத் தேர்தல் நடைபெற்ற சமயம் தமிழ் நாட்டில் அப்பொழுது வெற்றிடமாக இருந்த இரு சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல்கள் நடத்தப்பட்டன. மக்களவைத் தேர்தலில் தோல்வியை சந்தித்த அ.தி.மு.க தலைமையிலான கூட்டணி சட்டப் பேரவைத் தொகுதிகள் இரண்டிலும் வெற்றி பெற்றிருந்தது. அ.தி.மு.க தலைமையிலான கூட்டணியில் இடம்பெற்றுள்ள தமிழ்நாடு காங்கிரஸுக்குள் கோஷ்டிப் பூசல்கள் அதிகரித்துள்ள நிலையிலும் த.மா.காவின் ஆதரவுடன் எதிர்வரும் இடைத்தேர்தலில் மூன்று தொகுதிகளையும் கைப்பற்றி விட முடியும் என்று ஜெயலலிதா கருதுகிறார். தமிழ்நாடு காங்கிரஸில் திண்டிவனம் இராமமூர்த்தியின் தலைமைக்கு கடும் எதிர்ப்பு இருந்து வருகிறது. தற்போதைய இடைத்தேர்தல் நாள்களில் கோஷ்டிப் பூசல்களால் காங்கிரஸ் பலவீன அடைந்திருப்பது அ.தி.மு.க. கூட்டணிக்கு ஒரு பின்னடைவு எனலாம்.

### பாண்டிச்சேரியில்

தமிழ் நாட்டில் இம்மாதம் 17 ஆம் திகதி இடைத்தேர்தல்கள் முடிவடைந்த கையோடு பாண்டிச்சேரியில் மாற்று அரசு அமைப்பது முக்கிய இடத்தை வகிக்கப்போகிறது.

பாண்டிச்சேரியில் இதுவரை தி.மு.க. - த.மா.கா கூட்டணி அரசு பதவியில் இருந்து வந்தது. தமிழ் நாட்டில் தி.மு.க - த.மா.கா. கூட்டணி இருந்தசமயம் பாண்டிச்சேரியில் ஏற்பட்டதுதான் தி.மு.க.- த.மா.கா கூட்டணி அரசு.

கடந்த மக்களவைத் தேர்தலின் போது பாரதீய ஜனதாக் கட்சியுடன் தி.மு.க கூட்டணி வைத்துக் கொண்டதை ஆட்சேபித்து தி.மு.க கூட்டணியில் இருந்து த.மா.கா விலகிக் கொண்டது. கடந்த மக்களவைத் தேர்தலில் தி.மு.க தலைமையிலான கூட்டணிக்கும் அ.தி.மு.க தலைமையிலான கூட்டணிக்கும் அடுத்ததாக மற்றொரு கூட்டணி அமைத்து மூன்றாவது அணியாக அது போட்டியிட்டது. எனினும் த.மா.கா. தலைமையிலான கூட்டணியினால் ஒரு தொகுதியிலாவது வெற்றி பெற முடியவில்லை. தமிழ் நாட்டில் தி.மு.க - த.மா.கா கூட்டணி உடைந்த கையோடேயே பாண்டிச்சேரியிலும் கூட்டணி உடைந்து தி.மு.க. தலைமையிலான பாண்டிச்சேரி அரசு வீழ்ந்து விடும் என்று கருதப்பட்டது. ஆனால் அப்படி நடைபெறவில்லை.



பாண்டிச்சேரியில் தி.மு.க ஆட்சிக்கு அளிக்கும் ஆதரவை விலக்கிக் கொண்டு ஆட்சியைக் கவிழ்ப்பதுதான் த.மா.காவின் நோக்கமாக இருந்திருந்தால் ஆட்சிக் கவிழ்ப்பு அப்போதேயே இடம் பெற்றிருக்கும்.

ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு தனது தலைமையில் மாற்று அரசு அமைக்கவே த.மா.கா விரும்பியது.

**உலக உலா**
**என்.பி.சீலன்**

மாற்று அரசு அமைப்பதற்கு பாண்டிச்சேரியில் தி.மு.க.வுக்கு அடுத்தாக பெரிய கட்சியாக உள்ள காங்கிரஸின் ஆதரவு தேவை.

இந்த நிலையில் தி.மு.க அரசுக்கு அளித்துவந்த ஆதரவை த.மா.கா விலக்கிக் கொண்டுவிட்டது. ஆதரவை த.மா.கா விலக்கிக் கொண்ட நிலையிலும் பாண்டிச்சேரியில் தி.மு.க வின் சிறுபான்மை அரசு இன்னும் நீடிக்கவே செய்கிறது. மாற்று அரசு அமைப்பதில் த.மா.காவுக்கும் காங்கிரஸுக்கும் இடையில் உடன்பாடு ஏற்படாததே இதற்குக் காரணம்.

### முதலமைச்சர் பதவிக்குப் போட்டி

தி.மு.க அரசு கவிழ்க்கப்பட்டு மாற்று அரசு ஒன்று ஏற்படத் தவறுமானால் பாண்டிச்சேரி சட்டப்பேரவை கலைக்கப்பட்டு விடும். இன்றைய நிலையில் த.மா.காவோ அல்லது காங்கிரஸோ அங்கு தேர்தலுக்கு தயார் இல்லை. பாண்டிச்சேரியில் மாற்று அரசு ஒன்றை ஏற்படுத்துவதில் காங்கிரஸுக்கும் த.மா.காவுக்கும் இடையில் இணக்கம் ஏற்படாததுக்கு காரணம் முதலமைச்சர் பதவியே.

மாற்று அரசு அமைக்கப்படும் போது முதலமைச்சர் பதவி தனக்கே தரப்பட வேண்டும் என்கிறது த.மா.கா. பாண்டிச்சேரி மாநில முன்னாள் அமைச்சர் பி.கண்ணனை முதலமைச்சராக்க த.மா.கா விரும்புகிறது.

தி.மு.க - த.மா.கா கூட்டணி அரசில் அமைச்சராக இருந்த பி.கண்ணன் கடந்த மக்களவைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அமைச்சர் பதவியை இராஜினாமா செய்திருந்தார். தி.மு.க - த.மா.கா கூட்டணி அரசில் த.மா.காவுக்கு இரு அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டிருந்தன. சி.ஜெயக்குமார் கூட்டணி அரசுக்கான ஆதரவை த.மா.கா விலக்கிக் கொள்ளுமவரை அமைச்சராகப் பதவியில் இருந்தார்.

பாண்டிச்சேரி சட்டப்பேரவையில் தி.மு.க வுக்கு அடுத்தாக பெரிய கட்சி காங்கிரஸ் ஆகும். ஆகவே மாற்று அரசு ஏற்படும் பட்சத்தில் காங்கிரஸுக்கே முதலமைச்சர் பதவி வழங்கப்படவேண்டும்.

ஆனால் தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையில் முக்கிய பங்கு வகித்ததால் முதலமைச்சர் பதவி தனக்கே வழங்கப்பட வேண்டும் என்று த.மா.கா கோடுகிறது. தனது கட்சியின் முதலமைச்சர் யார் என்பதை காங்கிரஸ் இன்னும் தெரிவிக்கவில்லை.

### காங்கிரஸின் நோக்கம்

பாரதீய ஜனதாக் கூட்டணிக்கு எதிரான கட்சிகள் தமிழ்நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் ஒரே அணியில் செயற்படுவதையே காங்கிரஸ் விரும்புகிறது. காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாட்டுப் பொறுப்பாளராக சோனியா காந்தியினால் நியமிக்கப்பட்டுள்ள குலாம் நபி அஸாத் கடந்த பதினோராம் திகதி சென்னை வந்து மூப்பனாரைச் சந்தித்தார்.

இதற்கு முன்னர் த.மா.காவின் பாண்டிச்சேரி விவகாரங்களுக்குப் பொறுப்பான எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம், பாண்டிச்சேரி காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான வி.நாராயணசாமி ஆகியோர் புதுடில்லி சென்று சோனியாகாந்தி உட்பட காங்கிரஸ் தலைவர்களுடன் பேச்சு நடத்தி இருந்தனர். ஆனால் இன்னும் பாண்டிச்சேரியில் முதலமைச்சர் பதவிக்கு எவரை நியமிப்பது என்ற பிரச்சினை தீர்ந்தபாடில்லை.

முதலமைச்சர் யார் என்பதில் காங்கிரஸுக்கும் த.மா.காவுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்ட பின்னரே பாண்டிச்சேரியில் தற்பொழுது பதவியில் இருக்கும் சிறுபான்மை தி.மு.க அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டு வரப்படும்.

பாண்டிச்சேரி நிலைமை, தமிழ் நாட்டில் த.மா.காவின் காங்கிரஸ் ஆதரவு நிலைப்பாடு ஆகியவை தி.மு.க தலைவர் கருணாநிதிக்கு இக்கட்டான நிலைமையை உருவாக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

பாண்டிச்சேரியில் தி.மு.க தலைமையிலான கூட்டணி அரசு உடையமாட்டாது என்றே கருணாநிதி நம்பி இருந்தார்.

பாண்டிச்சேரியில் உள்ள பல உள்ளூராட்சி மன்றங்களில் தி.மு.க- உறுப்பினர்களின் ஆதரவுடனேயே த.மா.கா ஆட்சி நடைபெறுகிறது. தி.மு.க - த.மா.கா கூட்டணி உடையும் பட்சத்தில் உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆட்சிக்கவிழ்ப்புகள் இடம் பெறலாம்.

மூப்பனாரைப் பொறுத்தவரை பாண்டிச்சேரியில் த.மா.கா தலைமையில் ஆட்சியை ஏற்படுத்துவது மூலம் அரசியலில் இழந்து போன செல்வாக்கை மீண்டும் கட்டி எழுப்ப தளம் அமைக்க முடியும் என்று கருதுகிறார்.

தலைக்கு மேலே வெள்ளம் வந்தால் சாண் என்ன முழம் என்ன என்ற நிலையிலேயே மூப்பனார் இது வரை கட்டிக்காத்து வந்த அரசியல் நாணயத்தை காற்றில் பறக்கவிட்டு அ.திமு.கவுக்கு ஆதரவு தர முன் வந்திருக்கிறார்.

### ஜெலலிதா முந்திவிட்டார்

தம் மீதான முக்கிய ஊழல் வழக்குகளில் ஒன்றின் நீதிமன்றத் தீர்ப்பு வெளியாகும் முன்னர் த.மா.காவின் ஆதரவைப் பெறுவதில் ஜெயலலிதா முந்திக்கொண்டு விட்டார் என்றே கருதப்படுகிறது.

கொடைக்கானல் 'பிளசென்ட் ஸ்டே' ஹோட்டல் வழக்கில் ஜெயலலிதாவுக்கும் முன்னாள் அமைச்சர் செல்வகணபதிக்கும் மற்றும் இருவருக்கும் கடந்த புதன்கிழமை சிறப்பு நீதிமன்றம் ஒரு வருட கடுழியச் சிறைத்தண்டனை விதித்தது. தீர்ப்பு வெளியாக முன்னர் மூப்பனாரை தனது வலைக்குள் விழுத்திவிட்டார் ஜெயலலிதா.

ஏற்கனவே நிலக்கரி இறக்குமதி ஊழல்வழக்கு, ரான்ஸி நிலபேரம் தொடர்பான வழக்கு ஆகியவற்றில் இருந்து ஜெயலலிதா விடுவிக்கப் பட்டிருந்தார். இதேபோன்று கொடைக்கானல் 'பிறசெண்ட் ஸ்டே' ஹோட்டல் வழக்கில் இருந்தும் ஜெயலலிதா தப்பிவிடுவார் என்றே மூப்பனார் கருதி இருக்கலாம்.

ஜெயலலிதா மீது வேறு இரு ஊழல் வழக்குகளும் தற்பொழுது சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றன. ஒன்று கலர் ரீ.வி கொள்வனவில் பத்தரைக்கோடி இந்திய ரூபா மோசடி வழக்கு மற்றது 66 கோடியே 65லட்சம் இந்திய ரூபா சொத்துச் சேர்ந்த வழக்கு.

இத்தகைய நிலையில் மூப்பனார் எடுத்துள்ள அ.திமு.க ஆதரவு நிலைப்பாடு ஒரு விஷப்பரீட்சை என்றே கூறவேண்டும். *

# என் பிரிய பூமிக்காக...

**விஞ்ஞான ரீதியான கற்பனைத் தொடர்**

**ச.குமுதினி**
(சங்கத்தானை)

(11)

காடு பிரமாண்டமாய் விரிந்திருந்தது. பெரிதாய்க் குடை விரித்த தாவரங்களின் நிழலின் கீழ் ஆயிரமாயிரமாய்ச் சின்னச் செடிகள்; படர்ந்து தவழும் கொடிகள்; காற்றில் அசையும் சிறுபுற்கள்...

சியாராவின் தீர்மானப்படி முதல் நாள் நாசகாரிகளின் ஊர்தி இறங்கிய இடத்தை மையமாகக் கொண்ட சிறுபிரதேசத்தை ஆராய்வது என்று அவர்கள் முடிவு செய்து கொண்டார்கள். நால்வரும் திசைக்கொன்றாய்ப் பிரிந்து நடக்கத் தொடங்கினார்கள்...

சிசிலியாவுக்குத் தாவரங்களை இனங்காண்பது இலகுவானதாகவும் மகிழ்வுக்குரியதாகவும் இருந்தது.



என்றோ ஆர்வத்தின் பொருட்டு சிறப்புப் பட்டத்திற்காகத் தேர்ந்தெடுத்த சூழல் விஞ்ஞானம் இன்று பயன்பாடு உள்ளதாக அமைவது குறித்து அவளுள்ளத்தில் திருப்தி நிரம்பிற்று.

என்ன அருமையான இயற்கையின் படைப்பு! பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பரிபாலிக்கின்ற கர்வம் ஏதும் இல்லாமல் இரகசியமாய் ஒளித்து நிற்கின்ற காடு! இந்த அருமையான வனங்களை அவர்கள் அழிக்க முயல்வதன் நோக்கம் யாதாக இருக்கலாம்? கேள்வி மிகப் பெரிதாய் விரிந்தது.

மெலிதாய் பரவிய அச்சத்தைத் தவிர்த்து, தாவரங்களை மிகக் கூர்மையாக அவதானித்தபடி தொடர்ந்து நடந்தாள்...அச்சம் அவசியமற்றது. தோளில் தொங்கும் பையினுள் ஒரு திடீர் எதிர்ப்பைச் சமாளிக்கத்தக்க கருவிகள் அநேகமாய் இருந்தன.

வழியில் தெரிந்த சின்னத் தாவரங்களை அலட்சியப்படுத்தி நடந்தாள்... அன்று காலை, வரும் வழியில் சந்தித்தது போன்ற அழிவுக்குட்பட்ட வகைத்தாவரங்களின் குடும்பத்தைச் சார்ந்த தாவரங்கள் ஏதும் தென்படுகின்றனவா என விழிகள் தேடின. நேரம் நகர்ந்து கொண்டிருந்தது.

தாவரங்களின் அடிப்பகுதிகளையும் அதன் உச்சிப் பகுதிகளையும் மாறிமாறிப் பார்த்ததில் கழுத்து வலிக்கத் தொடங்கியிருந்தது. சிறிது நேரம் தரையில் அமர்ந்து கழுத்துத் தசைகளுக்கு ஓய்வு கொடுக்கவேண்டியது அவசியமாயிற்று.

தான் நின்ற இடத்தைச் சுற்றி, உட்காருவதற்கு ஏற்ற இடத்தைத் தேடினாள் சிசிலியா... அப்பொழுது...

அவளின் இடதுபுறமாகச் சற்றுத் தூரத்தில் அமைப்புக் குலைந்திருந்த சின்னச்செடிகளின் தொடர்ச்சி அவள் கவனத்தை ஈர்த்தது. ஆர்வமாய் அருகில் சென்றாள் சிசிலியா.

சின்னச் செடிகள் தண்டுகள் நடுவில் முறிந்திருக்கத் தரையில் தொங்கியபடியிருந்தன. தண்டுப் பகுதிகள் பாரிய அழுத்தத்திற்குட்பட்டவையாய் நசிந்து போயிருக்க இலைகள் மெலிதாய் வாடியிருந்தன. இலைகளின் பசுமை தாவரம் அன்றோ முதல் நாளோதான் அழிவைச் சந்தித்திருக்க வேண்டும் என்பதைக் கூறிற்று.

அவள் அந்த முறிந்து தாவரங்களின் தொடர்சியை அவதானித்தபோது அவை நேர்கோடாய் தொடர்ந்து நீண்டுகொண்டு செல்வது தெரிந்தது.

கழுத்து வலிமறந்து போனது. 'இந்தப் பாதையில் யாரோ சென்றிருக்கிறார்கள்.காட்டு விலங்குகளாயும் இருக்கலாம்...ஆனால் விலங்குகளின் கால் பட்டால் தாவரங்கள் இவ்வாறு நசுங்கிச் சப்பையாவதில்லையே..'

இன்னும் தெளிவாய் ஆராய்ந்த போது நிச்சயமாய்க் காட்டு விலங்குகளின் சுவடு அல்ல என்பது புரிந்தது. அட! அது எங்கே ஆரம்பித்தது என்பது தெரியாமற் போய்விட்டதே...தரைச்சுவட்டைப் பற்றி இது வரை கவனிக்காமல் இருந்து விட்டேனே...? மெலிதாய் வருத்தம்தோன்றிற்று.

'நிச்சயமாய் யாரோ நடந்து சென்றிருக்கிறார்கள்...இரண்டு மூன்று நாள்களினுள்ளே...அது யார்? எங்கிருந்து எங்கே சென்றிருக்கிறார்கள்...? அந்தச் சுவட்டைப் பின்பற்றுவது என முடிவு செய்தாள். மிக எச்சரிக்கையுடன் தொடர்ந்து நடந்தாள். ஆபத்து எங்கும் ஒளிந்திருக்கலாம்!

சில இடங்களில் சிறு செடிகள் குறைந்து சருகுகள் நிறைந்திருந்த இடங்களில் சுவடு தொடர்பற்றுப் போயினது... சற்றுத் தூரத்தில் மீண்டும் ஆரம்பித்தது...காட்டினுள் பகுதி நோக்கித் தொடர்ந்து. மெல்லத் தலை காட்டிய அச்சத்தை விலக்கிச் சிசிலியா நடந்தாள்...

சருகுகள் செறிவாய்ப் பரந்திருந்த ஓரிடத்தில் சுவட்டின் அடையாளம் அற்றுப் போயிருந்தது... சுற்றிலும் சற்றுத் தூரம் வரை தேடிய போது தொடர்ந்து சென்றதற்கான அடையாளம் ஏதும் இருக்கவில்லை.

'அப்படியானால் இதன் பிறகு மேலே செல்லவில்லை என்று அர்த்தமாகிறது. அவ்வாறெனில் இங்கு தான் அவர்கள் கவனத்தை ஈர்க்கத்தக்க விடயம் இருக்க வேண்டும்...!'

அந்த இடத்தில் நின்றபடியே நிதானமாய்ச் சூழலை ஆராயத் தொடங்கினாள். கிழக்குப்புறம் எந்தச் சலனமுமற்றுப் புதர்களால் நிறைந்திருந்தது. விழிகளைத் திருப்பிக் கொண்டு வந்தபோது... மகிழ்வின் சாரலொன்று எழுந்து மறைந்தது...

காலையில் பயணத்தின் போது வழியில் கண்ட அதே வகைத் தாவரங்கள்...! கூட்டம் கூட்டமாய் மஞ்சளாய் வாடி இறந்து கொண்டிருந்த அதே குடும்பத்தைச் சார்ந்த தாவரங்கள்...! 'அப்படியானால் அவர்கள் தான் இங்கு வந்திருக்கிறார்களா?'

அத்தாவரக் கூட்டம் நோக்கிச் சென்றாள்... வெளித்தோற்றத்தில் பொது இயல்புகளோடு எந்தவித மாறுதலுமற்று சின்னச்சின்ன இலைகளால் காற்றில் தாளமிட்டவாறு இயல்பாய் உச்சிவரை நீண்டிருந்தன.

இன்னும் அருகே சென்றாள்... தாவரங்களின் அடிப்பகுதியில் ஏதேனும் சுவடுகள் உள்ளனவா என ஆராய்ந்தாள்... சருகுகள்... சருகுகள்.., சுவடுகள் ஏதும் தென்படவில்லை. இன்னும் உள்நோக்கி நடந்தபோது...

ஓரிடத்தில் மண் கிளறுண்டிருக்கச் சருகுகள் ஈரமண்ணைச் சுமந்து முழுதாகவும் பகுதியாகவும் மறைந்திருந்தன. சுற்றிலும் பார்த்தபோது இன்னும் பல இடங்களில் அவ்வாறு மண் கிளறுண்டு இருப்பது புரிந்தது.

தோள்பையை நிலத்தில் வைத்து அருகிலிருந்த கிளறப்பட்ட மண்ணை ஆராய முடிவு செய்தாள்... அச்சந்தரும் சூழலை நினைவுகளிலிருந்து விலக்கித் தரையில் மண்டியிட்டு அமர்ந்திருந்தாள். ஓர் இடத்தில் கையுறையை அணிந்து கிளறப்பட்ட மண்ணை மெதுவாய்த் தட்டித் தட்டி நகர்த்தினாள். இன்னும் இரு இடங்களில் இதேவிதம் செய்ய மேற்படை மண் மட்டுமே கிளறுப்பட்டிருப்பது தெரிந்தது. கீழே மண் அடுக்குக் குலையாமல் உறுதியாய் இருந்தது. குறிப்பிட்ட வகைத் தாவரத்தின் வேர்கள் பரந்துள்ள இடத்திலேயே மண்ணைக் கிளறியிருப்பதும் புரிந்தது.

"மண்ணைக் கிளறி ஏதேனும் எடுத்திருக்க வேண்டும்...அல்லது புதைத்திருக்க வேண்டும்... எடுப்பதற்கு இந்த மேற்படை மண்ணில் என்ன இருக்க முடியும்...? அப்படியெனில் புதைத்திருக்கிறார்களா...? வேண்டாம்...அவசரம் வேண்டாம்... நிதனமாக ஆராய்வதே நல்லது.."

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. ஒவ்வொருமண்கிளறலாய் ஆராய்ந்து கொண்டிருந்தாள் சிசிலியா... வேர்ச் சிறுகணுக்கள் எனப்படும் உருவவியல் அமைப்புள்ள தாவரங்களே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தன என்பது நிச்சயமாய்ப் புரிந்து போயிற்று. தவிர கண்ணுக்குத் தெரிவதாய் அசாதாரணமான எந்த இயல்பும் அம்மண்ணில் இல்லை.

படீரென்று நினைவில் ஒரு மின்னல் வெட்டிற்று... ஒருவேளை வெற்றுக் கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய ஏதேனுமாக இருக்க முடியுமா...? அவ்வாறெனில் இந்த மண் மாதிரியைக் கொண்டு சென்றுதான் ஆராய வேண்டும்...

சில மண் கிளறல்களிலிருந்து மண் மாதிரியைச் சேகரித்துத் தோள் பையில் நிரப்பிக் கொண்டாள்... தூக்கியபோது கனம் தோளை இழுத்தது.. இப்போது புறப்பட்டால்தான் இருட்டமுன் ஆரம்ப இடத்தைச் சென்றடையலாம்...

'ஏறக்குறைய நாசகாரிகள் வந்த சுவடுதான் இது என்பதை நம்பமுடிகின்றது... என் பயணம் தொடங்கிய இடமும் அவர்கள் ஊர்தி இறங்கிய இடமும் ஒன்றாயிருப்பதால்... சுவட்டைத் தொடர்ந்து செல்வது என் ஊகங்களை முழுமையாய் நிரூபிக்க உதவும்...'

சிசிலியா தோளில் கனக்கும் சுமையுடன் தாவரங்கள் முறிந்து நசிந்து உருவாகியிருந்த சுவட்டின் வழியே நடக்கத் தொடங்கினாள்... பாதை முன்னே நீண்டு கொண்டு சென்றது. மனத்தில் அச்சமும் ஆர்வமும் போட்டியிட்டுக் கொண்டிருந்தன.

நிக்கலஸிற்குச் சலிப்பாக இருந்தது. அவன் சென்றதிசையில் ஆரம்பத்தில் எந்த அசாதாரணத்தன்மையும் இருக்கவில்லை. இன்னும் உள்ளே போக ஓரிடத்தில் கூட்டமாய் மஞ்சள் நிறமாகி ஏறக்குறைய இறந்திருப்பது தெரிந்தது.

நிக்கலஸிற்குத் தவாரங்கள் பற்றிய விசாலமான அறிவு சிசிலியா போல இல்லாததும் அவனுடைய மேலதிக ஆராய்வுக்குத் தடையாய் இருந்தது. சிக்கல் நிறைந்த இரசாயனச் சேர்வைகளுடன் அவனது ஆராய்ச்சி நாள்கள் செலவாக்கப்பட்டிருந்தன.

கூர்ந்து கூர்ந்து தாவரங்களை நோக்கியதில் ஒன்று மட்டும் புரிந்தது. சிசிலியா சொன்னது உண்மை.

ஒரே குடும்பத் தாவரங்கள் மட்டுமே உருகுலைந்து இருக்கின்றன. 'இனித் திரும்ப வேண்டியதுதான்' நிக்கலஸ் சுற்றுமுற்றும் பார்த்தவாறே நடந்தான். அருமையான இயற்கைப் பொக்கிஷம் இந்தக் காடு!

காலில் ஏதோ 'ணங்'கென்று தட்டுப்பட்டதாய் உணர்ந்தான். குனிந்து பார்த்த போது...

சிறிய வெண்ணிறமான உலோகப் பெட்டி மூடப்பட்டிருந்தது. தோள்பையிலிருந்து கதிர்வீச்சை உணரும் கருவியை எடுத்து பெட்டியின் அருகே வைத்து இயக்கினான். எந்தவிதக் கதிர்களும் அப்பெட்டியிலிருந்து விடுவிக்கப்படவில்லை என்பது உறுதியாயிற்று.

ஓரமாயிருந்த திறக்கும் முனையினை அழுத்தப் பெட்டி திறந்து கொண்டது. உள்ளே...

வெண்ணிறமான நீள் வட்டமான உருளைவடிவமான சின்னச்சின்ன அமைப்புக்கள்!வில்லைகள் போன்ற அமைப்புக்கள்... நிக்கலஸ் எதுவும் புரியாமல் அவற்றில் ஒன்றை எடுத்தான். மிக நுணுக்கமாய் அவதானித்த போது வித்தியாசம் புரிந்தது.

ஆம்! ஒரு முனை சற்றே கூம்பி இரு சின்னக் கறுப்புப் புள்ளிகளும் ஒரு சின்ன குறுகிய மெலிதான வெளிநீட்டம் போன்ற அமைப்புமாய்... ஏதேனும் உயிரியாய்... உயிரியெனின் அசைவு, சுவாசம் உணர்தலேதுமற்று இப்படித் திடவில்லை போன்று இருக்க முடியாதே!

தீர்மானம் ஏதும் இல்லாமற் போக அதையும் கொண்டு ஆரம்ப இடம் நோக்கி நடந்தான். இந்தக் காட்டினுள்... இப்படியான பொருள்... அவர்கள் விட்டுச்சென்றதாய் இருக்குமோ? இருக்கலாம்... இல்லாமலும் இருக்கலாம்...

நிக்கலஸ் ஆரம்ப இடத்தைத் தொட்டபோது சியாராவும் இவானும் ஏற்கனவே வந்து விட்டிருந்தது தெரிந்தது. இவனைக் கண்டதும் ஆர்வமாய் வந்தார்கள். தம்மிடம் விசேட தகவல் எதுவுமில்லையென்பதாய்ச் சொன்னார்கள். நிக்கலஸ் தன் கண்டெடுப்புப் பற்றிய விவரங்களைச் சொல்லிக்கொண்டிருந்த போது சிசிலியா வருவது தெரிந்தது.

"நேரமாகிவிட்டது! இனியும் இங்கே தாமதிப்பது சரியல்ல... சிசிலியா உன் தகவலைப் பயணத்தின் போது சொல்..." சியாரா சொல்லியபடி ஊர்தி நோக்கி நடந்தான். அவர்கள் பின் தொடர்ந்தார்கள்... ஊர்தி நகர்ந்து வேகம் பெறத் தொடங்கியபோதுதான் எடுத்து வந்த மண்ணினுள் பெறுமதியான ஒரு மர்மம் இருப்பதாய்ச் சிசிலியாவுக்குத் தோன்றியது.

* * *

ஜோர்ஜ் வாசலிலீ நின்றபடி வெளியே மலர்ந்திருந்த தோட்டத்தைப் பார்த்தார். சீலியா இன்னமும் "யூலியன்... யூலி... யூலி..." என்பதாய் அரை மயக்கத்தில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகளின் முன் ஓர் இனிய நாளில் அவள் கரம் பற்றிய ஞாபகம் வந்தது. உயிர்த்துடிப்பான ஒரு பூவைப் போல அன்று இருந்தாள். இன்றைய வாடலுக்கு அவர்தான் காரணம்...

இப்போதெல்லாம் தான் தவறு செய்துவிட்டதாய் தோன்றும் எண்ணத்தை மிக வலிமையுடன் புறக்கணிக்க வேண்டி இருக்கிறது... ஆனாலும் கடந்துபோன பன்னிரண்டு ஆண்டுகள்... இந்த நாள்களில் அவள் சுமந்த துன்பம் அவற்றையெல்லாம் எப்படி அவரால் ஈடு செய்ய முடியும்...?

ஒற்றைக் கோடாய்ச் சென்ற வாழ்க்கையில் அற்புதமான பல வர்ணங்களை இணைத்தவள் அவள்! அந்த வர்ணங்களின் குலைதலுக்கு அவரேதான் காரணமாகிவிட்டார்! பழைய நினைவுகளில் அமிழ்ந்து போய் இருந்தவரை உலுக்கிற்று அந்தக் கீதம்...! ஆழ்மனத்தின் துன்பங்களையெல்லாம் கோர்த்து உருவான உருகிய குரலில், அன்பைச் சொல்லும் வார்த்தைகளுடன் எழுந்தது அந்தக் கீதம்... ஒரு சோகமான தாலாட்டுப் போல...

அவர் சீலியாவின் அறையை நோக்கி நடந்தார். நெஞ்சின் வேதனை கண்களில் பளபளத்தது. உள்ளே அவள் கட்டிலில் அமர்ந்திருப்பது தெரிந்தது.

மடியில் அந்தச் சின்னபொம்மை. கண்களில் அருவியாய்க் கண்ணீர்... ஜோர்ஜை அவள் கண்டிருக்க வேண்டும். கீதம் சட்டென்று நின்றது.

அவள் கண்ணீர் விழிகளில் தெரிந்த வெறுப்பையும் வேதனையையும் சகிக்க முடியாமல் தலை குனிந்தார் ஜோர்ஜ்.

(தொடரும்)

## தான் பொய்ப்பின் யான் என் செய்வன்?

கடந்த தொடரில், கடைச் சங்கச் சான்றோர் செய்தளித்த எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாய நற்றிணையில் வந்த செய்யுள் ஒன்று குறித்துச் சிறிது தெரிந்து கொண்டோம். இன்று எட்டுத் தொகை நூல்களுள் இரண்டாவதாக விளங்கும், குறுந்தொகை என்னும் நூலுள் இருந்து, ஒரு செய்யுளைப் பார்ப்போம்.

நற்றிணை குறுந்தொகை, நெடுந்தொகை (அகநானூறு) என்னும் மூன்று நூல்களும் பாடல்களில் வரும் அடிகளின் தொகை கொண்டே தொகுக்கப்பட்டுள்ளன. குறுந்தொகை 4 முதல் 8 அடிகளைக் கொண்டது. நற்றிணை 9 முதல் 12 அடிகளைக் கொண்டது நெடுந்தொகை 13 முதல் 37 அடிகளைக் கொண்டது.

**தேன்கூடு**

குறுந்தொகையில்நானூறு பாடல்கள் உண்டு. அவை அகத்திணையின் பாற்பட்டவை. அகத்திணை களவு, கற்பு என்னும் இரு வகை ஒழுக்கங்களைக் கொண்ட வீட்டு ஆட்சியாகும்.

தமிழ்ச் சான்றோர் தமது மெய்யுணர்வால் 'அன்புப் பெருக்கம் ஒன்றே இம்மை இன்பத்தையும் வீட்டின்பத்தையும் தரவல்லது' எனத் தெளிந்தனர். அன்பை வளர்த்து ஆரா இன்பங்கண்டனர். ''அன்பின் வழியது உயிர்நிலை'' என்பது வள்ளுவர் வாய்மொழியாகும்.

இனி, குறுந்தொகையுள் வரும் ஒரு பாடலைக் காண்போம். அப்பாடல் நல்லிசைப் புலவாராய கபிலர் பாடியதாகும்.

நங்கை ஒருத்தியும் நம்பி ஒருவனும் காதலீத்தனர். காலம் உருண்டோடியது! நம்பி திருமணம் செய்யாது காலம் தாழ்த்தினன். நங்கை தன் ஆருயிர்த் தோழியை நாடினாள். தனது உள்ளத்துயர் அனைத்தையும் ஒன்றும் விடாது உரைக்கின்றாள்.

''ஆம். அவர் என்னை மணந்து கொள்ளாது ஒழியின் யான் யாது செய்வேன்? இக்களவொழுக்கம் பிறர் யாரும் அறியாமலே நடந்தது அன்றோ! தலைவர் சான்றோர் வரிசையில் உள்ளவர். ஒரு சமயம் அவர் பொய்த்து விட்டால் என்ன ஆவது? எதற்கும் சாட்சி வேண்டுமே!'' எனச் சிந்திக்கின்றாள்.

''அவர் என்னை மணந்த பொழுது அங்கு சாட்சியாக யாரும் இல்லைத்தான். ஆனால், 'நின்னிற் பிரியேன்; பிரியில் தரியேன்; விரைவில் மணந்து கொள்ளுவேன்' என்று தாம் கூறிய உறுதி மொழியை - சூளுறவை - பொய்த்தால் யான் யாது செய்வேன்?''

**சிந்திப்போம் செயற்படுவோம்**

''ஆம்! ஆம்!! ஓடாநின்ற நீரில் தினையின் தாள் ஒத்த சிறிய குருகுகள் நின்றன. அவை சான்று கூறலாம்தானே! இல்லை இல்லை! அவை, ஆரல் மீன்கள் 'எப்போ வரும்', 'எப்போ வரும்' என்று இரையின் எண்ணத்திலேதான் நின்றன. அவை எப்படி சாட்சி சொல்ல முடியும்'' என்று எண்ணி குருகு நாரை நின்றது என்று முடிக்கின்றாள்.

இனிப் பாடலைப் படிப்போம்.

யாரும் இல்லைத் தானே களவன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தாள் அன்ன சிறு பசுங் கால
ஒழுகு நீர ஆரல் பார்க்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே.

களவன் என்பதற்குக் களத்தில் இருந்தவன் என்று கொண்டு ஊரம்பலத்தில் இருந்து - அறங்கூறவையத்திலில் இருந்து - தீர்ப்பு வழங்கியவன் என்றும் கள்வன் என்று பாடம் கொள்ளின் ''உள்ளங்கவர் கள்வன்'' என்றும் பொருள் கூறலாம். ஆரல் - ஒருவகை மீன்.

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலம் சுமைதாங்காது அன்றோ! ஆதலால் தனது தலைவனுக்கு உண்டாகும் பழிக்குக் கூட நாணினாள் என்றும் கொள்ளக்கிடக்கின்றது.

வாய்மை பேணி நாமெல்லாம் வளம் பெறுவோம்

(தொடரும்)

-சிகண்டியார்

# மௌனமொழி

## உங்கள் கவிதைகள்



தாதித் தாயே!
மனிதத்தின் மகத்துவம்
புரிந்து தானா - நீ
மரணத்தை திரவமாக்கி
ஊசிவழியே ஏற்றிக்
கொண்டிருக்கிறாய்...?
இது ஒரு துளி விந்தின்
பிரயாணம் இல்லையம்மா
பிரபஞ்சத்தின் சுருக்கமிது!

- எம். சுயர்சன் -
கோண்டாவில்.

காரிகையே!
கண்ணாளன் கதைகேட்டு,
கண்மணியை கருவறுக்காதே!
தமிழினம் வற்றிப்போம்!

- பா.மணிக்குமார் -
கற்கோவளம்.

முந்தித் தவமிருந்து.....
முந்நூறு நாட் சுமந்து
பெற்றெடுத்த என் மகனே!
தற்செயலாய்
தாதி செய்த சிறு தவறால்
'ஏச்.ஐ.வீ'....
என்மூலம் உனக்குமடா!

- ப.பிறேமலதா -

*மானம் காத்த*
*மறத் தமிழனின்*
*சோகம் தீர்க்க*
*சொர்க்கத்திலேயே நிச்சயிக்கப்பட்டு*
*பூமியில் பிறக்கும் உனக்கா*
*இந்நிலை!*

- உடுதர் -

ஊசியில் பிறந்து...!
ஏசியில் வளர்ந்து
வேசியை நுகர்ந்து....!
எய்ட்சினில் மாண்டிட
'கருவி'னிலேயே...
கற்பனையா?

சு.சுதர்சன்.
வதிரி.

கண்கெட்டபின்
சூரிய நமஸ்காரமா?
வருமுன் காப்போம்!
வந்தவரை அரவணைப்போம்!
விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்!
விடியலின் பக்கங்கள்
தொலை தூரத்திலில்லை.

- எம்.நவீன் -

இங்கே 'ஆசை' அடங்கியபின்
ஓசையின்றிப் பல கொலைகள்.
சிதைந்து போனவை
கல்லறைகள் மட்டுமல்ல.
கருவறைகளும் தான்.

- இ.ஜெயக்குமார் -

காமசுகத்திற்கு உடலுறவும்
வாழ்க்கை சுகத்திற்கு கருக்கலைப்பும்
நியாயமாகிவிட்ட பூமியிலே
உதரத்திலே பிணமாகும் சிசுவே,
உனக்கு எங்கே நாம் சமாதி அமைப்போம்?

- மயிலையூர் சன் -

உயிரெனும் அரிய சொத்தை
உலகினில் உதித்த முத்தை
கருவினில் விளைந்த வித்தை
கலைத்திடல் ஆகாதம்மா!
போதையின் பாதை - காதல்
போலியில் விழுந்த பேதை
யாவரும் திருந்தி நின்றால்
ஜெகத்தினில் கண்ணீரேது?

- அளவையூர் சேந்தன் -

கருவறைக்குள்ளேயே
கருச்சிதைவு செய்து
கல்லறை அமைத்துவிடும்
அறிவியல் உலகமிது!!

- பிரஷாந்தி -
நல்லூர்.

ஊசி மூலமீரெல்லாம்
பரவிடும்....! உயிர்கொல்லி!
பணம் தேடி பரதேசம் போயங்கு
பாலியல் நோயோடு மீண்டிங்கு
மனந்தேடி நலங்கெட்டு!
மருத்துவமனை நாடி!
குருதியினாய்வினால்
குலக்கொடியும், குடும்பமும்
கொடும் நோயாளிகளெனத்
தெரிந்தனரே.... என்னால்!
அகமிருட்டியதால்....
முகமிருண்டதுவே!

- மாருதி -
ஆவரங்கால்.

*ஆண் பிறர்*
*பெண்ணைக் கண்டு களிக்கிறான்*
*தனக்குரியவளுக்குப் பெண்*
*உண்டாகினால் அழிக்கின்றான்.*

- கதா -

உயிரின் உன்னதம்
தெரியாத மனிதராசியின்
மருத்துவத்தின்
மகத்துவம் இது!

- எம்.பாரதிப்பிரியா -
கோண்டாவில் வடக்கு.

பத்துமாதம் சுமந்து,
பால்நினைந்தூட்டி,
பகலிரவு பாடுபட்டு
பாவையவள் தன்மகவு
பாரான ஆசைகொள்ளும்.
பாசத்துக்கு நிகருண்டோ?

- பிரணவன் -
மீசாலை.

பெண்ணென்றால்
அந்நாளில்
பேயும் இரங்கிற்று
'பெண்' என்றதும் கருவிலேயே
இந்நாளில் ஊசி இறங்கிற்று
எதை எண்ணி(க்)
கண்ணே - உன்
கண்ணில் - நீர்?

- சௌஜன்யா -

மகவே!
கருவறைக் காத்திருப்பும்
கழியும் முன்பே உனக்கு
கருவறையே கல்லறையாக்கப்படுகின்றது;
ஏன் தெரியுமா...?
நீ பெண்ணென்று அறிந்துவிட்ட
உன் அப்பாவின் தப்பான எண்ணத்தால்...

- கோவையூர் எஸ்.கௌசி -

அன்பான மக்களே
அன்பான வேண்டுகோள்
தர்மம் தலை காக்கும்
புதிய 'சிறிஞ்'
உயிர் காக்கும்!

- எம் சசந்தன் -
அரியாலை.

காளை ஒருவன்
காதலித்தான்!
கசக்கிப் பிழிந்து
கைவிட்டான்!!
ஊருக்குப் பயந்தவள்
உயிரைக் கொல்லத்
துணிந்தாள்!!!

- ஜோ.ஜெஸ்மின் -
கொழும்புத்துறை.

*மானிடம் இழைத்திட்ட*
*மாபெரும் பிழைகளை*
*மறுசீரமைத்திடவே*
*மருத்துவம் கண்ட*
*மாற்றுவழி இதுவோ?*
*இல்லை.... இது*
*அரும்பிடமுன்*
*அரும்புகளைக்*
*கத்தரிக்கும்*
*அரக்கத்தனமோ?*

- கொன்சன்ரைன் -

இருதய நோய்க்கும் இருக்கிறது மருந்து
இருமனம் கலந்தால் இறுதியில் விருந்து
அடியினைக் கடித்தால் இனிக்குமா கரும்பு?
மிடிதீர, மீட்சிபெற மனம் மாற்றுவீர் மேலோர்!

- செல்லையா வல்லிபுரம் -
கீழ்க்கரவை

விஞ்ஞானம்
விதைக்கிறது
விந்தைகளை...
அதனால்
அறுவடையாகப்போவது
அழிவுகள்தான்!

- ச.வண்ணன் -
புலோலியூர்.

ஆதாமும் ஏவாளும்
கால் கோலிட,
ராமனும் சீதையும்
அரங்கேற்றி வைத்த
அந்தரங்கங்களை
ஆராய்ந்தாலும்,
நாமிருவர் நமக்கிருவர்.

- அகிலநாயகி -
மீசாலை மேற்கு.

*சதைகளைத் தாக்காது*
*இதயத்தைத் தைக்கும்*
*மாயமுறையால் (க்)*
*காயமுற்றது நெஞ்சு!*
*விழிகளோ நீர் வடிக்க...*
*உயிரோ குருதி வடிக்கிறது!*

- பராங்கதன் -

பூமித்தாயின்
கர்ப்பப் பையினில்
அவதரித்த சந்தனப் பூவே!
நீ என்னபாவம் செய்தாய்?
கருவினில் கூட
உனைக் கொல்ல
நஞ்சூசியாய் பேரினவாதம்!
கருவினிலே - நீ
மகிழ்வுடன் மடிந்து போ!
கருவறையிலும்,
கல்லறை வைத்து
என்றும் - அவள்
உனைச் சுமப்பாள்!

- எம்.பிருந்தா -
கோண்டாவில்.

*தன்னினத்தை தாங்குகின்ற*
*தாயவளின் சுகத்திற்காய்*
*தன் உதிரம் கொடுக்கின்ற*
*மனிதன் இவன்.....*
*தமிழனெனச் சொல்வதிலே*
*தப்பிருந்தால்.....*
*அவன் கொடுத்த உதிரம்*
*தமிழர்களின் உணர்வுகளைப்*
*புதுப்பிக்க தவறிடுமா? .....*

- சி.டினேஸ்காந்தன் -

கருவாக மக(ளோ)னே - நீ
உயிரோடும், உறவோடும், உணர்வோடும்
உருவான பிறகு
அரிவாளை எடுத்து - அந்நியனா
அறவோடு அழிப்பாய் - என்றா
உன்னை கருவோடு
கலைக்கின்றனர்?

- செ.தர்ஷன் -
உடுப்பிட்டி.

கிராமத்தில் எருக்கலம் குச்சி
பாமரர் வைத்தியம்.
நகரத்தில் கருக்கலைப்பூசி
படித்தவர் வைத்தியம்.
கருவிலே சமாதி செய்வது;
கருணைக் கொலையாம்
கடமையைச் செய் தாதியே!
கண்ணீர் விடாதே!

- வே.யாமினி -
ஓட்டுமடம்.

*பேதைப் பெண்ணே!*
*போதைவஸ்து - சிதைப்பது*
*உனை மட்டுமல்ல.....*
*உன் வயிற்றின் கருவையும்தான்.*

- அ.றெனிசியஸ் -
குருநகர்.

குடும்பத்தோடு கட்டுப்படுத்தும்
குடியாட்சி முறையின் கீழ்
குடும்பக்கட்டுப்பாடு
எனும் முறை எதற்கு?

- நவகவி -


முளையிலே
முளையத்தை
முள்ளால் எடுப்பது
முறையற்ற மனிதனே உனக்கு
முறையோ...

- கேதாகிரு -

தாயே!
தவறு செய்தது நீயும்
தந்தையும்.
நான் உருவாகக்காரணம்
நீங்கள் இருவரும்
ஆனால்
உங்களை நீங்களே
உணர்ந்து கொள்ளாமல்
குற்றமற்ற என்னைக்
கொல்லத்துணிந்ததேனோ?!
நீங்கள் செய்த பாவம்
போதும் - இனிப் -
பாவம் செய்யவேண்டாம்.

- சேரமான் -

## மௌனமொழி - 72




உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம். இதனை வரைந்தவர் நெல்லியடியைச் சேர்ந்த அமரன்.

கருச்சிறைக்குள்ளேயே
உரு(வை)ச் சிதை!
அரும்பாகும் முன்
அழித்தொழி!
மண்ணுலகத் தரிசனம் முன்
விண்ணுலகனுப்பு!
உஷ்.......
இவன் இலங்கைத்தமிழன்!

- மெமோறியல் ரட்டி-

காவல் நிலையத்தில்
கற்பழிப்பு
காவல் அரண் தன்னில்
கற்பழிப்பு
சித்தார்த்தன் பூமிதனில்
கருக்கலைப்பு மட்டும்
சட்டவிரோதமாம்.

- பண்ணாகநாதன் -

ஐயையோ அம்மா...!
என்னைச் சிதைக்காதே...
என்னை அழிக்காதே...
உலகம் தெரிந்து
நீ செய்த தப்புக்கு
உலகம் தெரியாத
எனக்கா தண்டனை...!

- கலைநேசன்சிவம் -

இந்த உலகில்
ஒரு புதிய ஜனனத்திற்கு ஆயத்தம்
தாயின் வலி குறைக்க
ஓர் ஊசி...
தரும் மகவை கையிலேந்த
ஒரு தாதி...
சவாலான இந்த மண்ணைச் சந்திக்க
சத்திய வேந்தனின் கருவறை வேள்வி
வந்தபின் கேட்பார்களோ
சமாதான எதிரி என்றொரு கேள்வி?


- த.தர்மதா -

தாதியே!
ஏன் யோசனை?
'இன்ஜெக்சன்' மூலம்
இந்தக்குழந்தைக்கும்
எயிட்ஸ்
பரவிவிட்டதா??

- லக்ஷி -
கண்டுக்குழி.

# வானத்தைப் போல

காலை ஒன்பது மணி. நெல்லியடி நகரம் களைகட்டத் தொடங்கியிருந்தது. மக்கள்தம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தனர். இடையிடையே வாகனங்களின் 'ஹோரன்' அலறல்கள் காதை அடைக்க அவையும் விரைந்து கொண்டிருந்தன. ஆங்காங்கே ஒரு தேவையுமின்றி 'பிகர்' பார்ப்பதற்காய் கூடி நின்ற இளசுகளின் அரட்டை. அந்த ஒழுங்கற்ற அசைவுகள் கூட நகரத்திற்கு அழகு சேர்ப்பது போல் அமைந்திருந்தது. இரசித்துக் கொண்டேன். நின்று கால் வலித்ததால் பஸ் தரிப்பிட நிலைய அரைச் சுவரில் ஏறி அமர்ந்து கொண்டேன். என்விழிகள் 750ஆம் இலக்க, பருத்தித்துறை - யாழ். பஸ்ஸை எதிர்பார்த்துக் கொண்டிருந்தன.



பஸ் தரிப்பிடத்தில் என்னைப் போல பயணிப்பதற்கு பலர் பல வயது மட்டங்களில் காத்திருந்தனர். கூடியிருந்தவர்களால் அங்கே 'உலக உலா' உருவெடுத்தது.

"மெய்யே அக்கா..... சரஸ்வதியின்ர பெட்டை புறப்போஸ் பண்ணியிருந்த பொடியனோட ஓடிட்டாளாம்"

"என்ன நாசமப்பா? பொடியளுன்ர அவசரங்கள் என்னத்திலயெண்டில்லை ம்....."

காதினுள் நுழைந்த வார்த்தைகளுக்கு மேலும் கவனம் செலுத்தினேன். கதை திசைமாறியது. கூடவே என் புலனும்......

"டைட்டானிக்கில ரண்டு ஸீன் சென்ஸார் பண்ணினால் வீட்டில போடலாமாம். நான் தனிய எண்டால் வேறை. வீட்டில அப்பா, அம்மா, தங்கைச்சியவையெல்லாம் இருப்பின மெல்லே. தங்கைச்சி கேட்டவள் பாக்க வேணுமெண்டு....."

"டேய்.... நீ பாத்தனிதானே? அந்தக் கட்டங்கள் வரத் தள்ளிவிடு"

"இல்லையடா நான் பாக்கேல்ல. இந்த மூண்டரை வருஷத்துக்க எத்தன விதமான படங்களெல்லாம் பார்த்திட்டன். இதை மிஸ் பண்ணீட்டன். ஆனால் வீட்டில அறிஞ்சால் சாப்பாடுமில்லை போ"

என் காதுகள் அவை போதுமென்று மேலும் அந்தக் கதையை வாங்காது தவிர்த்தன. அப்பால் சில 'பெரிசு'கள் எனக்கு பெரிதாக விளங்காத இந்திய அரசியல் பற்றி அலட்டிக் கொண்டன. எனக்கு கவலை வேறு. 'பஸ் வர வேணும். எனக்கு ஸீட் கிடைக்க வேணும்.'

எனது ஆசை நியாயமானது தானே. நேரம் செல்லச் செல்ல எனது இருப்பிடத்தை விட்டு இறங்கி வெளியே நின்றேன். 'பஸ் வருகிறது' என் மனப்பட்சி கூறியது.

ஓரிரு நிமிடம் கழிந்தது. வந்தது தனியார் மினிபஸ். நிற்பதற்கு முன் பாய்ந்து ஏறிக் கொண்டேன். மனம் எல்லையில்லாத மகிழ்வில் திளைத்தது. காலியாக ஒரு 'சிங்கிள் ஸீட்' அமர்ந்து கொண்டேன்.

"யாழ்ப்பாணம்...... யாழ்ப்பாணம்"

கொண்டக்டர் கூறியவாறு ஒரு வயது வட்டுக்கேறிய 'பழசை' ஏற்றி விட்டார். அந்தப் பழசின் பார்வையும் எனது பார்வையும் பட்டு மீண்டன.

'நிக்க இயலாமல் கிடக்கு. உந்த இடத்தை விடுறியோ?' என்ற உறுத்தல் பழசின் பார்வையில் தேங்கியிருந்தது. 'வேண்டாம் திரும்பியும் பழசைப் பார்த்தால் நிச்சயமா கேட்கும். அது வீண் சிரமத்தில் முடியும். பார்க்காமல் இருக்கிறதுதான் புத்தி' மனம் கூறக் குனிந்து கொண்டேன்.

"ஆச்சி...... இதில் இருங்கோ"

திடீரென்று அருகே கேட்ட குரலால் நிமிர்ந்தேன். கிழவி அமர எத்தனிக்க ஓர் இளசு இடம் விட்டு ஒதுங்கி நின்றது.

'சே.... இதுகளால்தான் பிரச்சினை. இருந்தால் தன்ரபாட்டில இருக்கிறதுக்கு பிறகேன் எழும்பி இடம் விடுவான்? தாங்கள் நல்ல பிள்ளையள் எண்டு காட்டுறதுக்குத் தான் உதெல்லாம்..... இதைப்பார்த்தால் மற்றவை என்னைப் போல ஆக்களைப்பற்றி என்னநினைப்பினம்? விசுக்கோத்துகள்'

என் மனம் தனக்குள் வார்த்தைகளை அமுக்கி அடுக்கிக் கொண்டது.

கிழவியின் பார்வையும் என்பார்வையும் மீண்டும் மோதிக் கொண்டன. அந்தப் பார்வை 'நீ ஒரு புரிந்துணர்வில்லாத மிருகம்' என்பதை உணர்த்துவது போலிருந்தது.

'போ.... கிழவி உன்ர முதுகிலயே நான் தங்கியிருக்கிறன். நீ என்ன சொன்னாலும் எப்படிப் பார்த்தாலும் எனக்கென்ன?'

மீண்டும் என் மனமே அடித்துக் கொண்டது.

பஸ் நகர்ந்தது. சிங்கிள் ஸீட். ஜன்னல் கரை. விடுப்புக்கு நல்ல வசதி. பார்த்துக் கொண்டேன். பஸ் நாவலர் மடம் தாண்டியதும் ஒரு பயம். 'செக்கிங் பொயின்ற்'. நான் இறங்கேக்கை என்ர சீற்றில ஆரும் இருந்திட்டால்..... பாப்பம் எதுக்கும் இறங்காமல் இருந்துபாப்பம்.

பஸ் 'பொயின்ற்'றை நெருங்கியது. நின்ற பொலீஸ்காரன் செல்லுமாறு சைகை செய்து என் வயிற்றில் பாலை வார்த்தான். பஸ் நகர்ந்தது. இனி வல்லைதான் பிசகு.

பஸ் குஞ்சர் கடையடியில் குலுக்கலுடன் நின்றது. நிமிர்ந்து ஜன்னலால் பார்த்தேன்.

'அட கோதாரி விழுந்த இந்த மனுசன் ஏன் வருகுது? கரைச்சல் பிடிச்சுது போ. படிப்பிச்ச மாஸ்ரருக்கு இடம் விடேல்லையெண்டால்... எதுக்கும் நித்திரை மாதிரி கிடப்பம். ஒருவேளை நான் நிமிர்ந்து பார்தத்தை மனுசன் கண்டிருக்குமோ? சேச்சே... பார்த்திருக்க சான்ஸ் இல்லை'

மனதுக்குள் வரிந்து கொண்டு முழங்கால்களுக்கு மேலே இரு கைகளையும் வாகாப் பரப்பி முகத்தைக் குத்திக் கொண்டேன். வல்லை மட்டும் சமாளிக்கலாம்.

பஸ்ஸினுள் காற்று வேகமாக நுழைந்தது; வல்லைவெளி என்பதை உணர்ந்து கொண்டேன். பஸ் குலுக்கல் பயணத்தை சொற்பநேரம் நடத்தி நின்றது. நிமிர்ந்தேன்.

மாஸ்ரர் இருந்தார். அவருக்கு இடத்தைக் கொடுத்து விட்டு அம்பி அண்ணா நின்றார். இப்போது அம்பி அண்ணாவில் எனக்குக் கோபம் வரவில்லை. ஏனென்றால் அவர் இடம் விட்டிராவிட்டால் நான்தான் என் ஸீட்டைத் தியாகம் செய்ய வேண்டி வந்திருக்கும்.

வல்லையிலும் 'செக்கிங்' இல்லை. இன்று எனக்கு வெள்ளி திசை போலும். மகிழ்ந்து கொண்டேன். பஸ் ஆவரங்காலூடாக நகர்ந்து கொண்டது. பஸ் ட்றைவருக்கு அப்போதுதான் ஞாபகம் வந்திருக்க வேண்டும். திடீரென்று பஸ்ஸிற்குள் "சோனியா.... சோனியா சொக்க வைக்கும் சோனியா....." துள்ளிசை பரவத் தொடங்கியது. பலர் பஸ்ஸை விட்டு மினிபஸ்ஸில் பயணிப்பதும் இதனால்தானே. எனது பிரயாணம் பூரணப்பட்டது போன்ற உணர்வு.

"ஓவ்...... ஓவ்...... அக்கா ஒராள் வாறா."

கொண்டக்டரின் கூற்றுக்கு பஸ் நின்றது. அந்த அக்கா ஏறினாள். பார்த்தேன். வயிற்றில் சுமை. குனிந்து கொண்டேன்.

'பரதேசிச் சனம். உந்த நிலையில பஸ்ஸிலயே வரவேணும்? காரை, ஓட்டோவை பிடிச்சுக் கொண்டு போறதுக்கு பேய்ச்சனம்'

எனது வசதி பறி போய் விடுமோ என்ற அச்சத்தில் வார்த்தைகள் கோபமுலாம் பூசி மனதிற்குள் புரண்டன. ஆனாலும் என் அச்சம் வீண் போகவில்லை.

"தம்பி...... உந்த இடத்தை 'அக்காவுக்குக் குடுங்கோவன்"

கொண்டக்டரின் வார்த்தைகள் பவித்திரமாக பரவி என் காதிற்குள் பவனி வந்தது.

"என்னால நிக்கேலாது காலில காயம். நிண்டால் வீங்கும்"

என்றோ ஒரு நாள் கள்ள இளநீருக்கு வேலி பாயும் போது வந்த தழும்பை தடவிக் கொண்டேன். எனது குரல், பரவியிருந்த பாடல் சத்தத்தையும் மேவியிருந்ததைப் புரிந்து கொண்டேன்.

'பஸ்ஸில பாய்ந்து ஏறேக்க காயம் எங்கபோனது?' கொண்டக்டரின் பார்வையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள கஷ்டப்படவில்லை. 'எனக்கென்ன? எல்லோரும் காசு குடுத்துத்தான் வாறம். நானென்ன சும்மாவே வாறன்?

"பிள்ளை....... இதில இரும்"

அம்பி அண்ணாவின் இடம் மாஸ்ரரிடமிருந்து அந்த அக்காவுக்கு மாறியது.

என்நிலை இருதலைக் கொள்ளி எறும்பு. என்ன செய்வது? மாஸ்ரருக்கு இடம் கொடுத்தால் என் காய சவுடால் என்னாவது? மாஸ்ரரைப் பார்த்தேன். எழும்புவது போல உன்னினேன் அந்த உன்னலிலும் என் விருப்பமின்மை புலனாகியிருக்க வேண்டும். குறிப்பறிய மாட்டாதவன் மிருகம்; மாஸ்ரர் தன்னை மனிதன் என்று நிரூபித்தார். 'வேண்டாம்' என்று சைகை காட்டி விட்டுத் திரும்பி நின்றார்.

புத்தூர், கல்வியங்காடு பொயின்ருகளில் இறங்கி ஏறிய போதும் என் 'ஸீட்' எனக்காகக் காத்திருந்தது பெரிய அதிசயமாக இருந்தது.

புத்தூர் 'பொயின்ற்'றில் நொண்டி நடந்து விட்டு கல்வியன்காட்டில் மறந்து சாதாரணமாக நடந்தது நினைவில் உறுத்த பெரும் அவஸ்தையாய்ப் போனது.

அம்பி அண்ணாவும் மாஸ்ரரும் நல்லூர் கோயிலுக்கு முன் இறங்கிக் கொண்டார்கள். எனக்கு அவஸ்தை நீங்கியது போன்ற உணர்வு. படிப்படியாக சனத்தை உதிர்த்தபடி நகர்ந்த பஸ் யாழ் நகருக்கு சென்ற போது ஓரிரு ஸீற்றுகள் காலியாகி விட்டிருந்தன.

நான் இறங்கி நடந்தேன். என் கால்கள் வைத்தியசாலைக்குள் படர்ந்தன.

'வார்ட்டிலிருந்து துண்டு வெட்டி, இதர கடமைகள் முடித்து மீண்டும் பஸ் தரிப்பிடத்திற்கு அம்மாவுடன் வந்த போது நேரம் மூன்றை நெருங்கி விட்டிருந்தது. எழுநூற்றைம்பது 'லைன்' பஸ் ஒன்று புறப்பட ஆயத்த நிலையில் நின்றது.

**-பிரகாசன்-**

அம்மாவை வெளியே நிற்கச் சொல்லி விட்டு பஸ்ஸில் ஏறிப் பார்த்தேன். அனைத்து இருக்கைகளும் நிரம்பி இருந்தன. ஓரிருவர் நின்று கொண்டிருந்தார்கள்.

'எப்படி ஒரு ஸீட் தருமாறு கேட்பது? யாரைக் கேட்பது? அங்கே இரண்டு,மூண்டு பேர் நித்திரை மாதிரி சரிந்திருக்கினம். அவை உண்மையில நித்திரையோ? அல்லது நடிப்போ? இங்கை ஓராள் வலிக்

(XV ஆம் பக்கம் பார்க்க)

**சுதந்திரதினக் கவிதை**

# சிங்கள அண்ணா!
## உந்தன் சிந்தனைக்கு!

சிங்கள அண்ணா உந்தன் சிந்தனைக்கு இந்தப் பாடல்
பொங்கிடும் உணர்வி னோடு புனைந்துளேன் உணர்ந்து பாரு
தங்கிய ஐம்ப தாண்டு சுதந்திரம் தாண்டிப் போச்சு
இங்குள தமிழர் எங்கள் உரிமைகள் இழந்து போச்சு

இலங்கையில் தமிழர் நாங்கள் இருப்பது இடைஞ்சல் ஆச்சோ?
கலங்கிடும் நாங்கள் இங்கு கடையரா? அடிமை தானா?
துலங்கிட இந்த நாட்டில் தொன்மையாய் இருந்தோ ரன்றா?
நலங்கெட எம்மை ஏன்தான் நசிக்கிறீர் சொல்லு வீரே!

தேசிய இனமாய் நாங்கள் திகழ்கிறோம், இதனை இந்த
ஆசிய கண்டம் அன்றி அகிலமே அறியு மன்றோ!
பேசிடும் மொழியும் எங்கள் பேறுடை அரசும் இங்கு
வீசிய புகழை யாரும் விளம்புவார் கேட்டுப் பாரும்

ஈழத்(து) உணவும் மற்றும் இலக்கிய வளமும் கொண்டு
சூழவே சேர்ந்து வாழ்ந்து; சுகத்திலும் துன்பத் தாடும்
ஆழமாய்(ப்) பற்று வைத்து அழகிய இந்தத் தீவின்
நிலுமோர் புகழை நாட்ட நித்தமும் உழைத்தோம் நாங்கள்

எங்களுக் கென்றோர் ஆட்சி இருந்தது; இந்த நாட்டில்
தங்களைப் போல நாமும் சரிநிகர் சமமாய் வாழ்ந்தோம்
மங்கள மாக மக்கள் மகிமையாய் வாழ்ந்தார் அன்று
சிங்களர் தமிழர் என்ற சீற்றமும் பெரிதாய் இல்லை

அந்நியர் ஆட்சிக் காலம் அவர்களை அகற்ற எண்ணி(த்);
திண்ணிய மனத்தி னோடு சேர்ந்துநாம் உழைத்தோம் அன்று
எண்ணிநீ பாராய் அண்ணா! எனைமைப் பகைத்தாய் இன்று!
மண்ணிலே புத்தர் சொன்ன மதியினை எண்ணிப் பாராய்!

சுதந்திரம் பெற்ற பின்னர் சூழ்ச்சியாய் நீயும் எண்ணி
நிரந்தர மாகப் பகைமை நீட்டினாய் எம்மை நோக்கி
இதந்தர நின்ற எல்லா இயல்பையும் இழந்தோம் நாங்கள்
நிதம்நிதம் எம்மை ஓரம் காட்டிநீ நின்றாய் எண்ணாய்

அரசியற் பித்த லாட்ட அலையிலே உந்தன் ஆட்கள்
தரநிலை எதுவும் இன்றித் தமிழரைப் பகடைக் காயாய்
வரவர வைத்துப் பதவி வகிப்பதே மேலாய்(க்) கொண்டார்
கரவுடை அந்தப் போக்கே கட்டமாய் இன்றும் உண்டு

எப்பழி கண்டீர் அண்ணா! எக்குறை செய்தோம் நாங்கள்!
தப்பதா நாங்கள் எங்கள் தனித்துவ உரிமை கேட்டல்!
ஒப்பிலா(ப்) பேதம் காட்டி எம்மைநீர் ஒழிக்க நின்றால்
செப்பிடும் அண்ணா! நாங்கள் சினப்பது நியாயம் தானே?

இப்பவும் என்ன செய்தீர்! எம்தமிழ் உணர்வைக் காட்டிச்
செப்பமாய் இருந்தோம் தம்மைச் செருக்கவும் துணிந்தீர் அண்ணே!
எப்பவும் இந்தக் கோலம் எடுபடா தென்பேன்; நாடு
தப்பிடா வகையில் இரண்டாய் தனித்தனி பிரிய நின்றீர்

எத்தனை தடவை அன்பாய் அகிம்சையாய்(க்) கேட்டுப் பார்த்தோம்
எத்தனை காலம் நாங்கள் ஒப்புதல் செய்து பார்த்தோம்
அத்தனை கிழித்தீர் எரித்தீர் ஆறுதல் தந்தீர் இல்லை
சித்தமே கலங்க எம்மைச் சீரழித் திட்டீர் நீங்கள்

ஒற்றுமைக் கான ஓசை ஒலிக்குது எங்கும், நீரோ
பற்றுடன் போரை மூட்டிப் பதைப்புற எம்மை விட்டீர்
அற்பமாய் எம்மை எண்ணி அழித்திட நின்றீர்; ஆனால்
சுற்றிடும் அறத்தீ உங்கள் சூழ்ச்சியை சுட்டே நிற்கு

பேசியயே பிணக்கைத் தீர்க்கப் பிரியமாய் இல்லை, நீங்கள்
ஏசியே போரை நீட்டி எங்களை அழிக்க நின்றீர்
வாசியே உங்கள் நோக்கம் வாய்க்குமா அண்ணே! சற்று
யோசியே! அமைதி காக்கும் யோக்கியம் உனக்கு உண்டேல்!

ஆனதால் அண்ணே! உங்கள் அடக்கிடும் போக்கை நீக்கி
மானமே காக்க! உங்கள் மற்றுள மதிப்பைக் காக்க(ப்)
போனது போக்கிப் போதி மாதவன் புகழை நாட்ட
ஆனவை செய்வீர்! தம்பி அருங்கருத் தேற்பீர் அண்ணே!

- தீவகன் -

# கிளித்தட்டு

கோயில் முற்றம். மைதான வெளி. வெள்ளை வெளேரெனப் பரந்து கிடக்கின்ற மண். எங்காவது அரிதாக முகம் காட்டும் சிறுபச்சைப் புற்கள். அவை தொட்டு, அங்கு வரும் மனிதர்கள் வரை அனைவருக்கும் சம அருள் சொரிகின்ற முருகப் பெருமானின் சந்நிதானம்.

இவன்..... அருகில் சைக்கிளில். வழமையான விளையாட்டாய் கிளித்தட்டு. சில மிருதுவான விஷயங்கள் போல் புதிய சுகமாய் தினம் மாலை நேரங்களில் மனம் தழுவும் இது. உண்மையில் விளையாட்டுப் போர்வையில் ஒரு வாழ்வு மறைந்திருப்பதாய்த் தோன்றும். இவனுக்கு இது மிகப் பிடிக்கும். தடைகளைத் தாண்டுதல் மையப்புள்ளியாக, இலகுவான, புத்திசாலித்தனமான, அதிர்ஷ்டகரமான, ஆற்றல்மிக்க கடத்தல்களோடு விளையாட்டு விரியும்; சுவாரஸ்யமாய் நகரும்; மனம் பரபரக்கும். கோடு தாண்டிப்பாய கால்கள் துடிக்கும். கூடாது. பதற்றம் கூடாது. நிதானப்படுதல் தேவை. நின்று மனமொன்றித் தக்க தருணம் அறிதல் தேவை. எந்தக் கணத்திலும் செயலுக்குத் தயாரான உடலும் உள்ளமும் தேவை. இத்தகையவரின் உள்ளங்கால்களை உறுதியாய்ப்பற்றிய படி வெற்றி நகரும். உண்மை.

விளையாட்டின் ஆரம்பம். இளைஞர்கள் இறங்குவதையே பார்த்துக் கொண்டிருந்தான். வாழ்வுப் பாதையில் மேற்கொள்கின்ற எத்தனிப்புக்களும் தடைகளும் எதிரெதிராக முகம் நோக்கி இளைஞர்கள் வடிவில் நின்றிருந்தன. சில எத்தனிப்புக்கள் முதற் கோட்டில் நின்றபடி முகஞ்சுழித்து யோசிப்பதாய் பாவனை பண்ணின. வேறுஞ் சில எதிராளியின் கவனந் திருப்பாது, எதுவிதபாவனையுமின்றி இயல்பாய்க்கோடு தாண்டிப்பாய்ந்தன. உணர்ச்சிகளைப் புறஉடலுக்குப் பரவவிடுவது பலவீனம். இவன் விளையாட்டோடு பின்னிய சிந்தனைகளில் ஒன்றிப்போனான். தடைகளாய் நின்றவர்கள் மீற எத்தனிப்பவர்களில் முழுமையாய் ஒன்றியிருந்தார்கள். மன ஒருமைப்பாடு என்கின்ற சற்றுக் கனதியான சொல்லின் இலகு வடிவத்தைக் காண்பதில் இவனுக்குள் சந்தோஷம் பொங்கிற்று.

நிமிஷக்கரைவுகள்.வலிமையான, உறுதியான பாதங்கள் மண் உதைத்



தன. எதிர்பார்க்காத வேளையிலும் விதத்திலும் கோடுதாண்ட முயற்சித்தன. மண் அடுக்குமாறிற்று; குழம்பிற்று. சற்று ஈரத்தன்மையாய் மண் மணத்தது. மண்வாசனை. இவனுக்குக் கண்மூடிச் சுவாசிக்க வேண்டும் போலிருந்தது. மண்வாசனை - மனதுக்கு இதமானது. சட்டவிரோதமாய் நாடு கடக்கையில் அயல் நாட்டு அரசகரங்களில் அகப்பட்ட நண்பன் சுந்தரனின் ஞாபகம் மனமேறிற்று. முற்று முழுதாக இந்த விளையாட்டோடு ஒத்துப்போகின்ற வாழ்க்கைச் செயற்பாடு. புள்ளி வைத்த இலக்கைச் சேருதலுக்காக, மீறலுக்கான தருணம் பார்த்தபடியான இளைஞர்களின் காத்திருப்புக்கள். இடையே நடுக்கோடு வழி நகரும் ஒரு விளையாட்டு வீரனாய்ச் சொந்த நாட்டின் எத்தனிப்பு முறியடித்தற் படைகள். கடக்க முடியாத பொழுதில் கடக்க முயற்சிப்பது தோல்வி தரும். இதே நுட்பங்கள் சற்று சிக்கல்படுத்தப்பட்டிருப்பதாய்த் தோன்றிற்று இவனுக்கு.

திடீரென ஏதோ ஓர் உந்தலுடன்முன்னோக்கி உடல் அசைய, "கரன்! பாயடா மச்சான்" கத்த வேண்டும் போல ஓர் உணர்வு.அடுத்த கணத்தில் சுதாகரித்தான்; அமைதியானான். சொல்லப்பட்டாலும் அந்த வார்த்தைகளுக்குப் பிரயோசனமில்லை. கோடு கடத்தலுக்கான நல்ல ஒரு வாய்ப்பை நழுவ விட்டு விட்டு எதுவும் நிகழாத ஓர் இயல்பாய் நின்றிருந்தான் அந்தக் கரன். வாழ்வு கூட வரங்களையும் வாய்ப்புக்களையும் தருகையில் அது கருதாது ஏன் சிலர் நின்று கொண்டிருக்கிறார்கள்? வரங்களையும் சாபங்களையும் கலந்து தந்து விட்டு அமைதியாய் நின்றுகொண்டிருக்கின்ற வாழ்க்கை. எது வரம்? எது சாபம்? என்று தெளிய முடியாத மனிதர்கள். அவர்களின் பிரதிநிதியாய் இங்கு கரன். தடைகளைத் தாண்டுவதற்குரிய தருணம் எதுவென்பதை அறிய முடியாதிருப்பது கொடுமை. எதிராளி தளரும் ஒற்றை விநாடியை அவதானித்து அந்த விநாடியில் பாயாதிருப்பது குற்றம். இவற்றின் விளைவாய் கரன் அதே சதுரத்தினுள். கரனுக்காக மட்டுமன்றி வாய்ப்புக்களை அறியாதே தவறவிடுகின்ற அனைத்து மனிதருக்காகவுமான துன்பம் இவன் மனதில் ஏறிற்று.

அடிக்கடி அவர்கள் கூச்சலிட்டார்கள். வலிமைக் குறைவே கோபம். பலவீனமே கோபம். இயலாமை, கெட்ட வார்த்தைகள் சிலவற்றைத் துப்பிற்று. வீதியோரப் பயணிகள் போலவே துப்பப்பட்ட எச்சிலைக் கவனியாது விளையாட்டுத் தொடர்ந்தது. தோல்விகளும் வெற்றிகளும் அடிக்கடி மாறிக் கொண்டிருப்பதால் விளையாட்டில் மேன்மேலும் தீவிரப்பட்டார்கள். "கொஞ்சம் கசக்கும் தோல்விகள்" ஏன் கவிஞரால் கேட்கப்பட்டன எனப்புரிந்தது. ஒவ்வொரு பெட்டியும் வகுப்பறைகளாய்த் தோன்றிற்று. உடல், உள, பொருளாதார, திறமைத் தடைகளை மீறி அதிர்ஷ்டம் அருகிருந்து வாழ்த்த படிக்கும் வகுப்பைக் கடக்க முயற்சிக்கும் மாணவர்கள், இவ்விளையாட்டோடு ஒற்றுமைப்பட்டார்கள். இவனுக்கு இன்னும் சிந்திக்க வேண்டும் போலிருந்தது.

புறத் தடைகள் மறக்க மனதில் அகத்தடைகள் எழுந்தன. வாழ்க்கைக் களத்தினுள் இறங்கும் வீரனாய் மனம் நின்று கொண்டிருந்தது. தடை செய்யும் வீரர்களாய் செயலுக்கான துணிவின்மை, சோர்வு, மெதுவாய் மனமுரசும் சோம்பல், உயர்வைத் தடுக்கும் விமர்சனங்கள், பதற்றம் கூடவே இன்னும் சில. இவற்றைப் புறந்தள்ளி இலக்கிற்குபபாய்ந்தாக வேண்டும்.

திடீரென உற்சாகக் கூச்சல்; இலக்குத் தொட்டிருந்தான் ஒருவன். இனி வந்தவழி திரும்பியாக வேண்டும். கூட்டம் [illegible]து. உற்சாகங்கள் விசிலாய் [illegible]ர்த்தப்பட்டன. நண்பர்களுடன் [illegible] தானும் ஆரவாரித்தான் அவன். அது தவறு. வாழ்வின் பாதையில் கடக்கப்படுகின்ற ஒவ்வொரு வெற்றிக்கும் வாழ்வை வென்றதாய் ஆரவாரிப்பது அறியாமை. அறியாமை பதற்றம் தந்தது; அவசரம் தந்தது. கடப்பதற்கு களம் காத்திருந்தது. பாதி சுவைக்கப்பட்ட வெற்றியில் அவன் பொறுமையிழந்தான்; தன்னிலை மறந்தான். அடுத்த இரண்டு நிமிடங்களில் கடக்கும் போது மறித்து அடிக்கப்பட்டான். தலைகுனிந்து வெளியேறினான். கூட்டம் இப்போதும் கைதட்டிற்று; விசில் அடித்து; ஏனென்று புரிவது இவனுக்குக் கஷ்டமாக இருந்தது.

**ச.சாரங்கா**
சங்கத்தானை

விளையாட்டின் இறுதிக்கணங்கள். இவனுக்கும் களமாட வேண்டும் போல..... அகத்தடைகளை வென்றாக வேண்டும். வார்த்தையின்றிய மௌனத்தில் ஊறியிருந்தபடியே பார்த்தான். அந்தப் பார்வைக்கு நண்பனை அழைக்கும் சக்தியிருந்தது. அவன் அருகில் வந்தான். நேசமும் நட்பும் கலந்த கரம் நீட்டினான். வெற்றிக்குப் பெரிய காரணனாய், மிக நிதானமாய் விளையாடிய நண்பன். கைகுலுக்கலுடன் அடுத்த விளையாட்டிற்கான ஊக்கம் வழங்கப்பட்டிருப்பதாய் தனக்குள் நினைத்தான். "ஒரு மாதிரி நல்லபடி முடிஞ்சுது" சொன்ன நண்பனிடம் புன்னகையுடன் விடைபெற்றான். முடியவில்லை. வாழ்க்கை எஞ்சியிருக்கிறது - வெல்லப்படுவதற்காக ஒரு விளையாட்டுக்களம் போல இவனுக்கு முன்னாலுந்தான் - நிச்சயமாக. இவனின் முச்சக்கரச் சைக்கிள் உருளத் தொடங்கியது......

**சிந்தனைக் கரு: தடைகளைத் தாண்டி முன்னேற வேண்டிய வாழ்க்கை.** *

# இறுதி மூச்சுவரை தமிழர் உரிமைக்கு குரல் கொடுத்த மாமனிதர் குமார்

## நேற்று அவரது 31 ஆவது நினைவுநாள்



உலகம் போற்றும் சட்ட மேதை, தமிழர்தம் தனிப்பெரும் தலைவர் அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் இறந்ததும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நிலை என்ன என்று பலரும் எண்ணிக் கொண்டிருந்த வேளையில் தன் தந்தையின் பணியை தொடர்ந்து செய்வதற்காக அண்ணர் குமார் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைப் பொறுப்பேற்று அரசியலில் ஈடுபட்டார். அச்சந்தர்ப்பத்தில் கட்சி ரீதியாக தேர்தலில் நிற்பதற்கு சில இடையூறுகள் ஏற்பட்ட பொழுதும் 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட்டார்.

கடந்த 23வருட காலத்தில் அண்ணர் குமார் எவற்றைச் சாதித்தார் என்பதை சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

முதலாவதாக "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்" என்ற வள்ளுவரின் குறளுக்கு அமைய, தனது தந்தையாரால் ஆரம்பிக்கப்பட்ட முதுபெரும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியை இல்லா தொழிக்க முயன்ற பொழுது நீதிமன்றத்தில் (யாழ். மாவட்ட நீதிமன்றத்தில்) வாதாடி அக்கட்சியை அரசியல் கட்சியாக தொடர்ந்தும் செயல்படச் செய்தார்

1977 ஆம் ஆண்டிற்குப் பின் இனவாத அரசாங்கங்களால் தமிழ் பேசும் இனம் ஒதுக்கப்பட்டு நசுக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் - 1982ஆம் ஆண்டு - ஜனாதிபதித் தேர்தலில் தான் தோல்வியடைவேன் என்று தெரிந்து கொண்டும் தேர்தலில் போட்டியிட்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசார மேடைகளில் வெளிப்படையாக இனவாத அரசியலுக்கு எதிராகப் பிரசாரம் செய்தார்.

1983ஆம் ஆண்டு இனக் கலவரம் நடைபெற்றபின் தமிழ்பேசும் இனத்தின் உரிமைக்காக ஏறக்குறைய 4 வருடங்களாக எல்லா தமிழ், சிங்களக் கட்சிகளுடனும் சமரசம் பேசி சிறீலங்கா சுதந்திரக் கட்சி, இடதுசாரி கட்சிகள், தமிழ்க்கட்சிகள், அமைப்புக்கள் எல்லாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்து - 1989ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட ஆர்.பிரேமதாஸவை எதிர்த்தது இலங்கை முழுவதும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசாரம் செய்தார்.

1989 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும் சிங்களக் கட்சிகள் குறிப்பாக சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவற்றைக் கைவிட்டது. அதன் பின் ஆர். பிரேமதாஸ ஜனாதிபதியான பின்பு பல மாதக் கணக்காக பிரேமதாஸவுடனும் மற்றைய அனைத்துக் கட்சிகளின் சமூகத்தில் இனப்பிரச்சியைத் தீர்ப்பதற்கு எழுத்து மூலம் தனது திட்டத்தை சமர்ப்பித்தார். ஆனால் இம்முயற்சிகள் ஆக்கபூர்வமான பலனைத் தராததால் குமார் தனது அரசியல் வழியை மாற்ற வேண்டி ஏற்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட தமிழ் பேசும் இளைஞர்கள், முதியவர்கள் உட்பட பலரின் வழக்குகளில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இலவசமாக ஆஜராகி பல அப்பாவி இளைஞர்களை விடுதலை செய்வித்தார். பல பயங்கரவாதத் தடைச் சட்ட வழக்குகளை வெல்லக் கூடியதாக சட்ட அறிவு மட்டுமல்ல, சிங்களத்தில் சாட்சி அளிக்கும் சிங்களச் சாட்சிகளை சிங்களத்திலேயே குறுக்கு விசாரணை செய்யும் ஆற்றலும் அவருக்கு இருந்தது.

இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி அவர்களுக்கு எதிரான வழக்கில் அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் ஆஜரான பொழுது அண்ணர் குமாரும் கூடச் சென்று உதவி செய்தவர். அண்ணர் குமார் இந்தியாவிலும் சட்டத்தரணியாக ஆஜராவதற்குரிய அனுமதியைப் பெற்றுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இந்திய அமைதிப்படை இருந்தபோது - அப்பாவி மக்கள் தடுத்து வைக்கப்பட்ட பொழுது - இந்திய அமைதிப் படைக்கு எதிராக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தவர். அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தால் கட்டளை அனுப்பப்பட்டு நீதிமன்றத்தில் அவர்கள் ஆஜராகத் தவறிய பொழுது நீதிமன்றத்தில் வாதாடி அமைதி காக்கும் படைப் பொறுப்பதிகாரிக்கு எதிராக நீதிமன்றத்தால் பிடிவிறாந்து பிறப்பிக்கச் செய்தவர் குமார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன்பின்புதான் அண்ணர் குமார் அனுரா பண்டாரநாயக்காவை தன்னுடன் அழைத்துக்கொண்டு இந்தியப் பாதுகாப்பு படை சூழ்ந்து கொண்டிருந்த வன்னிக் காட்டுக்குள் சென்று தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கு முயற்சி செய்தார்.

அண்ணர் குமார் தனது உயிரை துச்சமென மதித்து கடந்த 23 வருடங்களாக துப்பாக்கிகளுக்கு எதிராக - கடவுளால் அவருக்கு கொடுக்கப்பட்ட அளப்பரிய துணிவை தனது ஆயுதமாக பாவித்து - தனக்கு அப்பாற்பட்ட சக்தியின் துணையுடன் - ஜனநாயக ரீதியில் - தமிழ்பேசும் இனத்திற்காக அரசியலை நடத்தியவர். அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் கூறிய கூற்றுக்கமைய "தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா" என்ற முறையில் யாருக்கும் அடிபணியாது தமிழன் என்று தலை நிமிர்ந்து, சிங்கத்தின் குகைக்குள் நின்று வாழ்ந்து வந்தார் குமார் என்பதை யாரும் மறுக்க முடியாது. அண்ணர் குமார் தமிழ் இனத்தின் நிலை என்ன என்பதை சிங்கள மக்களும் அறிய ரி.என். எல். ஒளிபரப்புச் சேவையில் சிங்களத்தில் பேட்டி கொடுத்தார். அது மட்டுமல்ல, வெளிநாடு களிலும் தமிழரின் பிரச்சினையை மூடி மறைத்து அரசாங்கங்கள் செய்த பிரசாரங்களுக்கு எதிராக எதிர்ப்பைத் தெரிவித்து தமிழரின் நிலையை வெளிநாடுகளுக்கு ஓரளவுக்கு எடுத்துக் காட்டியவர். இதனால்தான் இன்று அண்ணர் குமாரின் மறைவை ஒட்டி கனடா, பிரான்ஸ், இலண்டன் மற்றும் சில வெளிநாடுகளில் சோகமயம் வானொலி மூலமும் மற்றும் சில வழிகளிலும் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

அண்ணர் குமார் கடந்த 25 வருட காலமாக அரசியலில் முழு ஈடுபாடுடையவராக இருந்து வந்தார். ஆனால் அவரது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி பொது மக்கள் எவரிடமிருந்தும் நிதி பெறாமலேயே செயற்பட்டு வருகின்றது.

காலஞ்சென்ற டாக்டர் வேலாயுதபிள்ளை அண்ணர் குமாருடன் நெருங்கிய தொடர்புடையவராக இருந்தசமயம் அவர் கூறியதையும் இங்கு ஞாபகப்படுத்துவது பொருத்தம். "குமார் பொன்னம்பலம் தனது மனதில் எதுசரி என்று படுகின்றதோ அதை எதற்கும் அஞ்சாமல் வெளிப்படையாகக் கூறுபவர். அது மட்டுமல்ல உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசும் கபடம் அவரிடம் அடியோடு இல்லை" - என்றார். இந்த அரிய குணத்தை இன்று அவருக்கு எதிராக உள்ள அரசியல் வாதிகளோ அல்லது எதிர்க்கட்சியினரோ கூட ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

அண்ணர் குமார் தமிழ் பேசும் இனம் ஐக்கியப்பட்டு ஒரே குரலில் ஒலிக்க வேண்டும் என்பதற்காக பல வழிகளிலும் முயற்சிகளைச் செய்து வந்தார். இந்த வழிகளில் அவருடைய முக்கியமான பெரிய குணம் என்னவெனில் மாற்றுக் கட்சிகளின் அலுவலகங்களுக்கோ அல்லது தலைவர்களின் இல்லங்களுக்கோ பின்னடிக்காமல் தானாகச் சென்று ஒற்றுமை ஏற்படுத்த பல சந்தாப்பங்களில் முயற்சித்ததாகும்.

இதற்கு உதாரணமாக 1982 ஆம் ஆண்டு மாவட்டசபைத் தேர்தல் நடைபெற்ற காலத்தில் யாழ்ப்பாணம் நூலகம், யாழ். எம்.பி. யோகேஸ்வரனின் இல்லம் மற்றும் பல இடங்கள் எரிக்கப்பட்ட சமயம், தானாக திரு. யோகேஸ்வரன் இருந்த இடத்திற்குச் சென்று அதன் பின் தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயத்திற்குத் தனியாக முதல் சென்று திரு. சிவசிதம்பரம் அவர்களுடன் பேசியதைக் கூறலாம். பின் உடனடியாக தனது தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகக் குழுவைக் கூட்டி, முடிவு எடுத்து, தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயத்திற்குச் சென்று மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாகப் பேசி ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சித்தார். அதுமட்டுமல்ல. 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் எல்லோரையும் சேர்த்து ஒற்றுமையாகப் போட்டியிட முயற்சித்தபோது முழுவதாகக் கைகூடாவிட்டாலும், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மற்றும் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட முக்கிய பிரமுகர்களைச் சேர்த்து சுயேச்சைக் குழுவைக் களத்தில் இறக்கினார்.

இறுதியாக இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன், தனது இல்லத்தில், இனவாத அரசாங்கங்களை எதிர்க்கும் மலைநாட்டு அரசியல் பிரமுகர்களைச் சேர்த்து, தமிழ் பேசும் இனத்தின் ஒற்றுமையை வெளிப்படுத்த முயற்சி செய்தார்.

**காரை க.மு.தர்மராசா**

அண்ணர் குமார் ஆற்றல் மிகுந்த நியாயவாதி; நீதி, நேர்மை, துணிவு, தியாகம் ஆகியவை கொண்ட ஓர் அரசியல்வாதி.ஈழத்தமிழரின் உரிமைகளுக்காகக் கடைசி மூச்சுவரை குரல் எழுப்பிய அஞ்சாத அண்ணர் குமார் பொன்னம்பலத்தின் இழப்பினால் தமிழ்ப் பேசும் இனம் - அவருடைய இடத்தை நிரப்பக் கூடியவர் ஒருவரும் இல்லையே என்று எண்ணி - ஏங்கித் துயரம் அடைந்து கொண்டிருக்கின்றது.

இவரின் இழப்பு தமிழர்களை பொறுத்தவரையில் எதிர்பாராத நேரத்தில் வந்த பேரிடி. அதன் தாக்கம் தமிழரின்விடுதலைக்கான பாதையை மேலும் கரடுமுரடாக்கியுள்ளது.

கடந்த 23 வருடகாலமாக கட்சி ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் அவருடன் நெருங்கி நம்பிக்கையுடனும் அன்புடனும் என்றும் பழகியவன் என்ற ரீதியில் என் உள்ளத்திலிருந்து என்றும் நீங்காத அண்ணர் குமாரின் ஆன்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்!

# "இழைமணித்தாய்! மனித


"மனிதன் தோன்றி ஐம்பதினாயிரம் வருடங்கள் ஆகின்றன. அடுத்த மிலேனியத்துக்கு மனித இனம் இருக்காது என்பது சில அறிஞர்களின் கருத்து. அதனால் சூழலில் பெரும் பாதிப்பு ஏற்படாது; சூழல் மேலும் சிறத்தலடைய வாய்ப்புண்டு. மனிதனின் அடாவடித்தனம் அடங்காது போனால் மேற்படி அறிஞர்களின் கூற்று மெய்ப்பட வாய்ப்புண்டு.

"மனிதன் தோன்றிய காலம் தொட்டு தாய் வழி ஆட்சியே நிலவி வந்தது. 'ஆரியர்களின்' (ஆரிவர்கள் என்று கேட்கிறீர்களா?) ஆதிக்கம் மேலோங்கிய பின் ஆண்வழி ஆதிக்கமும் மேலோங்கியது. மனிதனின் முதற்றாயின் தோற்றம் தொடர்பான கதையிது; தகுந்த ஆதாரங்களுடன் நிறுவப்பட்ட கதை."

முதல் உயிரிதோன்றி, பரிணாமித்து, இன்றைய இனங்கள் எல்லாம் தோன்றியது போல, மனித இனத்திற்கும் ஒரு முதல் தாய் இருந்திருக்க வேண்டும். யூதர்களும், கிறிஸ்தவர்களும், முகமதியர்களும் இவரை ஏவாள் (EVE) என்றும், பிறமதத்தவர்கள் வேறுவேறு பெயர் சொல்லியும் அழைக்கின்றனர். முன்னோடித் தாயொருவர் இருந்திருக்க வேண்டும் என்பதை விஞ்ஞானிகளும் ஏற்றுக் கொள்ளுகின்றனர். இன்றைய பிறப்புரிமையியலறிஞர்கள் (GENETICISTS) கணிப்பின் மூலம் மனிதஇனத்தின் மூலத்தாயின் காலத்தைக் கண்டறிந்துள்ளனர்.

இனமாக்கல் எங்ஙனம் நிகழும் என்பதை சுருக்கமாக ஆராய்வோம். எந்தவொரு அங்கியும் பிறிதொரு அங்கியாக மாறுவதில்லை;மாறவும் முடியாது. அங்ஙனமாயின் எங்ஙனம் புதிய இனங்கள் தோன்றும்?


முதலில் இனத்துக்குரிய வரைவிலக்கணத்தை எடுத்துக் கொள்வோம். "இயற்கையான நிலைமைகளில் தம்மிடையே இனக்



படம் 3 - மனிதகுல உற்பத்தியை விளக்கும்

கலப்பு நிகழ்த்தி வளமுள்ள எச்சங்களைத் தோற்றுவிக்கும் அங்கிகள் ஓர் இனத்துக்குரியவை" என்று கொள்ளப்படும். அல்லது, தற்கால விளக்கப்படி, "ஒரு சந்ததிச் சுவட்டுக் குட்டையை (GENE POOL) பகிர்ந்து கொள்ளும் அங்கிகளெல்லாம் ஓர் இனத்துக்குரியவை" (இலிங்கமுறை இனப்பெருக்கம் செய்யும் அங்கிகளுக்குத்தான் இந்த வரைவிலக்கணங்கள் பொருந்தும்)

இந்த அடிப்படையில் மனித குலங்கள் (ர்குஆயுே சுயுஊநுளு) எல்லாம் ஒரே இனத்துக் குரியவை. கோக்கேசியர்களாக இருந்தாலென்ன, நீக்கிரோக்களாக, மொங்கோலியர் களாக, ஒஸ்றலோயிட்டுக்களாக இருந்தாலென்ன, சகலரும் ஒரே இனத்துக்குரியவர் கள் தம்மிடையே இனக்கலப்புக்கள் நிகழ்த்த முடியும். இதே போன்று, அண்டங்காகமும் ஊர்க்காகமும் ஒரு சாதிக்குரியவை; ஆனால் வேறுவேறு இனங்களுக் குரியவை; தம்மிடையே இனக்கலப்பு நிகழ்த்துவ


1970 களில் பெறப்பட்ட மிகவும் புகழ்பெற்ற மனித விம்பம் 'லூசி'(LUCY). மிக அநாதியான மனிதனாகிய ஒஸ்றாலோபைதிகஸ் அபறென்சிஸ் (AUSTRALOPITHUCUS AFARENSIS) சினுடைய மிகச் சிறந்த மாதிரிப்பொருள் இது. இது எத்தியோப்பியாவில் கிடைத்தது.


மிக அநாதியான மனிதக்குரங்கின் மண்டையோடு. இதற்குத் தரப்பட்டுள்ள பெயர் இஜிப்ரோ பைத்திக்கஸ் (AEGYPTOPITHECUS). இம்மண்டையோடு எகிப்தின் ஒலிகோசீன் காலத்திற்குரிய படுக்கைகளிருந்து (OLIGOCENE BEDS) பெறப்பட்டது. பபூன் (BABOON) அளவு பருமன் உள்ள இவ்விலங்கு குரங்குகளைக் காட்டிலும் சில முன்னேற்றங்களைக் காட்டுகின்றது. அவையாவன:- தொடர்பு அடிப்படையில் பெரிய மண்டையோடு, வாலில்லாத இயல்பு. இவையிரண்டும், மனிதன் உட்பட, பிற்கால மனிதக்குரங்குகளுக்கு (APES) உரிய சிறப்பியல்புகளாகும்.


தில்லை. ஓர் இனத்தில் பல பேதங்கள் (VARIETIES) இருக்கலாம். மனித குலங்கள் எல்லாம் பேதங்களே. மாமரம், செவ்வரத்தை, நாய், மாடு போன்ற பல அங்கிகளிலெல்லாம் பலபேதங்கள் இருப்பது யாவரும் அறிந்ததே.

பாகுபாட்டின் அலகு - இனம் (SPECIES). அங்கிகள் முதலில் இனங்களாக வகுக்கப்படும். இனங்கள் சாதிகளாகவும் (GENERA), சாதிகள் குடும்பங்களாகவும் (FAMILIES), குடும்பங்கள் வருணங்களாகவும் (ORDERS), வருணங்கள் வகுப்புக்களாகவும் (CLASSES), வகுப்புக்கள் கணங்களாகவும் (PHYLA), கணங்கள் இராச்சியங்களாகவும் (KINGDOMS) வகுக்கப்படும். இவற்றிடையேயும் பிரிவுகளுண்டு. இந்த அடிப்படையில் இரு பெரும் இராச்சியங்களுண்டு. ஒன்று தாவர இராச்சியம். மற்றது விலங்கு இராச்சியம். மனிதன் உட்பட முதுகெலும்புள்ள விலங்குகள் எல்லாம் கோடாற்றா (CHORDATA) என்ற கணத்திற்கும், வேட்டிபிறாற்றா (VERTEBRATA) என்ற பிரிவிற்குமுரியவை.

இனங்களுக்குள்ளே சில அங்கிகளில் மாறல்கள் (விகாரங்கள்) ஏற்பட்டு. இவை தொடர்ந்து, மாறல்கள் அடைந்த அங்கிகள் வாழ்க்கைப் போரில் வெற்றி கண்டால், புதிய இனங்கள் தோன்றுவதற்கு வழிகோலும். இங்ஙனம், பழைய இனங்கள் இருக்கக் கூடியதாக, புதிய இனங்களும் தோன்றும். அதனால் இனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அதேசமயம், மாறும் சூழலில், வாழ்க்கைப் போரில் தோல்வி காணும் இனங்கள் அழிந்து மறையும். வெற்றி காணும் இனங்கள் தொடர்ந்து நிலைக்கும். கூர்ப்பு அடிப்படையில் முதுகெலும்புள்ள விலங்கு வகுப்புக்கள் (VERTEBRATE CLASSES) தோன்றிய முறையை படம்:-1 விளக்குகின்றது. சில வகுப்புக்கள் சிலகாலம் ஆட்சியுள்ளவையாக இருந்தமையும், சில வகுப்புக்கள் அழிந்து மறைந்து போனதையும் படம் விளக்குகின்றது. இங்ஙனம் மீன்களுக்குரிய காலம்; தவளையினத்துக்குரிய காலம், நகருயிரிகளுக்குரியகாலம், பாலூட்டிகளுக்குரிய காலம் எனக் காலத்தை வகுக்கலாம். தற்காலம் பாலூட்டிகளுக்குரிய காலம்; சிறப்பாக மனிதனுக்குரியகாலம். இவையே ஏனைய அங்கிகளுக்கெல்லாம் மேலாக ஆட்சி செலுத்துகின்றன. முதுகெலும்புள்ள விலங்குகளின் கணவரலாற்றை படம்:-2 எளிமையாக விளக்குகின்றது.

மேற்கூறியமுறையில், பிறிதொரு இனத்திலிருந்துதான், மனித இனமும் தோன்றியிருக்க வேண்டும். மனிதக் குரங்குகளுக்கும், ஆதிமனிதருக்கும் (குரங்கு மனிதன்), இன்றைய மனிதனுக்கும் நிறைந்த அளவில் ஒற்றுமைகள் உண்டு. அதனால் மனிதக்குரங்குகளுக்கும் (MAN APES) ஆதிமனிதனுக்கும் (APE MAN) பொதுவான மூதாதை இருந்திருக்க வேண்டும் என்று நம்பப்பட்டது. இன்றைய பிறப்புரிமையியலாளர்கள், வன்கூட்டு ஒற்றுமைகளையும், குருதி ஒற்றுமைகளையும் அடிக்கொண்டு சிம்பன்சி இனத்திலிருந்து மனிதன் தோன்றியிருக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துள்ளார்கள். இக்கருத்தை மனித

வியலாளர்களும் (ANTHROPOLOGISTS), தொல்லுயிரியலறிஞர்களும் (PALAEONTOLOGISTS) ஏற்றுக்கொள்ளுகின்றனர். இன்றைய பிறப்புரிமையியலறிஞர்களின் (GENETICISTS) கருத்துப்படி மூதாதை சிம்பன்சியிலிருந்து ஆதிமனிதன் (ANCESTRAL HOMINID) 80 முதல் 40 லட்சம் வருடங்களுக்கு முன் கிளைத்திருக்கவேண்டும். எத்தியோப்பியாவில் கிடைத்த ஒரு பெண்ணின் உயிர்ச்சுவடு இதற்கு ஆதாரமாய் அமைகின்றது. இது கிட்டத்தட்ட நாற்பது முதல் முப்பது வருடங்கள் பழமை வாய்ந்தது. இதற்கு "லூசி" (LUCY) என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. லூசி மூன்றரை அடி உயரமுள்ளவர்; நிமிர்ந்த நடையுடையவர்; இவரின் முன்னோர்கள் குரங்கினத்திலிருந்து பிரிந்து மனிதக் கூர்ப்பிற்கு வழிகோலினார்கள் என்பதற்கு லூசியின் சுவடு ஆதாரம். லூசியின் வழி முறையாகத் தோன்றியவர்கள் படிமுறையாக முறையே ஒஸ்றாலோபைத்திகஸ் ஆபிரிக்கானஸ் (AUSTRALOPITHECUS AFRICANUS), பித்தெகாந்துறோப்பஸ் இறைக்ரஸ் அல்லது ஜாவா மனிதன் (PITHECANTHROPUS ERECTUS / JAVA MAN), சினான்துறோப்பஸ் பிகினென்சிஸ் அல்லது பீக்கிங் மனிதன் (SINANTHROPUS PEKINENSIS / PEKING MAN), என அழைக்கப்பட்டனர். இவையனைத்தும் ஆதிமனிதன் வகைக்குரியவை. கூன் விழுந்த தோற்றமுடையவை. மனிதக்குரங்குகளுடன்



மனிதக் கூர்ப்பு

கூடிய ஈட்டமுடையவை. ஆயினும் கருவிகளைப் பயன்படுத்துவதுடன், கருவிகளைத் தயாரிக்கும், செப்பனிடும் ஆற்றலையும் பெற்றிருந்தன. சிம்பன்சி போன்ற மனிதக் குரங்குகளுக்கும் கருவிகளைப் பயன்படுத்தும் ஆற்றலுண்டு ஆனால் தயாரிக்கும் ஆற்றல் இல்லை.

ஆதிமனிதரைத் தொடர்ந்து மனிதசாதி படிப்படியாகக் கூர்ப்படைந்தது. மனிதனின் சாதிப் பெயர் ஹோமோ (HOMO). மனித சாதிகுரிய படிமுறைகள் முறையே ஹோமோ ஹபிலிஸ் (HOMO HABILIS), ஹோமோ ஹீடெல்பேர்ஜென்சிஸ் (HOMO HEIDELBURGENSIS), ஹோமோ றோடேசியென்ஸ் (HOMORHODESIENSIS), ஹோமோ நியண்டர்தலென்சிஸ் (HOMO NEANDERTHALENSIS). ஹோமோ சேப்பியன்ஸ் (HOMO SAPIENS) ஆகும். தற்கால மனிதனின் விஞ்ஞான பெயர் ஹோமோ சேப்பியன்ஸ் சேப்பியன்ஸ். அதாவது புத்தியுள்ள மனிதன் (ஹோமோ - மனிதன், சேப்பியன்ஸ் - புத்தியுள்ளவன்). தற்கால மனிதனின் நேரடி முன்னோடி குறோ மக்னன் மனிதன் (CROMAGNON MAN) என அழைக்கப்பட்டான். இவனும் ஹோமோ சேப்பியன்ஸ் இனத்துக்குரியவன். (நியண்டர்தல் மனிதனும் கூட தற்கால மனிதனின் இனத்திற்குரியவனே. இருவரும் ஒரே இனம், வேறுவேறு பேதங்கள், உப இனங்கள் என்று கொள்ளலாம். இவர்களின் விஞ்ஞா


தல் மனிதன் -மோ சே
நியண்டர்தலன்சிற்கால ம
ஹோமோ சேப்பிசேப்பியன்

மனித சாதிக்கள் கூன்
நிமிர்ந்த, தோற்றத்டையவர்க
மூளை வளர்ச்சிடையவர்கள்
குரங்கினத்திற்கு த. மனித
திற்குரிய, ஓர் இகப் பெரு
ஒவ்வொரு விரனதிர்கொண்
படுத்தக் கூடிய இதுவே
மில் வளர்ச்சிக்கு து. ஊசிநூ
பது போன்ற ஒரு டயத்தை
கொள்ளுங்கள், னிதனால்
குரங்குகளால் மு

பாலூட்டிகளின்இயல்பு,
தொடர்பாக, அாக மயிர்
இருத்தல், ஆனானின் தோ
ணமாகப் போய்வ்தனால் ம
நிர்வாணமான கு AKED A
வும் (செல்லமாகப்பார்கள்.

மனித இனத்தனோடித்
பொழுது தோன்றிர் என்பதை
வோம். பிறப்புரிவ்படையில்
ஆராயலாம், எமக் சந்ததிச் சு
பரம்பரையலகுகளES) பெற்
வாயில்லாகக் கிறன. மேற்ப
கள் வெறும் னெ. இவை
(டியொட்சிறைபேக்கிளிக்கம்
DEOXYRIBO NC ACID)

அழைக்கப்படும். D.N.A யு
செய்தியைத் தாறும். கட்டடங்
குரிய "பிளான்" செய்திகளின்
படையில் ஒவ்வெகியினதும்
அமைக்கப்படும். லில், கல
லுள்ள இரு புளில் D.N
ளுண்டு. ஒன்று CLEUS), ம
இழைமணி (MNDRIA)
லுள்ள D.N.Aக்கந்தைவழியா
பாதி தாய் வழ்வரும். அத
இவற்றை ஆராய் இழைமணி
உள்ள D.N.A யாக மாத்
வரும். அதனால் மனிதர்கள்
ரும் தாய் வழியலத் தாயிலி
பெற்ற இழைமண கொண்டிரு


மனிதக்கூர்ப்பின் சாவிக்குரிய நடயோடுகள். சேப்பியன்ஸ் (HOMO SAPIENS) இறெக்ரஸ் (H ஹைபிலிஸ் (HOMO HABILIS) லாபைதிகஸ் PITHEUS ROBUSTUS). ஒவ்வெ கீழ் அலகு கூர்ப்பின் திசை வலப்புறத்திலிருந்துநோக்கி; சிற - கபாலத்தின் (மூளைப் பெட்டி) அதிகரிப்பு, முகம் தட்டையாதல்.

# தகுலத்தின் ஆதிபராசக்தி!!"

தன் - ஹோமோ சேப்பியன்ஸ்
லன்சிஸ்; தற்கால மனிதன் -
சேப்பியன்ஸ் சேப்பியன்ஸ்)
சாதிக்குரியவர்கள் கூன் விழாத,
தாற்றத்தை உடையவர்கள்; அதிக
ர்ச்சியை உடையவர்கள். மேலும்
திற்கு இல்லாத, மனித வர்க்கத்
ஓர் இயல்பு கைப் பெருவிரலுடன்
விரலையும் எதிர்கொண்டு பயன்
டிய தன்மை. இதுவே கைத்தொ
சிக்கு உதவியது. ஊசிநூல் கோர்ப்
ஒரு சிறிய விடயத்தை எடுத்துக்
கள். இது மனிதனால் முடியும்;
ல் முடியாது.
களின் ஓர் இயல்பு, தோலுடன்
. அடர்த்தியாக மயிர்போர்வை
ஆனால் மனிதனின் தோல் நிர்வா
பாய்விட்டது. அதனால் மனிதனை
ன குரங்கு (NAKED APE) என
மாக?) அழைப்பார்கள்.
இனத்தின் முன்னோடித் தாய் எப்
தான்றியிருப்பார் என்பதை ஆராய்
ப்புரிமை அடிப்படையில் இதை
எமக்கு எமது சந்ததிச் சுவடுகள்/
குகள் (GENES) பெற்றோர்கள்
க் கிடைக்கின்றன. மேற்படி சுவடு
ம் செய்திகளே. இவை D.N.A
றைபோ நியூக்கிளிக்கமிலம் -
BO NUCLEIC ACID) எனவும்




டும். ஒவ்வொரு D.N.A யும் ஒரு
தாங்கியிருக்கும். கட்டடங்களுக்
ள்" போல இச்செய்திகளின் அடிப்
வ்வொரு அங்கியினதும் உரு
டும். எமது உடலில், கலங்களி
புன்னங்கங்களில் D.N.Aக்க
று கரு (NUCLEUS), மற்றது
(MITOCHONDRIA) கருவி
Aக்கள், பாதி தந்தைவழியாகவும்,
வழியாகவும் வரும். அதனால்
ாய்வது சிரமம். இழைமணிகளில்
A தாய் வழியாக மாத்திரமே
ால் இன்றுள்ள மனிதர்கள் சகல
யாக ஒரு மூலத் தாயிலிருந்து
மணிகளையே கொண்டிருக்கின்



நாலு மண்டையோடுகள். இடமிருந்து வலம் - ஹோமோ
) ஹோமோ இறெக்ரஸ் (HOMO ERECTUS), ஹோமோ
S), ஒஸ்றாலோபைதிகஸ் றோபஸ்ரஸ் (AUSTRALO-
வொன்றினதும் கீழ் அலகு அருகில் வைக்கப்பட்டுள்ளது.
து இடப்புறம் நோக்கி; சிறப்பாக அவதானிக்கக் கூடியவை
படிப்படியான அதிகரிப்பு, நடுக்கோட்டுப்புருவம் மறைதல்,



புறோகொன்சல் (PROCONSUL) ஆரம்பகால மனிதக் குரங்குகளில் புகழ் பெற்றது. மனிதக்கூர்ப்பின் பல தர்க்கங்களில் இது நடுநாயகமாக விளங்குகின்றது. இதன் உயிர்ச் சுவடுகள் பல கென்யாவில் பெறப்பட்டன. ஆரம்ப மயோசீன் (EARLY MIOCENE) காலத்திற்குரியவை. சுவடு 1930 இல் பெறப்பட்டது. தொடர்ந்து இச்சாதிக்குரிய எட்டு இனங்கள் மத்தியதரைக் கடலைச் சூழவும் கிழக்கு ஆபிரிக்காவிலும் பெறப்பட்டுள்ளன. இப்பொழுது இது தற்கால மனிதக்குரங்குகளுக்கும் மனிதனுக்கும் உரிய பொதுவான வழிக்குரியதாகக் கருதப்படுகின்றது.

றார்கள். (நாம் BLOOD RELATION - துடக்கு வழி - என்று இனங் கொண்டாடுவது போல, MITOCHONDRIAL RELATIONSHIPயை ஆராய்ந்தால், அங்கிகள் எல்லாம் அதில் அடங்கும்; தாவரங்கள், விலங்குகள், எல்லாம்). அதனால் இழைமணிகளை ஆராய்வதன்மூலம் மூலத்தாயைக் கண்டு பிடிக்க முடியும். இந்த நோக்குடன், பிறப்புரிமையியல் அறிஞர்கள், நூற்றுக்கணக்கான வேறுபட்ட குலவகைகளுக்குரிய தாய்மார்களின் சூல்வித்தகங்களைப் (PLACENTA - இளங்கொடியைப் பெற்று (குழந்தை பிறந்தவுடனும்), அவற்றிலிருந்து கலங்களை(CELLS)ப் பெற்று, கலங்களிலிருந்து இழைமணிகளைப் பெற்று, இழைமணிகளை உடைத்து D.N.A க்களை வடித்தெடுத்து ஆராய்ந்தார்கள். இழைமணிகளிலுள்ள D.N.A க்களில் ஏற்பட்ட மாறல்களுக்குரிய கால வரையறைகளைக் கணித்து மனித இனத்தின் முன்னோடித்தாய் இற்றைக்கு இரண்டு லட்சம் வருடங்களுக்கு முன் தோன்றியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளார்கள். எங்கே என்பதில் கருத்த வேறுபாடு உண்டு. அநேகமானவர்கள் ஆபிரிக்கா என நம்புகிறார்கள். சிலர் ஆசியா என நினைக்கின்றார்கள். இந்த முன்னோடித்தாயும் ஆதிமனிதர்கள் கூட்டத்திலிருந்திருக்க வேண்டும். அவர்களுடன் வேட்டையாடித் திரிந்திருக்க வேண்டும்; கட்டுமஸ்த்தான தசைப்பிடிப்பான உடலை உடையவராக இருந்திருக்க வேண்டும். ஆயினும் மாறல்களைகளையும் உடையவராக இருந்திருக்கிறார். இவரின் சந்ததிகளில் சில கிட்டத்தட்ட 90 ஆயிரம் தொடக்கம் 1 லட்சத்து 80 ஆயிரம் வருடங்களுக்கு முன் தமது பிறந்தகத்திலிருந்து வெளியேறி உலகளாவிய ரீதியில் பரவியுள்ளார்கள். இவர்களுடன் போட்டி போட முடியாமல் ஏனைய மனித கூட்டங்கள் அழிந்து மறைந்து விட்டன. அவர்களின் இழைமணிகள் சந்ததி வழக்கற்றுப் போய்விட்டன. அதனால் இன்று உலகம் முழுவதும் ஒரே மனித இனம் மாத்திரம் இருக்கின்றது. ஆதிமனித கூட்டங்களுக்குரிய சில இயல்புகள் இன்றைய மனிதர்களிலும் உண்டு. உதாரணமாக நியான்டர்தல் மனிதனின் பெரிய மூக்கு ஐரோப்பிய மக்களுக்கு உண்டு. பீக்கிங் மனிதனின் தட்டையான முகம் மொங்கோலியர்களுக்கு உண்டு. ஜவா மனிதனின் தட்டையான நெற்றி சில ஆதிவாசிகளுக்கு (AUSTRALOIDS) உண்டு. அதனால் இவர்கள் அவர்களின் வழித்தோன்றல்கள எனக் கருதினார்கள். ஆயினும் இவ் வாதாரங்கள் போதா. அதனால் இன்றுள்ள மனிதர்கள் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்ற கொள்கையே மேலோங்கி உள்ளது.


மேற்படி விளக்கத்தை பொதுவாக எல்லோரும் ஏற்றுக்கொண்டாலும், மனிதவியலாளர் மத்தியல் ஒரு குறைபாடு உண்டு. அவர்களின் கணிப்புப்படி இன்றைய மனிதன் குறைந்தது பத்து லட்சம் வருடங்களுக்கு முன் தோன்றி யிருக்க வேண்டும். மனித சரித்திரம் ஒருகோடி பத்து லட்சம் வருடங்கள் பழமை வாய்ந்தது என்றிருக்க பிறப்புரிமையியலாளர்கள் சரித்திரத்தை வெறும் இரண்டு இலட்சம் வருடங்களுடன் முடிப்பதை அவர்களால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. காலஎல்லைப் போராட்டத்தைக் காலம்தான் முடிவுகட்ட வேண்டும். புதிய ஆய்வுகள் முடிவுக்கு வழிகோலும் என எதிர்பார்போம். (இத்தகைய சில ஆய்வுகள் காலத்தை மேலும் சுருங்குவதாகத் தெரிகின்றது).

**~குகன்~**



ஒஸ்றாலோ பைதிகஸ் றோபஸ்ரஸ் (AUSTRALOPITHUCUS ROBUSTUS) சின் மண்டையோடு, 1960களில் லூயி.பி.லீக்கி (LOUIS B. LEAKEY) யினால் கென்யாவில் கண்டெடுக்கப்பட்டது. இதன் செல்லப்பெயர் 'சின்ஜ்' ("ZINJ"). இத்தற்கு முதலில் இடப்பட்ட சின்சான்திறோப்பஸ் (ZINJANTHROPUS) என்ற பெயரின் சுருக்கம் இது. மிக உறுதியான அலகு இருப்பதனால் 'கொட்டை உடைக்கும் மனிதன்' ("NUT CRACKER MAN") என்றும் அழைப்பதுண்டு. கனத்த கட்புருவங்களும், முன்னீட்டிய முஞ்சியும் அனாதியான இயல்புகள் என்பது குறிப்பிடத்தக்கது.


மனித குலங்களின் (HUMAN RACES) தோற்றம் தொடர்பாகவும் மாறுபட்ட கருத்துக்களுண்டு. ஒரு சாராரின் கருத்துப்படி மனிதக் கூர்ப்பு தொடர்ச்சியாக நேர்கோட்டிற்குரியதாக நடந்துள்ளது. இதிலிருந்து கிளைகள் தோன்றி மறைந்து விட்டன. அதனால் ஓர் இனம் மாத்




படம் 1-காலத்திற்கூடாக அவற்றின் வீச்சையும், ஒப்பீட்டுச் செறிவையும் காட்டும், வேட்டிபிறாற்றா வகுப்புகளின் குடும்ப மரம்.

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

திரம் எஞ்சியுள்ளது. குல பேதங்கள் அண்மைக்கால விருத்திக்குரியவை. உதாரணமாக ஆபிரிக்காவிலும் அயனமண்டலப் பிரதேசங்களிலும் வெப்பப் பாதுகாப்பிற்காக தோல் கறுப்பாக மாற, தட்ப வெப்பப் பிரதேசங்களில் வெப்பத்தை உறுஞ்சி உயிர்ச்சத்து 'D' தொகுப்பதற்காக தோல் வெள்ளையாக மாறியது. அதாவது தேவைக்கு ஏற்ப மெலானின் நிறப் பொருளின் அடர்த்தி மாறியுள்ளது (படம் -3A). மற்றொரு சாராரின் கூற்றுப்படி ஆதிகாலம்




படம் 2. முதுகெலும்புள்ள விலங்குகளின் கணவரலாற்றை எளிமையாக விளக்கும் படம்.

தொட்டே குலபேதங்கள் ஏற்பட்டு சமாந்தரமாக மனிதகுலங்கள் வளர்ந்துள்ளன (படம்-3B). மூன்றாவது கூட்டத்தினரின் விளக்கம், ஆதிகாலம் தொட்டே மனிதகுலங்கள் விருத்தியடைந்தாலும் இவற்றிற்கு இடையே இடைத் தொடுப்புக்களும் ஏற்பட்டுள்ளன என்பதாகும். (படம்-3C). இதுவே பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் கருத்தாகும்.

மனிதகூர்ப்பின் தொடர்ச்சியும் கால எல்லைகளும் (பிறப்புரிமையாளரின் கணிப்பின்படி) படம்-4 இல் தரப்பட்டுள்ளன. மிகக் குறுகிய காலத்தில் மனிதக் கூர்ப்பு மிக வேகமாக ஏற்பட்டுள்ளது. மரத்திலிருந்து நிலத்துக்குத் தாவிய மனிதன் இன்று அண்டவெளிக்குத் தாவியுள்ளான். அடுத்து எங்கு தாவுவானோ?

பிறிதொரு இனத்திலிருந்துதான், மனித இனமும் தோன்றியிருக்க வேண்டும். மனிதக் குரங்குகளுக்கும், ஆதிமனிதருக்கும் (குரங்கு மனிதன்), இன்றைய மனிதனுக்கும் நிறைந்த அளவில் ஒற்றுமைகள் உண்டு. அதனால் மனிதக் குரங்குகளுக்கும் (MANAPES) ஆதிமனிதனுக்கும் (APEMAN) பொதுவான மூதாதை இருந்திருக்க வேண்டும் என்று நம்பப்பட்டது. இன்றைய பிறப்புரிமையியலாளர்கள், வன்கூட்டு ஒற்றுமைகளையும், குருதி ஒற்றுமைகளையும் அடிக்கொண்டு சிம்பன்சி இனத்திலிருந்து மனிதன் தோன்றியிருக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துள்ளார்கள்.

# இந்த வார இராசி பலன்

**05-02-2000 இலிருந்து 11-02-2000 வரை**

| | | | |
|---|---|---|---|
| செவ். | வியா. சனி | | |
| புத. | இராசிச்சக்கரம் | | ராகு |
| சூ கேது சந். | | | |
| வெள். | | | |

*மாற்றம்: திருவோணம் - சந்திரன் மகரம் இராசியில் நிற்கும்.*

*அரசியலில் இறுக்கமான முடிவுகளை வெளிநாட்டுத் தலைவர்கள் கூறுவார்கள். அலட்சியம் செய்யும் பகுதியினர் இழப்புக்கள் அடைவார்கள். வடதிசையில் தாக்கம், தென்திசையில் அழுத்தம், கிழக்கில்*

## சோதிட சஞ்சீவி

*பதற்றம், மேற்கில் நடவடிக்கை என மாறிமாறி நடக்கும். மாணவர்கள், தொழிலாளர்கள் உரிமைக்குரல் கொடுப்பர். முக்கிய அரசியல்வாதிகளுக்கு நல்லதல்ல. இந்தியா அயல் நாடுகளுக்கு புதிய அழுத்தங்கள் கொடுக்கும். உலகில் கிழக்கு நாடுகளின் கூட்டுச்சேர்க்கை, மேற்கு நாடுகளின் பொருளாதார அழுத்தங்கள், அணுஆயுதப் பெருக்கம் என்பன ஏற்படும் எனக்கிரக நிலைகள் காட்டுகின்றன.*

## மேடம்

உலகத்தில் மனிதர்களைவிட காசுக்குத்தான் மதிப்பு. இதற்கு முன்பு சொந்தபந்தம் எல்லாம் பெறுமதியில்லை. தொழில் ஸ்தானத்தில் இலாபம் கருதிப் பலசெயற்பாடுகளைச் செய்வீர்கள். சகோதரர்கள் கருத்து வேற்றுமைப்படுவர். காணி பூமி, வாகனம், சேரும். அல்லது செலவு செய்து புதுப்பிப்பீர்கள். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். திடீர் திடீரென அங்குமிங்கும் ஓடியாடித்திரிந்து கருமமாற்றுவீர்கள். வாய்வுத்தொல்லை, மலசல உபாதைகள், தலையிடி, கண்கூச்சம் என்பன கொடுக்கலாம். செய்தித்துறை, மருந்துத்துறை, நிர்வாகத்துறை, வியாபாரத்துறையினர்கள் நன்மை அடைவார்கள். பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன், வெள்ளி.*

## இடபம்

படித்த சிலர் படியாதவர் பலரிடம் ஏமாறுவது சர்வசாதாரணமாகி விட்டது. அதற்காக படியாதவர்களை படித்தவர்கள் ஏமாற்றுவதில்லை என எண்ணலாகாது. சுழல் சக்கரவாழ்க்கையில் ஏற்றத்தாழ்வு சகஜம். தொழில் பீடத்தில் மேலதிகாரிகள் கௌரவிப்பார்கள். நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். அடிக்கடி கோபத்தால் பதற்றப்படாமல் கருமமாற்றுங்கள். பொருளில் ஒரு கண்ணாக இருங்கள். எதிர்ப்பாலாருடன் மனக்கசப்பு வந்தாலும் அமைதியாக இருந்து சமாளியுங்கள். வாய்வுத் தொல்லை, நெஞ்சுவலி, கைகால் பிடிப்பு, நரம்புச்சோர்வு என்பன கொடுக்கலாம். விவசாயத்துறை, கமிஷன்துறை, ஆசிரியத்துறை, வியாபாரதுறை தொடர்புடையோர்களுக்கு அதிக மாற்றங்களும் நன்மைகளும் கொடுக்கும். இடமாற்றங்களைச் செய்வதனால் நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன், வெள்ளி.*

## மிதுனம்

நாம் எவ்வளவு சிந்தித்தாலும், போராடினாலும் எமது பொருளாதாரத்தை நசுக்குவதிலிருந்து விடுதலை பெற்றாலன்றி சாப்பாட்டுக்கே நாம் ஓடியாடித் திரியாமல் இருக்க முடியாது போலல்லவா இருக்கின்றது? தொழில் ஸ்தானத்தில் ஓய்வின்றிப் போராடிக் கொண்டிருப்பீர்கள். வாகன சுகமுண்டு. தந்தையின் உறவினர்களுடன் வாக்குவாதங்கள் ஏற்படலாம். புதிய ஆடை அணிகலன்களுக்காக அதிக செலவுகள் செய்வீர்கள். எதிர்ப்பாலாருடன் அவதானமாகப் பழகவும். அல்லது தடியைக் கொடுத்து அடி வாங்கியவர்கள் கதை போலாகும். தலைவலி, வாதவிறைப்பு, களைப்பு, வாய்வுத் தொல்லை என்பன வரலாம். தகவல் துறை, ரீவி, நகைத்துறை, புடைவை வியாபாரம், சாய்புச் சாமான்கள் விற்பனை, கமிஷன்துறை தொடர்புடையவர்களுக்கு மாற்றங்களும் இலாபங்களும் கொடுக்கும். தூரதேசச்செய்தி மகிழ்ச்சிதரும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன.*

## கடகம்

சில மேலதிகாரிகள் தமது வீட்டிற்கு வந்து முகமன் செலுத்து வேண்டுமென எதிர்பார்ப்பது எவ்விதத்திலும் நியாயமாகாது. நீங்கள் தொழில் ஸ்தானத்தில் நேர்மை, உண்மை, உழைப்புக்கு மதிப்புக் கொடுங்கள். உணர்ச்சிவசப்பட்டு எதையும் அள்ளிக்கொட்டாதீர்கள், இரக்க சிந்தையுள்ள நீங்கள் எதையும் வேடிக்கையாகப் பேசிச் சமாளியுங்கள். மற்றவர்கள் வீண்பழி சுமத்தினால் நீங்கள் என்ன செய்ய முடியும்? பொருள் தவறாலாம். நரம்பு வருத்தம், இரத்தஅழுத்தம், வாய்வுத்தொல்லை, சளி, முட்டு, விறைப்பு என்பன ஏற்படாலாம். புண், கிருமித் தாக்கம் வரலாம். கவனமாக இருக்கவும். நகைத்துறை, போக்குவரத்துத் துறை, செய்தித்துறை, வியாபாரத்துறை போன்றவற்றில் தொடர்பானவர்கள் நன்மை - முன்னேற்றம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள்,புதன், வியாழன்.*

## சிங்கம்

நேர்மை, சமநீதியுடன் வாழும் எவரும் கௌரவிக்கப்படுவார்கள். சுகமும், துக்கமும் பிறப்பும், இறப்பும் இறைவனின் நியதிப்படி அமையும். இதை எவ்வராலும் மாற்றமுடியாது. ஆனால் உங்களின் பிடிவாதமும், உறுதியும் தொழில் ஸ்தானத்தில் பல வெற்றிகளை உங்களுக்குத்

## மகாதேவா ஜோதிடம்

தேடித்தரும். பழையன கழித்தலும், புதியன புகுதலும் மாறிமாறி நடக்கும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். சளி, வயிற்றுநோ, நெஞ்சுப்படபடப்பு,முதுகுவலி,வாய்வுத்தொல்லை என்பன ஏற்படும். தூரஇடத்திலிருந்தும், நண்பர்களிடமிருந்தும் நற்செய்திகள் தேடிவரும். குருத்துறை, செய்தித்துறை, தொழில்நுட்பத்துறை, ரீவி, கம்பியூட்டர்துறை, அச்சுத்தொழில் தொடர்பானவர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன்.*

## கன்னி

ஒருவரது வீட்டின் நீள அகல அளவுகள்பிழையாகவும்தோஷநிலைமையிலும் இருந்தால் அவ்வீட்டிலுள்ளவர்களுக்கும் தோஷம் பீடித்திருக்கும். இதைநீக்க அஷ்டலட்சுமி வழிபாடு மிக முக்கியமாகும். தெய்வவழிபாட்டால் தோஷநிலை நீங்கி வளம் பெறமுடியும். உங்கள் தொழில்ஸ்தானத்திலும் தொழில் பெயர் அல்லது காசுபுழங்கும் இடங்களால் பிழைகள் ஏற்படலாம். கவனமாக இருந்து அவற்றை நீக்க முயலுவீர்கள். சளி, வாய்வுத்தொல்லை, நரம்புப்பலவீனம், கிருமித்தாக்கம், அடிவயிற்றுநோ, களைப்பு, சலிப்பு என்பன ஏற்படலாம். சட்டத்துறை, வியாபாரத்துறை, எண்ணெய்த்துறை, பிரயாணத்துறை போன்ற துறையினர் நன்மைகள் அடைவார்கள். தூரதேசச்செய்திகளால் மாற்றங்கள், மகிழ்ச்சி ஏற்படலாம்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன், வெள்ளி.*

## துலாம்

மனிதவாழ்வில் வேசம் போடுவதும், பாசம் வைத்தமாதிரி நடிப்பதும் இக்காலத்தில் சர்வசாதாரணமாகும். நீங்களும் தொழில்ஸ்தானத்தில் சமாளித்து நடவுங்கள். மனக்கவலை ஒன்று மாறிமாறி உடல் உள்ளத்தை தாக்கியபடி இருக்கும். தெய்வபக்தி கொண்டு சமாளித்துக்கொள்ளுங்கள். குடும்பத்தில் ஒருவரால் கவலைகள் தொடர்ந்தபடி இருக்கும். தெய்வபக்தியால் மனச்சாந்தி ஏற்பட்டபடியிருக்கும். களைப்பு, தோல் வருத்தங்கள், தலைவலி, வாய்வுத் தொல்லை என்பன கொடுக்கலாம். சமாதானப் பிரியரான நீங்கள் எந்தப் பிரச்சினையையும் சமநோக்குடன் நோக்கி சமாளிக்கப் பாருங்கள். இடமாற்றம், பிரயாணம் நஷ்டம் கொடுக்கும். மருந்துத்துறை, போக்குவரத்துத்துறை, ரீவி, சங்கீதத்துறை, சட்டத்துறை, குருத்துறையினர்கள் நற்பலன்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்,வியாழன் வெள்ளி.*

## விருச்சிகம்

மனிதவாழ்வில் வளர்பிறை, தேய்பிறை பார்ப்பது முக்கியமாகும். அதனால் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படும். திருமணம் நடக்கும். சுபநாள்கள் வளர்பிறைச்சந்திரன், தெய்வேந்திர முகூர்த்த காலங்களில் சோதிடர்கள் எடுத்துக் கொடுக்கவேண்டும். எனவே தொழில்ஸ்தானத்தில் நல்ல, கெட்ட நேரம் பார்த்துச் செயற்படுங்கள். அதனால் நிதானமான போக்கு இருக்கும். சலிப்புவரும். பொருள்கள் களவு போகும். அயலவர்களின் ஆதரவுடன் இருக்கவும். எதிர்பாலாருடன் அன்பாக இருங்கள். அடிவயிற்றுநோ, கவலை, அடிகாயம் அல்லது தவறிவிழுதல், நெஞ்சுநோ, தலையில், கண்ணில் சிறுபிரச்சினைகள் வரலாம். கோவில்துறை, நிர்வாகத்துறை, இரும்புத்துறை, மருந்துத்துறை என்பனவற்றால் அதிக இலாபங்கள் கொடுக்கும். பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன் வெள்ளி.*

## தனுசு

இரத்த உறவில் செவ்வாயின் நிலை, தாக்கம் மிக வீரியமானது. இதை எவரும் அலட்சியம் செய்ய முடியாது. தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் வரலாம். மனிதவாழ்வே போட்டிதானே. பூர்வபுண்ணியப் பல

னால் உங்களுக்கு திடீரெனச் சில இலாபங்கள்வரஇடமுண்டு. வயிற்றுநோ, சளிவருத்தம், பிடிவாதத்தால் இழப்பு யோசனை ஏற்படல், நெஞ்செரிவு, தலை சம்பந்தமான வருத்தங்கள் கொடுக்கலாம். வாகனத்தாலோ காணி பூமி, வீடு சம்பந்தப்பட்ட இடங்களாலோ செலவுகள் அதிகரிக்க இடமுண்டு. பிரயாணங்களைத் தவிர்க்கவும். பத்திரிகைத் துறை, வியாபாரம், தரகுத்துறை, விவசாயத்துறை, குருத்துறை, நிர்வாகத்துறை, கம்பியூட்டர்துறை தொடர்பானவர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள்,புதன், வியாழன், வெள்ளி.*

## மகரம்

சித்திரம் வரைந்தாலென்ன? பத்திரத்தில் கையெழுத்துப் போட்டாலென்ன? மக்கள் வாழ்வில் அமைதி ஏற்பட யுத்தம் நிற்க வேண்டுமே. நிற்குமா என ஏங்குகிறீர்களா? ஏங்குவதனால் எதுவும் நடந்துவிடுமா? இடமாற்றங்கள் சகஜமாகும். தொழில் ஸ்தானத்தில் அதிகாரம் விட்டுக் காரியங்களைச் செயற்படுத்துவீர்கள். கடமையை சரிவரச் செய்து கொள்ளுங்கள். அல்லது கவலைப்படுவீர்கள். அடிவயிற்றுநோ, கைகால் காயங்கள், நீரினால் அவதி, சலவருத்தம் என்பன வரும். பிரயாணத்துறை, மருந்துத்துறை, சட்டத்துறை, கோவில்துறை போன்றவை தொடர்பானவர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், வியாழன், வெள்ளி.*

## கும்பம்

விதியை எந்த அளவாலும் அளக்கமுடியாது. காலத்தின் வேகத்தால் சரித்திரங்களே மாறலாம். ஏழு வருஷத்துக்கு ஒருமுறை மனிதமனம், சரித்திரங்கள் மாறிமாறி வரும். ஆனால் தொழில்ஸ்தானத்தில் கணத்துக்குகணம் உடலும் உள்ளமும் துடித்தபடி மாறிமாறி வரும். குடும்பத்தவர்களின் முன்னேற்றத்துக்குஓடியாடித்திரிவீர்கள். பொருள்வரவு ஏற்படும். கைகால்வலி, தொண்டைநோ, நெஞ்செரிப்பு, வயிற்றுவலி, வாய்வு,நரம்புச்சோர்வு என்பன ஏற்படலாம். அயலவர்கள் தொல்லைதருவார்கள். வியாபாரத்துறை, அரசியல்துறை, ஆராய்ச்சித்துறை, ஆசிரியத்துறை போன்றன தொடர்புடையவர்கள் நன்மை அடைவார்கள். தூரதேசச்செய்தி மகிழ்ச்சியை கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், வியாழன்.*

## மீனம்

என்ன கற்பனை? என்ன வேகம்? தொழில்துறையில் சலிப்பற்ற போக்கு ஏற்படும். இலாபங்கள் வரும். பேச்சுச் செல்வாக்கால் காரியனுகூலங்கள் ஏற்படும். மேலதிகாரிகளும் நண்பர்களும் உதவிகள் செய்வார்கள். அடிக்கடி உணர்ச்சி வசப்படுவீர்கள். அயலுடன் கோபதாபம்ஏற்படலாம். பொதுஜனத் தொண்டு, வீண்பழி கேட்டல், களவு போதல் என்பன நடக்கும். ஏழரைச் சனி தாக்கங்கள் இருப்பதனால் மனக்கலக்கம், நஷ்டங்கள், ஏமாற்றங்கள் விட்டுவிட்டுக் கொடுக்கும். எதிர்ப்பாலாருடன் கருத்துவேற்றுமைப்படலாம். பிள்ளைகள் அல்லது சகோதரங்களுக்காக அதிக பொருள் செலவு கொடுக்கும். விஷபீடைகள், இரத்தஅழுத்தம், வாய்வு, சளி, முட்டு என்பன இருக்கும். வைத்தியம் செய்யவும். வியாபாரம், சட்டத்துறை, கோவில்துறை, நிர்வாகத்துறை, குருத்துறை, செய்தித்துறை போன்றவற்றுடன் தொடர்புள்ளவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், வியாழன்.*

## வேண்டும் வரங்கள்....

அமைதி யெங்கும் பூக்க வேண்டும்
அடிமைத் தளைகள் அகன்றிட வேண்டும்
அன்னைத் தமிழால் மகிழ்ந்திட வேண்டும்
அயல் நாட்டார் வியக்க வேண்டும்

ஆடிய கூட்டம் அடங்கிட வேண்டும்
ஆண்டவ னோடுநல் உறவு வண்டும்
ஆதரவு அற்றோருக்கு உதவிட வேண்டும்
ஆகாய மெங்கும் நிலவுகள் வேண்டும்

இயலாமை என்பது ஒழிந்திட வேண்டும்
இல்லை என்னாநல் மனது வேண்டும்
இடம் பெயராத வாழ்க்கை வேண்டும்
இதயம் காதலை அறிந்திட வேண்டும்

ஈன்றாள் தன்னை மதித்திட வேண்டும்
ஈழப் போர் ஓய்ந்திட வேண்டும்
ஈனர் தம்மை அழித்திட வேண்டும்
ஈகை அற்றோர் இறந்திட வேண்டும்

உன்னை நீயே அறிந்திட வேண்டும்
உதயன்போற் புதிதாய்நாளும் பிறந்திட வேண்டும்
உலகம் போற்ற உயர்ந்திட வேண்டும்
உழைப்பவர் தம்மை மதித்திட வேண்டும்

ஊனப் பட்டோருக்கு உதவிட வேண்டும்
ஊருடன் கூடி வாழ்ந்திட வேண்டும்
ஊசிமுனை அளவேனும் சொந்தநிலம் வேண்டும்
ஊட்டும் பாலால்வீரம் விளைந்திட வேண்டும்

எங்கும் தமிழர் இணைந்திட வேண்டும்
என்றும் தமிழைப் போற்றிட வேண்டும்
எம்முள் வீரம் விளைந்திட வேண்டும்
எங்கள் நாடு உருவாகிட வேண்டும்

- என்.நவராஜ் -

## திருவாய் மலரும் திமிர்

ஒவ்வோர் குகையிலும் ஒட்டி யொதுங்கியவர்;
பவ்வியமாய்ப் பேசுகிறார் பாசாங்கு - தவ்வலிவர்
கவ்விப் பிடித்ததோர் கட்சித் தலைமையினால்
அவ்வியம் பேசவந்தா ராங்கு.

கவ்விய சேலைதரு காசுபண வீச்சினால்
எவ்விதமோ "எம்பீ" எனும்பொன்றைக் - காவுமிவர்
கொவ்வைப் பழம்போலக் கொட்டுகிறார்
வண்ணங்கள்!
கைவினை செய்வராம் காண்.

பெருநோய் எதுவும் பொருத வராத
மருத்துவக் கத்தி மடியி - னிருப்பாம்!
வருவாய் பெருக்க விரைவாய் இயங்கும்
திருவாய் மலரும் திமிர்.

களுத்துறை மண்ணிற் கழுவாய் தழுவப்
புழுவாய் நெளிந்த விழலே! - எழுந்து
வருவாய் விரைவாய்; வடகீழ்த் திசையின்
எரிவாய் நுழைவாய்! இரந்து.

செந்தீ பரவிச் செருக்கூட்டம் தீயட்டும்!
வெந்து மடிய விடியலும் - வந்திடுமே!
சிந்தியசெந் நீரே சினங்காத் துறைந்திங்கோர்
விந்திய மாமலையாய் மேவு.

(மருத்துவக் கத்தி - மருந்து துவக்கு)

- அங்குசன் -

# தரிசனம்

2

பிரசாந்தியின் பிள்ளையார் முன்றிலில் இருந்தோம். மின்சார ஒளியுடன் இரவின் இருளும் உரிமையுடன் பனியைப் பகிர்ந்து. ஆயிரக்கணக்கில் பக்தர் கூட்டம் இருந்தும், 'சாயிராம்' என்ற மந்திர வார்த்தைகளால்,ஒழுக்கத்தை நிலையாக்கினர் சாயி தொண்டர்கள். நான்கு மணிக்கே, வரிசை வரிசையாக பக்தர்களை குல்வந்த் தரிசன மண்டபத்திற்குள் விட்டார்கள். நான், ஞானன், நடுவிலே நவநீதன போனோம். பெண்கள் பகுதியில் கௌரி போய்க் கொண்டிருப்பாள். பிரசாந்தி விடுதியில், எங்கள் அறையில் ஒன்றாக இருக்கும் சம்பியா தேசத்து ஜெனிற்றாவும் அவளுடன் போய்க் கொண்டிருப்பாள். அவர்களுக்கும் இடம் கிடைக்கவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன்.

எங்களுக்கு உட்காருவதற்கு இடம் கிடைத்தது. ஆனால், தரிசனத்தின் போது பகவான் உலாவும் நடைபாதைக்கு மிகவும் தூரமாகவே இருந்தோம். குல்வந்த் ஹோல் காணக் கண்கள் ஆயிரம் வேண்டும் என்று சொல்வதற்கு ஏற்ப அழகு அலங்காரப் பரிமாணம் உள்ளது. இனி, தரிசனம் தரப்போகும் சுவாமியின் தெய்விக தேஜஸைப் பார்ப்பதற்குக் கண்கள் எத்தனை வேண்டுமோ! அந்த ஹோலில் ஐம்பதினாயிரம் பேர் நெருங்கி இருந்தார்கள். ஆகா! ஒரு லட்சம் கண்கள். அதில் நான், ஞானன், கௌரி, ஜெனிற்றா.

குல்வந்த் ஹோலிலே இருந்தவர்கள் உலகின் மனித வர்க்கத்தின் அன்பு, அடக்கம், பக்தி சேர் மாதிரியாகக் காணப்பட்டார்கள். எதிர்காலத்திற்கு வேண்டிய ஒரு கற்பனை உலகோ! சிலர் அணிந்திருந்த சாயி சின்னம் கொண்ட கழுத்துப் பட்டைகளில், அவர்கள் நாடுகளின் தேசியக்கொடிகளின் நிறமோ சின்னமோ காணப்பட்டது. எங்களுக்கு முன்னால் கனடா, கானா, அவுஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா, தென்ஆபிரிக்கா.. சிலர் சத்திய சாயி பாபாவின் அறிவுரைகள் எழுதப்பட்ட நூல்களைத் தமது மொழிகளில் படித்துக்கொண்டிருந்தனர். சிலர் தமது மடிகளிலே கொப்பிகளை வைத்து 'ஓம் ஸ்ரீ சாயிராம்' என்ற நாமத்தை எழுதியவாறு நாம ஜெபம் செய்து கொண்டிருந்தனர். இன்னும் சிலர் மெல்லப்பேசிக் கொண்டிருந்தனர். பலர்சும்மா இருக்க முயன்றனர். ஆனால், உள்ளார்ந்த ஆவலும் எதிர்பார்ப்பும் அவர்கள் முகங்களில் ஆரவாரப்பட்டன. சிலர் தியானத்தில் இருந்தனர். நவநீதன் தியானத்தில் இருந்தான். அவன் அன்றும் கறுப்புக்கண்ணாடி அணியவில்லை. இமைகள் கட்குழிகளை மூடியிருந்தன. முகத்திலே சாந்தி. காயத்திரி மந்திரம் ஜெபிக்கிறானோ? யாரோ பேசுவதைக்கேட்கிறானோ? ஓ! அமைதியின் குரலோ?

நவநீதன் சொல்வதுண்டு: 'நண்பா நாம் பஜனையில் பாடும் போது கடவுள் எங்களுடன் பேசுகிறார்.'

அவன் தனது வீட்டின் சுவாமி அறையில் அரைமணி நேரமாவது தியானத்தில் இருப்பான். காலையும் மாலையும் பாடசாலை ஓய்வு நாட்களில் பலமணி நேரம் இருப்பான். அவன், தான் படித்தவற்றை மேலும் விளக்குவான்: 'இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞான குரனின் ஏகபோக ஆதிக்க காலமாக இருந்தது. தொடர்ந்தும் விஞ்ஞானம் பன்முக வளர்ச்சி அடையும். அதுதேவை அல்லவா? ஆனால் விஞ்ஞானம் கட்டுக்கடங்காமல் செயற்பட்டு மனிதகுலத்தை அழிப்பதைத் தடுப்பதானால், ஆத்மிகத்தின் பராமரிப்பு அதற்கு அவசியமாகும். முதலில் தனிமனிதன் ஆத்மிக் பக்குவம் அடையவேண்டும். அதற்குத் தியானப் பயிற்சி முதற்படி ஆகும்.'

நவநீதன் எங்கள் மத்தியில் தியானம் பயில்வதிலும் பயிற்றுவதிலும் முதன்மையானவனாகக் கருதப்பட்டான். பாடசாலை ஆசிரியர்களுக்கான 'ஸ்ரீ சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி' பட்டறைகளில் அவனே ஒருமணிநேர வகுப்பு எடுப்பான். ஒரு பாடசாலையில் முதல் நாள் பட்டறை முடியும்போது, தேவாரத்தின் பின், ஒரு பெண் கிறிஸ்தவப் பாடல் ஒன்று பாடினாள்:

'ஒரு நிமிடம் என் அருகினில் இருக்க
வருவாயோ என் இறைவா – அந்த
சிறு பொழுதே ஒரு யுகமாய் மாற
வருவாயோ என் தலைவா'

அதைப் பாடியவள் சிந்தியா. அன்றுதான் அவனுக்கு அவள் அறிமுகமானாள். அந்தப் பாடலை ஒரு துண்டில் எழுதித் தருமாறு வேண்டினான். அவளும் கருமணிகளாக எழுதினாள். துண்டை வாங்கித் தனது நெஞ்சுப் பொக்கற்றில் வைத்தான். அன்று இரவு அவனுடைய அம்மா அதைப் பாடுவா. அவன் நெஞ்சில் அந்தப்பாடல் நிலையூன்றும்.

அந்தப் பாடலையும், சிந்தியாவையும், அவளை அவனுக்கு அறிமுகம் செய்த ஆண்டவனையும் இப்போது இந்த மண்டபத்தில் நினைத்துக் கொண்டிருக்கிறானோ?

"விழிகளை மூடி உனை நினைக்
கையிலே
விந்தைகள் நிகழ்வதும் ஏன் இறைவா?
.....ஒரு நிமிடம் உன் அருகினில்..."

ஒரு நாள். நவநீதனும் சிந்தியாவும் தனியாக இருந்தனர். அவன் கூறினான்:-

"சிந்தியா கிறிஸ்தவ கீதங்கள் மிகவும் இலகுவாக இருக்கின்றன. அதிகம் படிக்காதவர் உள்ளத்தையும் தொடுகின்றன. எங்கள் தேவாரங்கள் செறிவுள்ளவைதான். ஆனால்..."



அவன் இப்படியாகப் பேசிக் கொண்டிருக்கும் போதே, சிந்தியா அன்று பாடினாள்:-

'மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்....'

தொடர்ந்தும் பாடினாள்:-

"வான்முகில் வழாது பெய்க..."

அன்றுதான் நவநீதன் தனது எதிர்காலத்தின் முழுமையை நிச்சயித்தான்.

குல்வந்த் தரிசன மண்டபதிற்கு வெளியே நகர சங்கீர்த்தனம் பாடியவாறு பெண்பக்தர்கள் போய்க் கொண்டிருந்தனர். அவர்களைத் தொடர்ந்து ஆண்கள் கோஷ்டி நகர சங்கீர்த்தனம் முடியும் நேரம். சர்வ மதப் பிரார்த்தனையில்தான் என்ன ஒற்றுமை! என்ன அழுத்தம்! என்ன ஆத்மிக எழுப்பம்!

'யுக யுக கே அவதாரா ஸாயி ராமா
ஸாயி க்ருஷ்ணா – ஸாயி பாபா
. . . . . . . . . . . . . . . .
அல்லா யேசு நானக் ஸாயி
புத்த ஜொராஷ்ட்ர மஹா வீர ஸாயி..'

பஜனைப் பாடல்களில், சிறந்தது சர்வமதப் பாடல் என்பான் நவநீதன். 'திருவிவிலியம் படித்த காரணத்தினால்தான் நவநீதன் சிந்தியாவால் மிகவும் கவரப்பட்டான். அவனுக்கு கிறிஸ்தவ கருத்துக்கள் மிகவும் பிடிக்கும்' என்று ஞானன் ஒருமுறை கூறிய போது, கௌரி சொன்னாள்:-

"இல்லை ஞானன் அண்ணா, நவநீதன் அண்ணாவுக்கு எல்லா மதங்களிலிருந்தும் தெய்வ வாக்கியங்கள் பிடிக்கும். நவநீதன் அண்ணா சிந்தியா அக்காவுடன் சேர்ந்தது போல், ஒரு புத்தசமய சுஜாத்தாவுடனோ, இஸ்லாமிய ஹசீனாவுடனோ அன்புடன் வாழக்கூடியவர்."

ஸ்ரீ சத்திய சாயியின் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் பால் வெள்ளை முயல்கள் போல் மண்டபத்திற்குள் தாவி வந்தார்கள். அவர்கள் பகவான் நடந்து போகும்போது, அவருடைய நிழல்பட இருப்பார்கள். அந்த முன்னுரிமை அவர்களின் முற்பிறவியின் பாக்கியம். அவர்கள் வந்தது, பகவான் தரிசனத்திற்கு வரும் வேளை கிட்டி விட்டது என்பதற்கு அறிகுறி. இன்னும் ஒரு பத்து நிமிடங்கள்... ஒன்பது, எட்டு, ஏழு....

தூரத்திலே பகவானின் இருப்பிட வாசலிலே, அவரின் திருவுருவ ஒளியும், அந்த வசீகரமான குங்குமப் பூ நிற அங்கி நிறமும் உதய சூரியனின் கதிர்நுனிகள் போல் கண்களுக்குத் தென்பட்டதும், அதற்குக் காத்துக் கொண்டிருக்கும் ஒருவர் ரேப் ரெக்கோடரைத் தொடக்கி விடுவாராம். ஒரு நொடியில், நேர்த்தியான வாத்திய இசையானது, தோட்டத்து மலர்கள் மேல் தென்றல் என பக்தர்களைக் குளிர வைக்கும். தாயின் அரவம் கேட்ட பட்டினிக் குஞ்சுகள் போல் ஒவ்வொருவரும் நிமிர்ந்து, ஒடுங்கி, கழுத்தை நீட்டி, அமைதி ஆவலாக, ஆவல் அமைதியாக, மற்றவர் பார்க்கும் திசையை நோக்கிப் பார்ப்பர். பகவானைக் கண்கள் சிறிது கண்டதும், தரிசனம்!

சுந்தர நடை அலங்கார சாயி வந்து கொண்டிருக்கும்.. தரிசனம்!

சின்னஞ் சிறிய சிங்காரப் பாதம் நளின நடைபயிலும்... தரிசனம்!

அடிமேல் அடிவைத்து பகவான் நடைபாதையில் வந்து கொண்டிருக்கும்... தரிசனம்! தரிசனம்! கண் கொள்ளாத் தரிசனம்!

இன்று...

இன்னும் அந்த வரவேற்பை அறிவிக்கும் கீதம் இசைக்கவில்லை. பகவான் எப்போது வருவாரோ? ஆனால், தியான நிலையில் இருந்த நவநீதன், முகத்தில் பன்னீர் தெளிக்கப்பட்டது போல் திடீரெனச் சிலிர்த்து, களித்து 'சுவாமீ' என்றவாறு கைகூப்பிப் பரமானந்தம் அனுபவித்தான்... தரிசனம்!

ஒரு நொடியில்...

அந்த வாத்திய கீதம் கட்டியங் கூறியது.

அப்போதுதான்...

மண்டபத்தில் உள்ள பக்தர்கள் பகவானின் தரிசனத்திற்குத் தயாராகினர், தங்களை மறந்தனர்.

'நவநீதா! கீதத்தை இசைப்பவரே காண்பதற்கு முன், பகவான் தோன்றியதை, நீ எப்படியடா கண்டுகொண்டாய்?' என்மனம் என்னைத்தான் கேட்டது. ஆயிரம் ஆயிரம் கண்கள் காண்பதற்கு முன், நவநீதனுக்கு எப்படி தரிசனம் கிடைத்தது?

* * *

நாங்கள், ஆண்கள் மூவர், தரிசனமும் பஜனையும் முடிந்த பின் எங்கள் அறைக்குத் திரும்பினோம். நாங்கள் இருந்த அறையின் நாமம்: NORTH 4. D12. அதாவது பிரசாந்தி நிலையத்தில் வடக்கில் இருக்கும், நான்காம் விடுதியில் மூன்றாம் மாடியில், 12 ஆம் அறை. அறையில் ஐந்து பேர். எங்களுடன் தங்குவதற்கு சம்பியா தேசத்து ஜெனிற்றாவுக்கும், பிரசாந்தி நிர்வாகம் ஒழுங்கு செய்திருந்தது.

ஜெனிற்றா கிருஷ்ண நிறப் பேரழகி; கிறிஸ்தவ மதத்தினர்; சம்பியா பல்கலைக்கழகத்தில் பௌதிகவிஞ்ஞான கடைசிவருடமாணவி; அங்குள்ள சாயி நிலையத்தின் மாதர் குழுத்தலைவி. சில நிமிட அறிமுகத்தில் வாழ்நாள் சிநேகம் தரும் காந்தம் படைக்கப்பட்டவள்.

எங்கள் அறையின் முன் கதவுக்கு மூன்று திறப்புக்கள் தந்தார்கள். கௌரிக்கும் ஜெனிற்றாவுக்கும் ஒன்று; மற்றது எனக்கும் ஞானனுக்கும்; மூன்றாவது நவநீதனுக்கு. அவன்தான் விரும்பும் நேரம், தனியாகக் கீழே இறங்கி, செருப்பு அணியாத பாதங்களால் பிரசாந்தியின் மண்ணை மகிழ ஆசைப்பட்டான்.

சிறிது நேரத்தில், கௌரியும் ஜெனிற்றாவும் பாடசாலைப் பரிசளிப்பு விழாவிலிருந்து சிறிய பரிசுகளைக் கொண்டுவரும் பிள்ளைகள் போல் கலகல என வந்தார்கள். அவர்கள் அதிர்ஷ்டவசமாக பகவானை மிகவும் அண்மையில் பார்த்ததாகக் கூறினார்கள்.

"நாங்களும்தான் பகவானைப் பார்த்தோம்" என்றான் ஞானன். நாம் இருந்த தூரத்தை மட்டும் கூறவில்லை.

"நன்றாகப் பார்த்தோம்" என்றேன் நான்.

"ஓமோம்" என்று குதூகலித்தான் நவநீதன்.

அப்போது, தரிசன மண்டபத்தில் என் மனத்தில் பிரவேசித்த அந்தக் கேள்வியை நவநீதனிடம் கேட்டேன். ஜெனிற்றாவும் விளங்கும்படியாக ஆங்கிலத்தில் விடயத்தைக் கூறிவிட்டு, ஆங்கிலத்திலேயே தொடர்ந்து பேசினோம்.

"நவநீதா, மற்றவர்கள் பார்ப்பதற்கு முன்னம் நீ எப்படி பகவானைக் கண்டாய்?"

"ஓ! நீங்கள்காண்பதற்கு முன்பா? எனது உடலும் உயிரும் சுவாமியைக் கண்டதே!" ம்ம்! எங்கள் கண்கள் காண்பதற்கு முன்.. அந்த ஆத்ம தரிசனம்!

மிகவும் அமைதியாக, நாங்கள் பேசுவதைக் கேட்டு ஜெனிற்றா ஓர் ஆத்மீக விஞ்ஞான விடயம் கூறினாள். ஞானிகள், யோகிகள், ஏன், சாதாரண நல்ல மனிதரிடமிருந்து கூட, கண்காணாத அலை அதிர்வுகளாக வெளிவரும் அன்பு, அருள் பற்றியும்; அவற்றைப் படம் பிடிக்கக்கூடிய கிரிலியன் ஃபோட்டோகிராபி பற்றியும்; யோகிகளின் அன்பு அலைகளைப் படம் பிடித்த விஞ்ஞானி பிரௌனொவ்ஸ்கி பற்றியும் மிக விளக்கமாகக் கூறினாள். பகவான் பாபாவை, கிரிலியன் கமராவால் பிரௌனொவ்ஸ்கி படம் பிடித்த போது பகவானின் அன்பு அலைகள் 'பிங்க்' நிறத்தில் அடிவானத்தைத் தொடும் அளவிற்குப் பரந்து காணப்பட்டதாகக் கூறினாள்.

கண் காணமுடியாத அன்புக் கடல் அலைகள்!

"ஆமாம், அவை பிங்க் நிறம்" என்றான் நவநீதன்.

'இளஞ்சிவப்பை இவன் எங்கே கண்டான்?'

"நவநீதா தரிசன மண்டபத்தில் இருந்த பல்லாயிரம் பேர்களில், அன்புள்ளம் கொண்ட ஓரிரு யோகிகள், சுவாமிகள் இருந்திருப்பர் அல்லவா? சிஸ்ரர் ஜெனிற்றா கூறுவதைப் பார்த்தால், அவர்களின் அன்பு அலைகள் கூட உன்மேல் மோதியிருக்கலாம்தானே. அந்த அலைகள் பகவானுடையது என்று எப்படி உணர்ந்தாய்?" என்று கேட்டான் ஞானன்.

சிறிது நேரம் மௌனம் சிரித்தது.

இனி, அதற்கு நவநீதன் கூறிய வார்த்தைகள்:

"ஞானா,ஒளிகளிலே,ஒலிகளிலே, அலைகளிலே,அணைப்புகளிலே வித்தியாசங்கள் இல்லையா? பகவானின் அன்புக்கு நிகர் இல்லை.

## நந்தி

அவன் முகத்திலிருந்து ஒரு காந்தம் வீசுவது போல் என் கண்கள் கூசின. அவன் சொன்னான்:

"தரிசனத்தின் போது என்னை ஆட்கொண்ட அன்புக் கதிர்களை, நான் எனது சாமி அறையிலே தியானத்தின் போது பலமுறை அனுபவித்திருக்கிறேன். அதன் நிறமும், மணமும், உணர்வும் எனக்குப் பழக்கம்."

நவநீதன் விம்மினான். விம்மி விம்மி பரவச நிலையில் கூறினான்:

"பகவான், என்னை ஒரு பொருளாகக் கருதி, என் வீட்டிற்கே வந்து பல முறை தரிசனம் தந்திருக்கிறார்!"

நவநீதா, நவநீதகிருஷ்ணா! நண்பா! உன்னுடன் வாழ்வதற்கு நாம்....

(முற்றும்)

# சொல்லே நீ சொல்வாய்!

உள்ளமெனும் ஆழியதன் அடியில்
ஒதுங்குகின்ற முத்துகளாம் உணர்வை
உதடுகளின் கரையோரம் சுமக்க
உதவுகின்ற படகான சொல்லே!
ஓரெழுத்தும் உனதுருவாம்; ஆ!
ஈரெழுத்து உனைச் சொல்லும்; அட!
கார்படுத்துப் பொழிகின்ற மழையாய்ப்
பேரெடுக்க நீதானே! வேறார்?
ஏதெழுத்தும் இல்லாத நிலையில்
எண்ணூறாய்ப் பொருளோடு இங்கு
தீதடக்கித் திறனோடு நிற்கும் - உன்
திண்வடிவே மௌனமென ஆகும்!
நெஞ்சுக்குள் பூத்தூவி நாளும்
பஞ்சனைய நினைவுகளைத் தடவிக்
கொஞ்சி விளையாடுகின்ற நீயே
கொல்ல ஒரு விடமாவாய்! ஏனோ?
அணுகுண்டு ஆயிரத்தின் வெம்மை
ஆலகாலம் அத்தனையும் கொண்டு
ஓர் உருவாய் உதட்டினிலே எழுவாய்
ஒரு நொடியில் உயிரினையே கொல்வாய்!
'காற்றினிலே கரைந்துவிட்ட உன்னைக்
கையினிலே கொள்வதில்லைப் பின்'என் (று)
ஏட்டினிலே கண்டுமேனோ இன்னும்
எறிகின்றார் எரிகுண்டாய் உன்னை!
வெல்லத்தின் சுவை கொண்டு முன்னே
வீற்றிருக்கும் உன்னவரை விடுத்துக்
கொல்லன் கையுளியாக நெஞ்சைக்
குதறுகின்ற சொல்லெடுப்பார்; ஏனோ?
"இனியொரு நாள் இக்கவியை மீறிக்
'கனியிருப்பக் காய்கவர்ந்தா யாகில்'
மனிதா நீ மறக்கக்கடவ தென்னை!" என
மாண்புடனே சொல்லேநீ சொல்வாய்!

- ச. ஆனந்தி -

# வெள்ளை றோஜா முள்

## பாகம் II

**11**

றொபேட்டும் வின்ஸூம் வங்கிப் பாதுகாவலரின் சீருடையில் கம்பீரமாகவே இருந்தனர். அவர்களது உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளும் பொருத்தமாகவே இருந்தன.

மேன் வடிவமைத்த கம்பனி வாகனம் ஒன்று உருமாறி இருந்தது. வங்கியின் பெயர் பொறிக்கப்படாத - பெறுமதிகளை இடம் மாற்றும் - வாகனத்தை அது தோற்கடித்து இருந்தது. அசல் எது நகல் எது எனக் கண்டுபிடிக்கவே இயலாது.

இப்போது பொலீஸாரின் கவனமோ பெரும்பாலும் "எக்ஸ்பிரஸ் எலக்ரோனிக் றிப்பெயர்ஸ் லிமிடெட்" நிறுவனத்தின் வாகனங்களின் மீதே இருந்தது. அங்கு வந்து போகும் ஆள்கள், வாகனங்கள் மீதான கண்காணிப்பும் சோதனைகளும் தீவிரப்படுத்தப்பட்டே இருந்தன.

அணி அணியாக நகருக்குள் வரும் லட்சக்கணக்கான வாகனங்களை எப்படிப் பரிசீலிப்பது என்பது பொலீஸாரின் சிக்கலான நிலைமை.

இரவு பத்து மணி இருக்கும். பன்னிரண்டு மணிக்கும் ஓயாத நகரம் அதுவல்லவோ? ஆள் நடமாட்டம் குறைவாக இருப்பதும்கூட ஆபத்துத்தான் என உணர்ந்தவன் மேன்.

கறுப்புக் கண்ணாடிகள் கொண்ட வாகனம் - சீருடைச் சாரதி றொபேட், சீருடைப் பாதுகாவலன் வின்ஸ் - அதையொத்த நிற ஆடையில் மேன் என மூவரும் வங்கியின் வாகனத் தளத்தில் நுழைகின்றனர்.

புதிய வாகனம் என்றாலும் - மேனைக் கண்டதும் காவலர்கள் வழிவிட அந்த வான் இயன்றளவு வாடிக்கையாளர் லிப்டுக்கு அருகே வந்து நின்றது. வேறும் பல வாடிக்கையாளர்களின் வாகனங்கள் தளத்தில் நின்று கொண்டிருந்தன.

லிப்டை இயக்கி வங்கித் தளத்துக்கு வந்தனர் மேனும் வின்ஸூம். வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கோ வின்ஸ் ஒரு வங்கிப் பாதுகாப்பு அதிகாரி என்பதுதான் புலப்படும்.

வாடிக்கையாளர் பலரும் தானியங்கி இயந்திரத்தில் காசு அட்டைகளைப் போட்டுப் பணம் பெறவே வந்திருந்தனர். தத்தமது பகுதிகளில் அவர்கள் அதில் ஈடுபட்டு இருந்தனர்.

மேன் முகாமையாளரிடம் வந்தான். அப்போதுதான் ஒரு லொக்கர் வாடிக்கையாளனின் அலுவல்களை முடித்து வெளியே அனுப்பிக் கொண்டிருந்தார் அவர்.

மேனைக் கண்டதும் உற்சாகமாக வரவேற்று அமர்த்தினார் அவர். கம்பனி விவகாரங்கள் நாட்டு நடப்புக்கள் என்று பேச்சை வளர்த்தான் மேன். அவனின் பேச்சுப் பாணி அவரை மிகவும் கவருவது வழக்கம்.

தனது லொக்கருக்குப் போக அனுமதி கேட்டான் மேன். முகாமையாளரின் மேசையில் இருக்கும் கம்பியூட்டரை இயக்கித் தகவல்களைப் பெறவேண்டிய முறைகளை வின்ஸுக்கு அவன் பயிற்சி கொடுத்து இருந்தான்.

பெரிய தொகையை எடுக்க வந்திருப்பதாகவும் எனவே வின்ஸ் உடன் வந்திருப்பதாகவும் தெரிவித்தான். வின்ஸையும் வழமைக்கு மாறாக உள்ளே அழைத்து இருத்தி விட்டார் முகாமையாளர்.

மு.சிவநேசன்

கீழ் தளத்தில் வாகனச் சாரதியாக றொபேட் எப்போதும் புறப்படத் தயாராக இருந்தான். வின்ஸூம் மேனும் உரையாடத் தேவையான தொலைத்தொடர்பு சாதனங்கள் இருவரிடமும் இருந்தன.

முகாமையாளர் தன்முன் இருந்த கணனியை இயக்கினார். கோப்புக்களை திறக்கும் இரகசிய இலக்கத்தைப் பிரயோகித்தார். அன்றைய திகதி நேரம் என்பவற்றுக்கு அமைவாக லொக்கர் வீட்டுகளை இயக்கத் தேவையான பன்னிரண்டு டிஜிட் இலக்கங்கள் திரையில் பளிச்சிட்டன. அவற்றைத் தனது றிமோட்டில் பதித்துக் கொண்டு கிளம்பினார் முகாமையாளர்.


அவரும் மேனும் லிப்டுக்குள் தொற்றிக்கொண்டனர். மேனின் லொக்கர் தளம் L2ஐ நோக்கி லிப்ட் புறப்பட்டது.

L2ஐ லிப்ட் அடைந்ததும் கதவு திறந்துகொண்டது. முகாமையாளர் மேனின் லொக்கர் இருந்த அறையின் கதவைத் திறந்துவிட உள்ளே நுழைந்து கொண்டான் மேன்.

தனது லொக்கரைத் திறந்து தேவையான எலக்ரோனிக் தகடுகள், ஸ்குருடிறைவர், கைத்துப்பாக்கி போன்றவற்றைப்பையில் நிரப்பினான். ஓடைக்கு வந்தான். முகாமையாளர் கதவைப் பூட்டிவிட்டு லிப்டை இயக்க முனையவும் அது இயங்க மறுத்தது.

அவரது றிமோட் எலக்ரோனிக் சமிக்ஞைகளை மேனின் கையில் இருந்த றிமோட் குழப்பியதை அவர் அவதானிக்கவில்லை. குழம்பிப் போனார் முகாமையாளர்.

அவரோ எலக்ரோனிக் துறையில் நிபுணர் அல்லவே. மேன் பிழையான இலக்கத்தைக் கொடுத்து லிப்டை இயக்க முனைந்ததால் பாதுகாப்புச் சாதனங்கள் விழிப்படைந்து விட்டதை அவர் உணரவில்லை. மாட்டுப்பட்டு முழித்தவரைச் சமாதானப்படுத்தினான் மேன்.



லிப்டை இயக்கத் தேவையான இலக்கங்களைத் தெரிந்து கொண்டால் தான் அதை இயக்க முயற்சிக்கலாம் என்றான் அவன். இதற்கிடையில் முகாமையாளர் அறைக்கு லிப்டில் இருந்து சமிக்ஞைகளுக்கான பியூஸ்களை அகற்றி இருந்தான் வின்ஸ்.

அவரோ இயன்றவரை இலக்கங்களை இவனிடம் தர விரும்பவில்லை. ஆபத்துச் சமிக்ஞைப் பொத்தானை அழுத்திக் கொண்டார். ஆனால் பதில் சமிக்ஞை கிடைக்கவில்லை. மேனோ சாதாரணமாக நின்று கொண்டிருந்தான். பிராங்லினுடன் கதைத்த சில கணங்கள் எவ்வளவு பிரயோசனமானவை என நினைத்தான்.

முகாமையாளரோதனதுதொலைத் தொடர்புக் கருவி மூலம் பிராங்லினைத் தொடர்பு கொள்ள முயன்றார். இயலவில்லை.பிராங்லினின் தொலைபேசிக்கே மேன் ஆப்புவைத்தது இவருக்கு எங்கே புரியப்போகின்றது.

வேறு விவரங்கள் தேவைப்படின் முகாமையாளர் தனது மேசைக்கே வந்தாக வேண்டும்.

இறுதியில்மேனிடம் ஆலோசனை கேட்கும் நிலைமைக்கே வந்தார் முகாமையாளர். அவரின் கையில் இருந்த றிமோட்டை வாங்கி அதில் ஏதாவது பிழை இருக்கிறதா எனப் பாசாங்கு பண்ணினான் மேன். தனது றிமோட்டை அவரிடம் மாற்றிக் கொடுத்தும் விட்டான். இனி அவரால் லிப்டை இயக்கவே இயலாது.

இலக்க விவரங்களைச் சொன்னால் தான் ஏதாவது உதவி செய்யலாம் என்றான் மேன். விரைங்களைச் சொல்லிவிட்டுநானை இலக்கங்களை மாற்றலாம் என்ற முடிவுக்கு வந்தார் அவர்.

இலக்கங்களை றிமோட்டில் இருந்து பெறமுடியாமல் இருப்பதால் தனது மேசையில் இருக்கும் கணனியை இயக்கவேண்டும் என்றார் முகாமையாளர்.

வின்ஸால் அவற்றை இயக்க முடியும் எனக் கூறித் தனது தொடர்பு சாதனத்தினால் வின்ஸுடன் பேசினான் மேன்.

கணனிக் கோவைகளைத் திறக்கும் இரகசிய இலக்கத்தை இவர்கள் அறிவிக்கக் கணனிவிழித்துக் கொள்ளும் வகையில் செயற்பட்டான் வின்ஸ். சரியாக இவர்கள் புறப்பட்ட நேரமான 22.12ற்குரிய பன்னிரண்டு டிஜிட் இலக்கங்கள் திரையில் பளிச்சிட்டன. அவற்றை மேனுக்கு வின்ஸ் வாசிக்கவும் முகாமையாளர் மீது மயக்க மருந்தை விசிறினான் மேன்.

இந்தப் பன்னிரண்டு இலக்கங்கள் லிப்டை இயக்க உதவும். இவற்றில் முதல் எட்டு இலக்கங்கள் லிப்டை L1 தளத்துக்கும், கடைசி எட்டு இலக்கங்கள் L2 தளத்துக்கும் அதனை இட்டுச் செல்லும். நடு எட்டு இலக்கங்கள் லிப்டை L1-L2 தளங்களுக்கிடையே மாற்றவும் உதவும்.

வேலை இலகுவாக எட்டிவிட்டதை உணர்ந்தான் மேன். கடும் பிரயாசையுடன் தயாரித்து வைத்த எலக்ரோனிக் தகடுகள் லிப்டை விடுவிக்க உதவின. முகாமையாளர் முரண்டுபிடித்திருந்தால் அவரை மடக்கிவிட்டு லிப்டின் ஒரிஜினல் தகடுகளுக்குப் பதிலாக தனது தகடுகளைப் பொருத்தி இயக்க நினைத்தான் அவன்.

இனிமேல் அதிகம் சுணக்கம் நல்லதல்ல என நினைத்துக்கொண்டான் மேன். முகாமையாளரின் பொக்கெட்டில் கைவைத்து கதவு திறக்கும் ஆணை அட்டையைப் பெற்றுக் கொண்டான். லிப்டை இயக்கும் தகடுகளை மாற்றி அது இயங்க மறுத்த பாதுகாப்பு அரணை உடைத்தான்.

L2 தளத்தில் நின்றிருந்த லிப்ட் அவனது ஆணைப்படி L1 தளத்துக்கு வந்து சேர்ந்தது. ஓடையில் ஓடி ஓடி அங்கிருந்த 100அறைகளின் இரும்புக் கதவுகளையும் நோட்டமிட்டான். ஒவ்வொரு அறையிலுள்ளும் 40 லொக்கர்கள்.

இவ்வளவையும் காலி பண்ண 50 பேர்; 5 நாள், 5, 10 லொறிகள் அல்லவா வேண்டும்? இவ்வளவையும் அள்ளிப்போனால் வாழ ஆயிரம் ஆண்டுகள் போதாதே.

கரோல் சொன்னபடி அந்த அறைக் கதவுக்குவந்தான். முகாமையாளரின் அட்டையைத் துவாரத்தில் செருகி இலக்கத்தைப் பிரயோகித்தான். அந்த அறைக்குரிய திறவு இலக்கத்தை வின்ஸ் கணனியில் இருந்து அறிவித்தான்.

சொல்லி வைத்தது போல கதவு திறந்து கொண்டது. கரோலின் 18ஆவது இலக்க லொக்கருக்கு வந்தான். அடேயப்பா என்ன வெற்றி. அவளது அட்டையைச் செருகி இலக்கத்தைப் பிரயோகித்தான். இலகுவாக லொக்கர் திறந்து கொண்டது.

உள்ளே அவிந்து போன றோஜா பூ ஒன்று. முட்கள் துருத்தி நின்றன. விலக்கினான். மெல்ல எடுத்துப் பத்திரப்படுத்தினான். மூன்று பாரிய பைகள் முடிச்சுக்களாக இருந்தன. ஒவ்வொன்றையும் இறக்கித் தரையில் வைத்தான். முடிச்சுக்களை அவிழ்த்து உள்ளே பார்த்தான்.

இரண்டு பையுள்ளும் மின்னிடும் வைரங்களும், தங்கமும். மிகப் பாரமான பையில் பண நோட்டுக்கள். இவை வங்கிக்கோ அரசுக்கோ கணக்குக்காட்டப்படாத கரோலின் சொத்துக்கள். அள்ளி முடித்ததும் மனது நிரம்பிற்று. இவ்வளவுமே போதும் பத்திரமாய்க் கொண்டுபோய்ச் சேர்த்தால் சரி என நினைத்தான்.

இன்னும்ஒருலொக்கரை உடைக்கலாமா? மனது தவித்தது. ஏஸியிலும் வியர்வை நிலத்தில் சிந்தியது.

எதில் நிறைய இருக்கும்? தெரியாது. எதிலும் இந்தளவுக்கு இருக்காது.

வின்ஸிடம் கணனியில் அந்த அறைக்குரிய லொக்கர் உரிமையாளர்களின் பட்டியலை கேட்டான். தெரிந்த பெரிய புள்ளிகளாகத் தேடினான்.

அறையைத் திறந்து விட்டால் லொக்கரை திறப்பது ஒன்றும் பெரிய வேலை இல்லை.

ஒரு லொக்கரை இனம் கண்டு கொண்டான். பூட்டுக்களை சரியான கோணத்தில் துப்பாக்கியால் சுட்டு வைத்துத் திறந்தும் விட்டான். ரவைகள் உள்ளே ஏறிக்கொண்டன.

துப்பாக்கி வேட்டொலி பேரிடியாக அதிர்ந்தது. காது செவிடுபட்டது. ஆனால் வெளியே இம்மியும் கேட்காது என்பது அவனுக்குத் தெரியும். திறந்த லொக்கரில் அதனோடு ஒப்பிடும் போது பெரிதாக ஏதுமில்லை. சில வைரங்களும் இருநூறைம்பது வரையான டொலர் நாணயங்களும் இருந்தன. அவற்றையும் அள்ளி அதே சாக்கில் போட்டுக் கொண்டான்.

எல்லாவற்றையும் இழுத்து வந்து லிப்டில் சேர்த்தான். L1இல் இருந்து முகாமையாளர் அறைக்கு வரும் இலக்கத்தைப்பிரயோகித்தான். லிப்ட் லாவகமாகத் திரும்பிக் கண்ணாடித் தளத்துக்கு மீண்டது. நேரமோ 22.42ஐ காட்டியது. சற்று அதிகம் தான்.

அவனும் வின்ஸூம் அவசர அவசரமாகப் பறிகளை இழுத்து வாடிக்கையாளர் லிப்டுக்கு மாற்றினர் லொக்கருக்கான லிப்ட் பூட்டப்பட்டுக் கிடக்க உள்ளே முகாமையாளர் மயக்கம் தெளிந்து முனகுகிறார்.

இனி அதனை இலேசில் திறக்க முடியாது. கட்டளைத் தகடுகளை கண்டபடி குழப்பிவிட்டான் மேன்.

வாடிக்கையாளர் லிப்ட் வாகனத் தளத்துக்கு இறங்கவும் அதனோடு ஒட்டி வானை ஓட்டினான் றொபேட்.

(தொடரும்)



## குறள்வெள்ளம்

ஒருவர் செய்த கொடுமைக்குப் பதிலடி கொடுத்துப் பரிகாரம் தேடுவது முறையாகாது. அப்படிச் செய்யாவிட்டால் அது தன்மானப் பிச்சினை என்றும் நினைக்கக் கூடாது. பொறுமை கௌரவக் குறைச்சல் ஆகாது.

பொறுத்திரு. காலம் பதில் சொல்லும். அதற்காக அடுத்தவருக்குக் கேடு வரட்டும் என்று காத்திராதே. பொறுத்தேன் என்று பீற்றியும் திரியாதே. அதனை நினைத்து வாழ்வது நிம்மதியைத் தராது.

எனவே அடுத்தவர் செய்த தீங்கினை, இறப்பினை பொறுப்பதிலும் பார்க்க மறப்பதே மேலானது நிம்மதியும் தருவது.

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று. - 0152

- அம்பிகைபாகன்.

# குடும்பத் திட்டமும்

**அப்பாவிகளைப் பலிகொள்ளும் சட்டவிரோதக் கருக்கலைப்புக் குறித்தும் அதனால் ஏற்படும் இறப்புக்கள் குறித்தும் கடந்தவார சஞ்சீவியில் விவரங்கள் வெளியாகியிருந்தன. இத்தகைய கருவழிப்பு மற்றும் இறப்புக்கள் ஏற்படாமல் தடுப்பதற்குக் கையாளக்கூடிய கருத்தடை முறைகளை இக் கட்டுரை விரிவாக விளக்குகின்றது.**

ஒரு குடும்பம் சந்தோசமாக நலமுடன் இருக்க கணவன் - மனைவிக்கிடையே நல்ல புரிந்துணர்வு இருக்கவேண்டும். அவ்வாறு நல்ல புரிந்துணர்வு இருந்தால், அக்குடும்பம் நல்லதோர் பல்கலைக்கழகமாக அமையும். இது மேலும் பலமாக அமைய அவர்கள் இருவரும் பாதுகாப்பான தாய்மை தொடர்பாக நல்ல தீர்மானமும் எடுக்கவேண்டும்.

பொதுவாக ஒரு குழந்தை பிறந்ததும் குறைந்தது இரண்டு வருடங்கள் இடைவெளிவிட்டு கருத்தரிப்பது தாய், சேய் இருவரின் ஆரோக்கியத்தையும் அதிகரிக்கும். அத்துடன் பொதுவாக, 19 வயதிற்கு முன்



பும் 35 வயதிற்கு பின்பும் கருத்தரிப்பது தாய்க்கும், சேய்க்கும் ஆபத்தை விளைவிக்கலாம். மேலும் பிறக்கும் குழந்தைகள் நிறை குறைந்த பிள்ளைகளாக இருப்பதற்கு சாத்தியம் அதிகம். அத்துடன் குழந்தைகளின் வளர்ப்பு, முதிர்ச்சி ஆகியவற்றில் பல பிரச்சினைகளையும் எதிர்நோக்கலாம்.

எனவே குழந்தையை எப்போது பெறுவது? எத்தனை பிள்ளைகள் பெறுவது? எவ்வளவு கால இடைவெளிவிட்டு பிள்ளை பெறுவது? என்பவற்றை தீர்மானிக்கும் பொறுப்பை கணவன் - மனைவி இருவரிடமே மருத்துவர்கள் விட்டுவிடுகிறார்கள்.

பிறக்கும் குழந்தைகள் திடகாத்திரமான பிள்ளைகளாக வளர இடைவெளி விட்டு பிள்ளைகள் பெறுவது அவசியம். ஏனெனில் ஏற்கனவே பெற்றதையும் சரியாக வளர்க்க முடியாது; வயிற்றில் வளர்வதற்கும் போதிய கவனம் செலுத்தவும் முடியாது; இருப்பதனால் எல்லாக் குழந்தைகளுமே உடல், உள வளர்ச்சி குன்றியவர்களாகக் காணப்படும் நிலைமை ஏற்படலாம்.

ஒரு சாதாரண பிரசவத்தின் பின் ஒருபெண் தனது முன்னைய உடல் நிலையை மீண்டும் பெறுவதற்கு குறைந்தது இரண்டு வருடங்களாவது தேவை. தாய்க்கு வேறு நோய்கள் இருந்தால் அல்லது சத்திர சிகிச்சை மூலம் பிரசவம் ஏற்பட்டிருந்தால் மேலும் கூடிய காலம் தேவைப்படலாம்.

மேலும், தாயின் உடல் ஆரோக்கியம், குடும்பத்தின் பொருளாதார நிலை என்பன காரணமாகவும் அடுத்த குழந்தை பிறப்பதை ஒத்தி வைக்க வேண்டிய தேவையும் ஏற்படலாம்.

இவ்வாறான நிலைமைகளில் உங்களுக்கு கைகொடுத்து உதவுவது கருத்தடை முறைகளே. இக் கருத்தடை சாதனங்கள் தொடர்பாக உங்கள் பகுதி மருத்துவமாது, குடும்பநல உத்தியோகத்தர், குடும்ப மருத்துவர், அருகில் உள்ள அரச ஆஸ்பத்திரி மருத்துவர் ஆகியோரை நாடி மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இவர்களின் ஆலோசனையின் பின் பொருத்தமான, உங்களுக்கு விரும்பிய கருத்தடை முறைகளை நாடலாம்.

கருத்தடை முறைகளை நாம் இரு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம். தாங்கள் தவிர்க்க விரும்பும் காலத்திற்கு மட்டும் கர்ப்பம் தரிக்கக் கூடாது. ஆயினும் சிறிது காலத்தின் பின்னர் குழந்தை வேண்டும் என எண்ணுபவர்களுக்கானது - தற்காலிக கருத்தடை முறைகள்.

ஏற்கனவே பிறந்த குழந்தைகள் போதும், இனி குழந்தைகளே வேண்டாம் எனத் திடமான முடிவு எடுத்தவர்களுக்கானது - நிரந்தரக் கருத்தடை முறை.

## தற்காலிக கருத்தடை முறைகள்

### ஆண்களுக்கானது

*கருத்தடை உறை/Condoms*

இம்முறையில் ஆண்குறியில் இருந்து வெளியேறும் விந்து பெண்ணின் கருப்பையை அடைவதை தடுப்பதன் மூலம் கருக்கட்டுவது தடை செய்யப்படுகிறது. உடலுறவு கொள்ள முதல் ஆண்குறியில் இவ்வொடுக்கமான மென்மையான ரப்பர் உறையை அணியவேண்டும். ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ வேதனையோ அல்லது அசௌகரியமோ ஏற்படுத்தாதவாறு இவ்வுறைகள் வழுவழுப்பானதாக செய்யப்பட்டுள்ளன.

'கொண்டம்' எனவழைக்கப்படும் ஆணுறைகள் மிக குறைந்த விலையில் அதாவது ஒரு கொண்டம் ஐந்து சதத்திற்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகிறது. அவற்றைப் பொது சுகாதார உத்தியோகத்தர்கள் (PHI), பொது சுகாதார மாது (PHM) ஆகியோரிடம் இருந்து இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் அரச வைத்தியசாலைகளில் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

அதேவேளை தனியார் மருந்தகங்களில் இருந்தும் பல்வேறு நிறுவனங்களில், பலவேறு வகைகளில், பல்வேறு விலைகளில் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

'கொண்டம்' பாலியல் நோய்கள் ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு பரவுவதை தடுக்கிறது. மேலும் முக்கியமாக கவனிக்க வேண்டியவை ஒரு கொண்டத்தை ஒரு தடவை மாத்திரமே பாவிக்க வேண்டும். பாவித்தபின் பாதுகாப்பாக அழித்துவிடுதல் நல்லது.

### பெண்களுக்கானது

*கருத்தடைக் குளிசைகள்*

இக்குளிசைகள் ஒரு மாத பாவனைக்குரிய அளவில் தனித்தனி மட்டைகளில் வருகின்றன. இவற்றையும் பொது சுகாதார மாது (PHM) அரச வைத்தியசாலைக் கிளினிக் அதிகாரி ஆகியோரிடமிருந்து ஐம்பது சதத்திற்கு ஒரு மட்டை என்ற வீதத்தில் பெற்றுக்கொள்ளலாம். அதேவேளை தனியார் மருந்தகங்களில் பல்வேறு பெயர்களில் பல்வேறு விலைகளில் பெற்றுக்கொள்ளலாம். அவற்றுள் சில:- EUGYNON, MICROGYNON, MITHURI, NORDETTE.

**உங்களுக்கு கருத்தடை மாத்திரையை சிபார்சு செய்ய முதல் மருத்துவர் பின்வருவனவற்றை கருத்திற் கொள்வார்**

- குருதியமுக்கம்
- இதயநோய்
- வரிக்கோஸ் வெயின்
- தலைவலி
- செங்கண்மாரி
- பெண் இனப்பெருக்கப் பகுதியில் ஏதாவது ஒழுங்கற்ற இரத்தக் கசிவு வெளியேற்றம்
- மார்பகக்கட்டிகள், வயிற்றில் ஏதாவது கட்டிகள்
- முலைக்காம்புகளில் இருந்து திரவ வெளியேற்றம்
- தற்பொழுது பாவிக்கும் மருந்து

இக் கருத்தடை மாத்திரையை மாதவிலக்கு வந்த முதலாம் நாள் முதல் தினமும் ஒரு குளிசைவீதம் அட்டையில் காட்டிய ஒழுங்கு முறைப்படி நித்திரைக்கு போகுமுன் உட்கொள்ள வேண்டும்.

கருத்தடை மாத்திரைகள் பக்க விளைவுகளை மிக அரிதாகவே ஏற்படுத்துகின்றன. மேலும், கருத்தடை மாத்திரைகளை உபயோகிக்க முன்னர் மருத்துவரிடம் சென்று உங்களை பரிசோதித்த பின்னரே இக் குளிசைகளைப் பாவிக்க ஆரம்பிக்க வேண்டும். மேலும் ஒருசில மாதங்களுக்கு ஒரு தடவை மருத்துவரை சந்தித்து பரிசோதனை செய்தபின்னர் கருத்தடை மாத்திரைகளை தொடர்ந்து பாவிக்கலாம்.

சில வேளைகளில் கருத்தடை மாத்திரைகள் உள்ளெடுக்க மறந்துவிடலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் என்ன செய்வது? இச் சந்தர்ப்பத்தில் ஞாபகம் வந்தவுடன் அடுத்த நாளாக இருந்தாலும் (48 மணித்தியாலத்தினுள்) தவறவிட்ட குளிசையை உடனடியாக உள்ளெடுக்க வேண்டும். அத்துடன் ஏனைய குளிசைகளை வழமைபோல் அட்டையில் உள்ள ஒழுங்கில் உள்ளெடுக்க வேண்டும்.

குளிசை தவறவிட்டது 48மணித்தியாலத்தின் பின்தான் ஞாபகத்திற்கு வருமாயின், குளிசை உள்

# பாதுகாப்பான தாய்மையும்

ளெடுப்பதை நிறுத்த வேண்டும். மேலும் உடலுறவு கொள்ளும்போது ஆணுறைகளை பாவிக்கலாம் அல்லது அடுத்த மாதவிலக்கு வரும் வரை உடலுறவு கொள்வதை நிறுத்தலாம். அத்துடன் அடுத்த மாதவிலக்கு ஆரம்பித்தபின் புதிய கருத்தடை மாத்திரை அட்டையை அதில் காட்டிய ஒழுங்குப்படி பாவிக்க ஆரம்பிக்க வேண்டும்.

*ஊசிமருந்துகள்*

ஊசிமருந்துகள் பொதுவாக 3 மாதத்திற்கு ஒருமுறை ஏற்றப்படுகின்றன. இது பாலூட்டும் தாய்மாருக்கு நன்மை அளிக்கக்கூடியது. மேலும் ஒழுங்காக குளிசையை விழுங்கமுடியாதவர்களும் இதைப் பாவிக்கலாம்.

ஊசிமருந்துகளை அரசாங்க வைத்தியசாலைகளில் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். இதற்காக 'Depo - provera" என்ற ஊசி மருந்தே பரவலாக பாவிக்கப்படுகிறது.

ஊசிபோடுவதை நிறுத்திய உடனே கருத்தரிக்கும் என எதிர்பார்க்கமுடியாது. கருத்தரிக்கும் கால அளவு ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான முறையில் வேறுபடலாம்.

முதன்முதலில் இம்மருந்து ஏற்ற முதல் மருத்துவரினால் பரிசோதனை செய்யப்பட்டபின் மாதவிலக்கு வந்த 5 நாட்களினுள் ஊசிமூலம் ஏற்றப்பட வேண்டும். குழந்தை பிறந்த தாயாயின் 6 வாரத்தின் பின்பு இம் மருந்து ஏற்றப்படலாம். அதன்பின் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை உங்களுக்கு வசதியான நாட்களில், உங்களுக்கு தேவைப்படும் காலப் பகுதிக்கு ஏற்றிக்கொள்ளலாம். மேலும் ஊசி போடப்பட்ட இடத்தில் ஒத்தடம் கொடுப்பதோ அல்லது மசாஜ் செய்வதோ கூடாது.

*உட்கருப்பைசாதனம்*

இது கருப்பையினுள் பொருத்தப்படுவது. இதை 'லூப்' என்றும் "கொப்பர் T" என்றும் பொதுவாக அழைக்கின்றனர்.

பொதுவாக குழந்தை பிறந்த 6 ஆம் வாரத்தில் அல்லது உங்களுக்கு வசதியான நாள்களில் மருத்துவரால் பெண்ணின் கருப்பையினுள் இது பொருத்தப்படுகிறது.

இது உடலுறவு கொள்ளும் போது இடைஞ்சலாக இருக்கக் கூடும் என்றும், ஆபத்தானது என்றும் பலர் பயப்படுகிறார்கள். அதில் எதுவித உண்மையுமில்லை. இச்சாதனத்தைப் பொருத்திக் கொண்டால் உடலுறவின் போது எதுவித பிரச்சினையும் ஏற்படாது. மேலும் குழந்தை பிறக்குமா என்ற கவலை இல்லாமல் பல வருடங்களுக்கு நிம்மதியாக இருக்கலாம். இதுமிகவும் பாதுகாப்பானதும், எளிமையானதுமாகும்.

இச்சாதனத்தை குடும்பதிட்ட கிளினிக்குகளிலும், வைத்தியசாலைகளிலும் பொருத்திக்கொள்ளலாம். இதைப் பொருத்திய 2 முதல் 3 நாள்களில் சிறிதளவு இரத்தக்கசிவு ஏற்படலாம். மேலும் இச் சாதனத்தை பொருத்தியபின் வருகின்ற முதலாவது இரண்டாவது மாதவிலக்குகள் ஓரளவு குருதிக் கசிவு வழமையைவிட அதிகமாக வரலாம். இவ்வாறான பிரச்சினை மிககுறைந்த வீதமான பெண்களுக்கே ஏற்படுகிறது.

உட்கருப்பைச் சாதனத்தை பொருத்தியபின் முதலாவது பரிசோதனைக்காக ஒரு மாதத்தின் பின்பும் இரண்டாவது பரிசோதனைக்காக ஆறு மாதங்களின் பின்பும் மருத்துவரிடம் செல்லவேண்டும். மேலும் இச் சாதனங்களை பெரும்பாலும் 6 வருடத்திற்கு ஒருதடவை மாற்றிக்கொள்வது நல்லது. அத்துடன் மருத்துவர் கூறுகின்ற மேலதிக அறிவுரைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

ஏனைய கருத்தடைமுறைகளில், கருத்தடை கவசம், கருத்தடை மூடி, கருத்தடை நுரை என்பன பாவிக்கப்படுகின்றன. அத்துடன் விந்துகளை அழிக்கும் குளிசைகளும் பாவிக்கப்படுகின்றன. இவை எதிர்பார்க்கும் பலனை அளிக்கும் சாத்தியம் குறைவு.

விந்துக்களை அழிக்கும் குளிசைகளை உடலுறவிற்கு 10 முதல் 30 நிமிடங்களுக்கு முன் நீரில் நனைத்துவிட்டு சரியான முறையில் பெண்ணின் யோனியினுள் வைக்க வேண்டும். இம்முறைகள் பொதுவாக நடைமுறை சிக்கல்களை ஏற்படுத்துவதால் இங்கு இம்முறையைப் பயன்படுத்துவோர் குறைவு.

தற்காலிக கருத்தடை முறைகளை தெரிவுசெய்யும்போது ஒரே வகையான கருத்தடை முறையைத்தான் தொடர்ந்து கடைப்பிடிக்க தெரிவுசெய்யவேண்டும் என்பது அவசியமில்லை. கணவன் - மனைவி இருவரின் வசதிக்கேற்ப கருத்தடை முறைகளை மருத்துவரின் ஆலோசனையின் பின் மாற்றிக்கொள்ளலாம். இவ்வாறு விரும்பியபடி மாற்றிக்கொள்வது அவர்கள் இருவரினதும் உரிமையாகும். உதாரணமாக கருத்தடை குளிசைகளை பாவிப்பவர்கள் அதை நிறுத்தி ஊசிமருந்திற்கோ அல்லது உட்கருப்பை சாதனத்திற்கோ விரும்பியபடி மாறிக் கொள்ளலாம்.

## நிரந்தர கருத்தடைமுறை

உங்களுக்கு போதிய குழந்தைகள் இருந்து இனிக் குழந்தைகளே வேண்டாம் என திடமாக நீங்கள் முடிவுசெய்தால் நிரந்தர கருத்தடை முறையை நாடலாம். இது பெண்ணுக்கோ அல்லது ஆணுக்கோ ஒரு சிறிய, சில நிமிடங்கள் நீடிக்கின்ற சத்திரசிகிச்சை மூலம் இதை செய்து கொள்ளலாம். இதற்கு கணவன் - மனைவி இருவரினதும் சம்மதம் தேவை.

இம்முறையில் ஆண்களுக்கு வாசெக்டமி (Vasectomy) என்னும் சத்திரசிகிச்சை மூலம் விந்து உற்பத்தியாகி வெளியேறும் மெல்லிய குழாய்கள் துண்டித்துக் கட்டப்படுகின்றன.

விந்து வெளியேறுவது தடை செய்யப்பட்டாலும், இந்திரியம் (Seminal Fluid) வழமைபோல் வெளியேறும். மேலும் சத்திர சிகிச்சை செய்து கொண்டவரின் ஆண்மையிலோ உடலுறவு உணர்விலோ எந்தவித பாதிப்பும் ஏற்படாது. அத்துடன் அவர் செய்கின்ற வழமையான வேலைகளையும் தொடர்ந்து செய்துகொள்ளலாம்.

பெண்களுக்கு tubectomy அல்லது LRT என்று அழைக்கப்படுகின்ற சத்திரசிகிச்சைமூலம் பலோப்பியன் குழாய்களை வெட்டி கட்டி விடுகின்றனர். இதன்வழியாகத்தான மாதம் ஒருமுறை முதிர்ந்த கருமுட்டை சூலகத்தில் இருந்து வெளியேறி கருப்பையை அடைகிறது.

இச்சத்திரசிகிச்சை பொதுவாக சுகப்பிரசவத்தின் பின் சில நாட்களில் செய்யப்படுகிறது. ஆயினும் இச்சத்திரசிகிச்சையை எப்பொழுதும் அரசாங்க வைத்தியசாலையில் இலவசமாக செய்து கொள்ளலாம். இச்சத்திரசிகிச்சை செய்துகொண்டவர்களின் உடலுறவு உணர்வில் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாது. அத்துடன் மாதவிலக்கு வழமை போல் மாதாமாதம் வரும்.

## அவசர கருத்தடைமுறைகள்

இம்முறைகள் அவசர அவசியமான நிலைமைகளில் உதவுகின்றன. பொதுவாக நாட்டின் பாதுகாப்பற்ற நிலையில் பாலியல் வல்லுறவு சம்பவங்கள் பரவலாக நடைபெறுகின்றன. அத்துடன் கருத்தடை முறை தோல்வி அதாவது கருத்தடை உறை வெடித்தல், இயற்கையான முறைகளை கையாளும்போது அவற்றில் தோல்வி (அதாவது பாதுகாப்பான நாள்களில் உடலுறவை வைத்துக்கொள்வதில் தவறு ஏற்படல்), விந்து வெளியேறுமுன் ஆண்குறியை எடுத்தல் ஆகியவற்றில் தோல்வி அடைதல் போன்ற சந்தர்ப்பங்களில் அவசரமான கருத்தடை முறைகள் பலருக்கு அவசியமாகின்றன.

இவ்வாறான எதிர்பாராத முறையில் பாலியல் வல்லுறவு அல்லது உடலுறவுகொள்ள நேர்ந்தால் உடனடியாக உங்கள் அருகில் உள்ள மருத்துவரை சந்தியுங்கள். அவர் 'Postinor' என்ற அவசர கருத்தடை குளிசைகள் இரண்டை உங்களுக்குத் தருவார். அதில் ஒன்றை உடனடியாக உட்கொள்ள வேண்டும். மற்றைய குளிசையை 12 மணித்தியாலத்தின் பின் உட்கொள்ளவேண்டும்.

இவ்வாறு மருத்துவரைச் சந்திக்கும் வாய்ப்பு உடனடியாக கிடைக்காவிடின், நீங்கள் பாவிக்கும் கருத்தடை மாத்திரை EUGYNON வகையைச் சார்ந்ததாயின், அவ்வட்டையில் உள்ள இரண்டு குளிசைகளை உடனடியாக உட்கொள்ளவும். அல்லது நீங்கள் பாவிக்கும் கருத்தடை மாத்திரை MICROGYNON வகையை சார்ந்ததாயின் அவ்வட்டையில் உள்ள நான்கு குளிசைகளை உடனடியாக உட்கொள்ளவும். அல்லது நீங்கள் பாவிக்கும் கருத்தடை மாத்திரை MITHURI வகையை சார்ந்ததாயின் அவ்வட்டையில் உள்ள மஞ்சள்நிற குளிசைகள் நான்கை உடனடியாக உட்கொள்ளவும்.

அடுத்த 12 மணித்தியாலத்தின் பின் முன்புபாவித்த எண்ணிக்கைக்கு சமனான குளிசைகளை மீண்டும் உள்ளெடுக்கவும். அத்துடன் தேவையேற்படின் மேலதிக ஆலோசனைக்காக அருகில் உள்ள மருத்துவரைச் சந்தியுங்கள்.

S. சபேசன்
S. உமாசுதன்

இவ்வாறு செறிவுகூடிய குளிசைகளைப் பாவிக்கும்போது பக்கவிளைவுகள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம். பொதுவாக வாந்தி, தலையிடி, தலைச்சுற்று, மார்பக இறுக்கம், கருப்பை இரத்த கசிவு என்பன ஏற்படவாய்ப்புண்டு.

மேலே கூறிய அவசர கருத்தடை முறையின் போது விந்துடன் கருக் கட்டிய சூல்/முட்டை கருப்பையில் பதிக்கப்படுவது தடுக்கப்படுகிறது.

மேலும் இவ்வகையான அவசர கருத்தடை குளிசைகளை அடிக்கடி பாவிப்பது கூடாது. ஏனெனில் இது உடலின் சமநிலையை குழப்புவதால் பாரிய பின் விளைவுகள் ஏற்படுத்தலாம்.

அவசர கருத்தடை முறையை கருச்சிதைவு (Abortion) எனக் கூற முடியாது. கருக்கட்டிய முட்டை கருப்பையில் பதிக்கப்பட்ட பின், 28 வாரங்களுக்குள் அழித்தலையே கருச்சிதைவு என்கிறோம். ஆனால் அவசர கருத்தடை முறையில் கருப்பையில் கருக்கட்டிய முட்டை பதிக்கப்பட முன்பே வெளியேற்றப்படுகிறது. எனவே இதை கருச்சிதைவு என கொள்ளமுடியாது.

ஒழுங்கான கருத்தடை முறைகளைக் கடைப்பிடிப்போமாயின் தேவையற்ற சட்டவிரோதக் கருச்சிதைவு முறைகளை நாடி, கிருமித்தொற்று ஏற்பட்டு, வைத்தியசாலைகளுக்கு வரவேண்டிய அல்லது இறப்பு நிலைக்கு செல்லவேண்டிய அவசியம் ஏற்படாது.

சட்டவிரோதக் கருச்சிதைவு இலங்கை சட்டக்கோவையில் (பிரிவு 303 - 307) தண்டனைக்குரிய குற்றமாக கணிக்கப்படுகிறது. என்பது நாம் அறிந்ததே.

# 'மஸாஜ்' கிளினிக் இங்கும் உண்டா?

**குருநகர். றெனி.**
எனது பேனா நண்பி என்னை விரும்புவதாகக் கூறுகின்றாளே! என்ன செய்யலாம்?
☺**உம்மை விரும்புகின்றாளா? உமது பேனாவை விரும்புகின்றாளா?**

❀ ❀ ❀

**நல்லூர். ஜனா.**
பதினாறில் வளையாதது. முத்திரெண்டில் வளையுமா?
☺**நாற்பத்தெட்டில் வளையத் தொடங்கலாம்!**

❀ ❀ ❀


**தென்மராட்சி. செல்லா.**
(அரசாங்க) அலுவலகத்தில் கூட மீசை முறுக்கி, பெண்களுக்குக் கைநீட்டும் ரௌடிகள் இருக்கின்றார்களா?
☺**கைமட்டுமா நீட்டுகின்றார்கள்...?**

❀ ❀ ❀

**குப்பிளான். சிவானந்த்.**
பெண்களின் மனசு ஆழம் என்கின்றார்களே! உண்மையா?
☺**மனசு மட்டுமா?**

❀ ❀ ❀

**மீசாலை. பி.எ.**
எதிர் எதிராக விளையாடும் இருவரில் எவரும் வெல்லாமல், எவரும் தோற்காமல் முடிவடையக் கூடிய விளையாட்டு எது?



☺**அங்க விளையாட்டுத்தான்! [நான் சதுர + அங்க (சதுரங்க) விளையாட்டைச் சொன்னேன். அதுதான் அடிக்கடி வெற்றி தோல்வியின்றி டிராவில் முடிவடைகிறதே!]**

❀ ❀ ❀

**வியாபாரிமூலை. குமரி.**
ஒரு பெண்ணைக் காதலித்துவிட்டு, விட்டு வேறு பெண்ணைத் திருமணம் செய்யும் ஆண்கள் குறித்து...!
☺**அந்த 'விட்டு விட்டு' என்ற வார்த்தை பல அர்த்தங்களைத் தருகின்றதே. நீர் எந்த அர்த்தத்தில் கூறுகின்றீர்?**

❀ ❀ ❀

**அளவெட்டி. வசீகரன்.**
'பெண்' குறித்து உமது 'பென்' மூலம் நீர் தரும் கடியைத் தாங்க முடியாதிருக்கின்றதே?



☺**அதைவிடும். இப்பக் கொஞ்சக் காலமாக என் தலையில் இருக்கும் 'பேன்',தரும் கடியை என்னால் தாங்க முடியாதிருக்கின்றதே!**

❀ ❀ ❀

**கோப்பாய். சுதா.**
இங்கும் 'மஸாஜ்' கிளினிக்குகள் உண்டா?
☺**அலுவலக, பாடசாலை நேரங்களில் இங்குள்ள மினி பஸ்களில் பயணம் செய்து பாரும். குறைந்த கட்டணத்தில் குளுகுளு (மன்னிக்கவும் கடுகடு) மஸாஜ் அனுபவம் கிடைக்கும்!.**

❀ ❀ ❀

**குருநகர். லோறன்ஸ்.**
அலைகள் ஓய்ந்து விட்டனவா?
☺**பதுங்குவது பாய்வதற்கு என்பது முதுமொழி.**

❀ ❀ ❀

# வித்துவானை 'பொறுக்கி' என்று அழைக்கலாமா?

**கரவெட்டி. சுபா.**
பெண்கள் சுடிதார் அணிவதால் என்ன நஷ்டம்?
☺**பார்க்கும் ஆண்களை 'சுடுதாரில்' நிற்பவர்கள் போல சுடாக்குகின்றதே!**

❀ ❀ ❀

**கரவெட்டி. மாலா.**
ரியூஷனுக்குப் போகும் பெண்களுக்குப் பின்னால் திரிந்து நக்கல் விடும் 'நாய்கள்' குறித்து...?



☺**பின்னால் திரிவதும், வாலை ஆட்டி நக்குவதும் நாய்களின் வேலைதானே! அந்த நாய்களைத் தடவிக் கொடுத்து இடமளிக்காமல் செருப்பினால் கொடுத்து விரட்டியடியும்!**

❀ ❀ ❀

**குருநகர். கண்ணன்.**
மொனிக்கா லூவின்ஸ்கி நல்லவள் என்று சிலர் அடித்துக் கூறுகின்றார்களே?
☺**'அடித்துக்' கூறுவதாயின் அது கிளின்ரனாகத்தான் இருக்கும்!.**

❀ ❀ ❀

**கச்சாய். கமலம்.**
தனியார் டியூட்டறி கூட சுயம்வர மண்டபமாகி விட்டதே?
☺**அங்கு மணமாலையை எதிர்நோக்கி காத்திருக்கும் மன்னர்கள் வரிசையிலே டியூட்டறி ஆசிரியர்களும் இருப்பதுதான் ஆக மனவருத்தம்!**

❀ ❀ ❀

**கட்டுடை. சந்துரு.**
மனைவிக்கு மட்டும் அடங்கும் கணவர்கள் குறித்து...!
☺**கையால் ஆகாதவர்கள்!**

❀ ❀ ❀

**சுழிபுரம். விவேக்.**
கணவன்-மனைவி பொருத்தம் எப்படி இருக்க வேண்டும்?
☺**ஜாடிக்கு ஏற்ற மூடியாக இருக்க வேண்டும்.**

❀ ❀ ❀

**அராலி. வேணு.**
பெண்கள் பெரும்பாலும் ஆத்திரத்தை பாத்திரத்தில் காட்டுவது ஏன்...?
☺**தமது கோத்திரத்தைப் பேண வேண்டி இருப்பதால்!**

❀ ❀ ❀

**எழுதுமட்டுவாழ். குகன்.**
காதல் ஒரு கலையா?
☺**அறுபத்தினான்கு கலைகளில் அது ஒன்றா என்பது தெரியவில்லை. ஆனால் அதுவும் சேர்ந்துதான் பலகலைக்கழகம் என்கின்றார்கள்!.**

❀ ❀ ❀

**யாழ். அலோசியாஸ்.**
'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்றால் கணவன் அமைவதெல்லாம்...?
☺**இப்போதெல்லாம் பெரும்பாலும் சீதனம் கொடுத்த வரம்!**

❀ ❀ ❀

**கல்வயல். சுமித்திரா.**
உங்களது 'இவ்வார ஜோக்'குகளைப் படித்து விட்டு எனது நண்பி உங்களை 'பொறுக்கி!' என்று திட்டுகின்றாளே?
☺**அவர் திட்டுவது நூற்றுக்கு நூறு சரி. அவ்வப்போது சஞ்சிகைகளில் வாசிப்பதிலிருந்து 'பொறுக்கித்'தானே அந்த ஜோக்குகளை எடுக்கின்றேன்!**

❀ ❀ ❀

# எதற்கு வேகம் வேண்டும்? எதற்கு விவேகம் வேண்டும்?

**மானிப்பாய். வாசவன்.**
எனக்குத் திருமண எழுத்து முடிந்து விட்டது. திருமணம் வரை சைவமாக - விரதம் - காக்கத்தான் வேண்டுமா?
☺**ஆக்கப் பொறுத்தவர், ஆறப் பொறுக்கக் கூடாதா?**

❀ ❀ ❀

**கந்தரோடை. ராஜன்.**
'அன்னநடை, மின்னல் இடை' என்று ஒரு பெண்ணை வர்ணிக்கலாமா?
☺**'பல்லை உடை' என்று அவள் பதிலுக்குப் புறப்பட்டால் என்னவாகும்?**

❀ ❀ ❀

**சுன்னாகம். மதி.**
வித்துவானே! உங்கள் 'இவ்வார ஜோக்' ரொப் (Top) ஆக இருக்கின்றதே!
☺**சில சமயம் Topless ஆக இருப்பதாகவும் சிலர் திட்டுகின்றார்களே!**

❀ ❀ ❀

**வரணி. இளங்கவி.**
கன்னியரைக் கவர்வது எப்படி?
☺**சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை!**

❀ ❀ ❀

**அரியாலை. ஜீவிதா.**
'நீ தென்றல்; நான் மரம்' என்கின்றாரே என் காதலர்...?
☺**திருமணத்தின் பின்னால் 'நீ சூறைக் காற்று; நான் சுழன்றடிக்கும் காற்றுக்கு தலையாட்டும் மரம்' என்று கூற வேண்டியிருக்கும் என்பதை இப்போதே புரிந்து கொண்டு விட்டவர்.**

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். சீலன்.**
அனேகமான டாக்டர்கள், டாக்டர்களையே மணம் புரிகின்றார்களே! ஏன்?



☺**கற்றாரைக் கற்றாரே காமுறுவர்!**

❀ ❀ ❀


**மல்லாகம். மனோ.**
வித்தா! நீங்கள் உளவாளியா?
☺**இல்லை உள்ளங்களின் களவாளி.**

❀ ❀ ❀

**மல்லாகம். ஜெகதீஸ்.**
எதற்கு வேகம் வேண்டும்? எதற்கு விவேகம் வேண்டும்?
☺**காதலுக்கு விவேகம் வேண்டும். காமத்துக்கு வேகம் வேண்டும்.**

❀ ❀ ❀

**சங்கரத்தை. கமலன்.**
குடும்பத்தைக் கோயிலுடன் ஒப்பிடலாமா?



☺**தாராளமாக! மனைவி மூன்று வேளை அர்ச்சனை செய்யக் கணவன் அட்டாங்க நமஸ்காரம் செய்கின்றானே!**

❀ ❀ ❀

**வரணி. ராகு.**
அயல் வீட்டு மங்கையின் உள்ளங்கவர் கள்வனாக விரும்புகிறேன். அதற்கு முதலில் என்ன செய்யவேண்டும்?
☺**உளவில்லாமல் களவு இல்லை. உள்ளங் கவர முதலில் உளவு பாரும்!**

❀ ❀ ❀

**கோண்டாவில். சுயன்.**
வித்துக்குச் சத்துக் குறைபாடாமே...?
☺**'செத்தாலும் குறையாது திமிர்' என்றல்லவா அவ்வப்போது திட்டுகின்றாள் வித்துவாட்டி!**

❀ ❀ ❀

**எழுதுமட்டுவாள். சுபாஸ்.**
காதலுக்குக் கண்இல்லை என்கின்றார்கள். ஏனைய புலனுறுப்புகளாவது இருக்கின்றனவா?
☺**பெரும்பாலும் காதலுக்கு மூளையே இருப்பதில்லை. இந்தச் சீத்துவத்தில் எந்த உறுப்பு இருந்தும் என்ன பயன்?**

❀ ❀ ❀

**தட்டாதெரு. விஜயன்.**
சம்சாரத்தின் ஆழத்தை அறிய முடியவில்லை என்கின்றானே என் நண்பன்...!
☺**'சம்சார சாகரம்' (சமுத்திரம்) என்பது இதனால்தானோ?**

❀ ❀ ❀

**நல்லூர். தருமு.**
மெலிந்த தோற்றமுடைய எனக்கு ஆனைக்குட்டி சைஸில்' பெண் பார்க்கின்றாரே என் அப்பா...!
☺**'ஐயா கதிர் போல, அம்மாள் குதிர் போல' என்ற பழமொழியை மெய்ப்பிக்க முயல்கின்றாரோ உம் தந்தை?**

❀ ❀ ❀

**கொக்குவில். கரன்.**
ரசிப்பதற்கும், ருசிப்பதற்கும் வேறுபாடு உண்டா?
☺**வீதியில் போகும் பெண்ணை பார்த்து ரசித்தால் அது சைட் அடிப்பது என்பதோடு போய் விடும். ருசிக்க முற்பட்டால்....?**

❀ ❀ ❀

**ஏழாலை. வையாபுரி.**
கட்டாக்காலிகளைத் திருத்துவதற்கு என்ன வழி வித்தா?
☺**(கால்) கட்டுப் போடுவதுதான்!**

❀ ❀ ❀

**நவாலி. விஜய்.**
கோபம் வரும்போது சில பெண்கள் எப்படிக் குறி தவறாமல் எறிகின்றார்கள்?
☺**குறி குறித்துத் தெரிந்தவர்கள் என்பதால்!**


❀ ❀ ❀

# வித்துவான் பதில்கள்

**அச்சுவேலி. குமரன்.**
உள்ளதை உள்ளபடி கூறி வாங்கிக் கட்டுகின்றீரே! தேவையா இந்த வம்பு?
☺**யதார்த்தவாதி வெகுஜனவிரோதி என்பது உண்மைதானே!**

❀ ❀ ❀

**கட்டுவன். ஜூடி.**
சில ஜம்பதுகள் முருங்கைக்காயை விரும்பிச் சாப்பிடுகின்றனவே?



☺**'வயக்கரா' இல்லா ஊருக்கு முருங்கைக்காய் சர்க்கரை! (மாத்திரை)**

❀ ❀ ❀

**துறையூர். டி மெல்.**
நாட்டிலும் வீட்டிலும் பிரச்சினைக்குக் காரணம் யார்?
☺**தலைவி(தி)தான்!**

❀ ❀ ❀

**ஏழாலை. செல்வி.**
வித்தூ! உம்மை அலுவலகத்துக்கு வந்தாலும் சந்திக்க முடிவதில்லையே! நீர் அவ்வளவு பிஸியா?
☺**'நாய்க்கு வேலையுமில்லை; நடக்க நேரமும் இல்லை' எண்டமாதிரி ஒரே பிஸி (வித்துவாட்டிக்குப் பணிவிடை செய்வதால்!)**

❀ ❀ ❀

## இவ்வார ஜோக்

ஜோன்:- ஏன் உன் முகம் வீங்கியிருக்கின்றது?

ஜோர்ஜ்:- இருமினேன். பக்கத்து வீட்டுக்காரன் அடித்து விட்டான்.

ஜோன்:- இருமியதற்காகப் பக்கத்து வீட்டுக்காரன் அடித்தானா?

ஜோர்ஜ்- ஆம். அவன் வீட்டுப் படுக்கைஅறைக்கட்டிலுக்குக்கீழ் ஒளிந்திருந்தபோது அல்லவா இருமல் வந்தது?

# தமிழ் மகாகவி கம்பனின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொண்டு சூழலையும் உலகையும் நோக்குபவர்கள் இன்னொரு வகையினர். முதல்வகையினரின் பார்வை பொதுவாக தாம் சார்ந்திருக்கும் சூழல்சார் அமைப்பைக் கட்டிக்காக்கும் நோக்கிற் செயற்படும். இவ் வகையினருள் ஒருசாரார் நேரடியாகவே தாம் சார்ந்திருக்கும் அரச அதிகார மையத்தின் பிரசாரக் கருவியாகச் செயற்படுபவர். இவர்களுக்கு கலை, இலக்கியம் என்பன ஊடகம் அல்லது உத்தி முறை மட்டுமே. முதல் வகையினருள் இன்னொரு சாரார் தாம் சார்ந்திருக்கும் சூழல்சார் கட்டமைப்பின் வரையறைக்குள் தத்தம் பண்பாட்டு விழுமியங்களை பேணிக்கொள்ளும் மன உந்துதலுக்குட்பட்டு படைப்பாக்கத் துறைகளில் ஈடுபடுபவர். இவர்களது படைப்புக்களின் சம்பவங்கள் மற்றும் பாத்திரங்களின் உணர்வுகள், உணர்ச்சி முனைப்புக்கள் என்பனவற்றின் மீது மேற்சுட்டிய சூழல்சார் கட்டமைப்பின் வரையறைகளை மீறமுடியாத வகையிலான கட்டுப்பாட்டை இவர்களது பார்வை விதித்து விடும்.

மேற்சுட்டிய இரண்டாவது வகையினரான பொதுமானிடத் தனத்தினரின் பார்வைகள் பொதுவாகச் சமுதாயத் சூழலை விமர்சிப்பனவாக அமைவன. இவ்விமர்சனப் பார்வைகள் அவர்கள் காணவிளையும் மனிதப்பண்பு நிறைந்த ஓர் இலட்சிய வாழ்வியலை மையப்படுத்தியனவாக அமைவது இயல்பு. இதனால் இவர்கள் படைக்கும் ஆக்கங்களின் நிகழ்வுகள் மற்றும் கதாபாத்திரங்களின் உணர்வுநிலைகள், மனப் போராட்டங்கள் என்பன அவற்றுக்குரிய இயல்பான நிலையில் அமையவும், வெளிப்படவும் வாய்ப்புண்டு. குறிப்பாகக் கதைமாந்தர் சுயாதீனமாகத் தத்தம் இயல்பான தோற்றத்தை வாசகர்களுக்குக் காட்டுவர். இதனால் படைப்பாளியின் தலையீடின்றி, வாசகன் பாத்திரங்களின் உணர்வுகளோடு ஒன்றத்தக்க நிலை ஏற்படும்.

மேற்குறித்த இருவகைப் பார்வைகளின் அடிப்படையில் கம்பன் முதலிய கவிஞர்களை வகைப்படுத்தினால் திருத்தக்கதேவர், சேக்கிழார் முதலிய பலர் முதல்வகையினர் என்ற கணிப்புக்கு உரியவர்களாகின்றனர். சோழப்பெருமன்னர் காலத்தில் கவிச்சக்கரவர்த்திகள் எனப் போற்றப்பட்ட சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர் ஆகியோர் அன்றைய அரச அதிகார மையத்தின் பிரசாரகர்களாக வெளிப்படையாகவே செயற்பட்டவர்கள் என்பதை இலக்கிய உலகம் அறியும். திருத்தக்கதேவர், சேக்கிழார் ஆகியோரை அப்படிக் கூற முடியாது. அன்றைய சூழல்சார் கட்டமைப்பில் நின்றுகொண்டு தத்தம் பண்பாடு விழுமியங்களைப் பேணவும் பதிவு செய்யவும் முயன்றவர்கள் இவர்கள். அவ்வகைச் செயற்பாட்டினூடாகத் திருத்தக்கதேவர் அன்றைய பேரரசு - எழுச்சியின் ஒரு குறியீடு எனத்தக்க வகையில் சீவகனின் கதையைக் காவியமாக்கினார். அதில் தமது சமயதத்துவத்தை உள்ளீடாக்கினார். சமூகம் பற்றிய குறிப்பிடத்தக்க பார்வை எதுவும் இல்லாமையால் அவரது பாத்திரங்கள் சராசரி தரத்தின் மேல் எழுச்சி பெறமுடியவில்லை.

'சோழப் பேரரசின் முதலமைச்சராகத் திகழ்ந்தவர் என்ற வகையில் சேக்கிழார் தாம் சார்ந்த நிறுவனத்தைக் கட்டிக்காக்கவும் வளர்க்கவும் கடமைப்பட்ட ஒருவர். இவர் அக்காலப்பகுதியில் அரச மதமாக (State Religion) எழுச்சிபெற்றுக் கொண்டிருந்த சைவத்தையும் அதன் 'கோயிற் பண்பாட்'டையும் கட்டிக் காக்கும் வகையில் மேற்கொண்ட இலக்கியச் செயற்பாடே நாயன்மார் வரலாறான பெரிய புராணமாக உருப்பெற்றது. அவ்வகையில் இவ்வாக்கம் அவரது அரச நிறுவன சார்பான - அவர் உணர்த்த விழைந்த - 'சிவபக்தி' என்ற உணர்வு நிலையை மையப்படுத்தியே கதைமாந்தரின் பண்புகள் கட்டியமைக்கப்பட வேண்டியது தவிர்க்க முடியாததாயிற்று. கதைமாந்தரின் இயல்பான உணர்ச்சி நிலைகள், மற்றும் மனப் போராட்டங்கள் என்பவற்றைப் புலப்படுத்த முற்பட்டால் சேக்கிழாரின் நோக்கம் சிதைந்துவிடும். எனவே எல்லாப் பாத்திரங்களும் சேக்கிழார் பேசவைக்கவிழைந்தவற்றையே பேசுகின்றன. அவர் உணர்த்த விழைந்த மெய்ப்பாடுகளையே உணர்த்துகின்றன. சாதிக்கொடுமைக்கெதிராகக் கொதிருக்கவேண்டிய நந்தன் சேக்கிழாரின் விருப்பப்படி தன் 'இழிபிறப்பு'க்காகக் கவலைப்பட்டுத் தன்னைப் 'புனிதப்படுத்திக் கொள்ள' எரிமூழ்குபவனாகிறான். மணமேடையிலே மணவாளக் கோலத்திலிருந்தவன் அடிமையோலையின்படி 'தடுத்தாட் கொள்ள'ப்பட்டபோது மனைவியாக இருந்தவளின் மனம் எத்தகைய துன்பத்தில் துவண்டிருக்கும்? சேக்கிழாரின் 'பார்வை'யில் இதற்கெல்லாம் முக்கியத்துவமில்லை.

இளங்கோ, சாத்தனார், கம்பர் ஆகியோர் மேற்படி இரண்டாவது - பொதுமானிடத் - தளப் பார்வையாளர்களாக சமுதாய விமர்சனம் செய்ய முற்பட்டவர்கள்.

தமிழ் நாட்டில் நிலவுடைமை உருவாகி, முடியாட்சியாக அது முகிழ்க்கத் தொடங்கிய சூழலில், அதில் அதிகார நிலையில் ஊழல்கள் முளை விடத் தொடங்கிய காலகட்டத்தில் வாழ்ந்தவர்கள் இளங்கோவும் சாத்தனாரும். சமுதாய நிலையில் ஆணாதிக்கம் பெண்மையைப் போகப்பொருளாக்கி அவமதிக்கும் போக்கு மேலோங்கியிருந்த சூழலாகவும் அக்காலகட்டம் அமைந்திருந்தது. இவ்விரு நிலைகளுக்கும் எதிரான விமர்சனங்களாக, உருவானவைதான் சிலம்பும் மேகலையும். எனவே இவற்றில் உயிரோட்டமுள்ள கதைமாந்தரை அவர்களின் பலம், பலவீனம் என்பவற்றோடு தரிசிக்க முடிந்தது. ஆனால் இவற்றின் ஊடாக வாழ்க்கை பற்றிய முழுத் தரிசனத்தையோ அல்லது திட்டவட்டமான உலகியலறத்தையோ தரமுடியாதவகையில் தொண்மத்திலும் சமயத்திலும் இளங்கோவும் சாத்தனாரும் புகலடைகின்றனர். பாண்டியன் முன் வழக்குரைத்துச் சிலம்புடைத்துக் கணவனுக்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைத்த கண்ணகி தெய்வமாகின்றாள். விலைமகளிர் குலத்திற்கு விதிக்கப்பட்டிருந்த இழிமைகளை உடைத்தெறிந்து மேற்கிளம்பிய மாதவியும் மணிமேகலையும் சமய உணர்வில் சங்கமித்து விடுகின்றனர். இளங்கோவும் சாத்தனாரும் தொடக்கிவைத்த பொது மானிடத் தளப்பார்வையை அவர்களால் முழுமைப்படுத்த முடியாது போயிற்று. அதனை நிறைவு செய்யும் தகுதியுடன்தான் கம்பன் இலக்கிய அரங்கிற்கு வருகிறான்.

சோழப் பெருமன்னர் காலக் கவிஞனாக அறியப்படும் கம்பன் சமயநிலையில் வைணவன். சமூக நிலையில் உவச்சர் எனப்படும். 'கோயில்களில் மேளம் வாசித்து' இசைத் தொண்டு புரியும் சாதியினன். இவற்றுக்கு மேல் அவனைப் பற்றிய புனைவுத்தன்மை வாய்ந்த செவிவழிக் கதைகளை நாம் கருதத்திற் கொள்ள வேண்டியதில்லை. அவனை அவனது மகாகாவியத்தினூடாகவே கண்டறியலாம். அக்காவியம் காட்டும் நிலையில் கம்பன் ஒரு சமநோக்கினன். பொருளியலில் ஏற்றத்தாழ்வற்ற - கொள்வாரும் கொடுப்பாரும் அற்ற - நிறைவான உலகத்தை - கோசலநாட்டை - அவன் கனவுகாண்கிறான். பிறப்பு அடிப்படையைக் கடந்து சகோதர பாசமும் தோழமையும் நாடும் பண்பாளரை அவன் நேசிக்கிறான். ஆதிக்க உணர்வுகளும் அவற்றால் விளையும் கொடுமைகளும் அவை எந்த வடிவில் தோற்றமளித்தாலும் அவற்றை வேரோடு களைந்தெறிய வேண்டும் என்பதில் பற்றுதி கொண்டவனாக அவன் உள்ளான். இயல்பான காதலில் உருவாகும் குடும்ப உறவையும், 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற உயர்பண்பையும் அவன் வித்ந்து போற்றுகிறான். வாழ்க்கையில் பின்பற்றத்தக்க அறவழிகள் எவை என்பது தொடர்பாகக் கருத்து நிலைச் சிக்கல்கள் ஏற்படும் வேளைகளில் தர்க்கரீதியில் விவதாங்கள் நிகழ்த்தி அவைபற்றிய தெளிவை ஏற்படுத்தமுற்படுகிறான். இவ்வாறான பண்புகள், செயற்பாடுகள் என்பன மூலம் கம்பன் ஒரு விரிந்த சமுகப் பார்வையாளனாக - ஒருதிறந்த புத்தகமாக - எம்முன் காட்சிதருகிறான். வைணவம் என்ற சமய நிறுவனச் சார்பு அவனிடம் காணப்படுகின்றதெனினும் அதன் வரையறைகளையும் மீறிய மனித நேயமே அவனது சொற்களில் ஒலிக்கின்றது. தனிமனிதன், குடும்பம், சமூகம், நாடு, உலகம் என்ற அனைத்து வகைத் தளங்களிலும் மானிடம் தழுவிய ஓர் இலட்சிய வாழ்வியலை அவன் முன்வைக்க முனைவது தெரிகிறது. இந்த வகையில் அவன் ஒரு தலைசிறந்த மனித நேயவாதியாகத் திகழ்கின்றான்.

கம்பன் தனது மகாகாவியத்தினூடாக நமக்குத் தரும் இக்காட்சியானது - அவன் புலப்படுத்தி நிற்கும் இப்'பார்வை' பரப்பானது - பாரதிக்கு முற்பட்ட தமிழிலக்கியப் பரப்பில் (அறநூலாசிரியனாகிய வள்ளுவனைத் தவிர) அனைத்துக் கவிஞர்களையும் விஞ்சியது என்பது வெளிப்படை. இவ்வாறு ஒப்பீட்டு நிலையில் கம்பனை உயர்த்தி நிற்கும் மேற்படி பார்வைத்திறன் அவனிடத்தில் அமைந்தது எப்படி? அவன் மட்டும்தான் இப்பார்வைக்குச் சொந்தக்காரரா? இவ்வாறான வினாக்கள் இங்கு முக்கியமானவை.

கம்பனுக்குத் தரப்படும் மேற்படி கணிப்பில் பெரும்பாகம் இராமாயண ஆதிகாவிய ஆசிரியனான வால்மீகிக்குச் சென்று சேரவேண்டியது என்பதை இங்கு நாம் மனங்கொள்ள வேண்டும். வால்மீகி அமைத்த காவிய மாளிகையின் அடிப்படையமைப்பை மாற்றாமல், அதன் பார்வைத்தளம், உள்ளமைப்பு மற்றும் அதன் பயன்பாட்டுநிலை என்பவற்றில் மாத்திரம் சிற்சில குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்ததோடு, காட்சிக்கினிய வண்ணமும் தீட்டியவன் என்ற அளவில்தான் கம்பன் மேற்படி கணிப்புக்கு உரியவனாகின்றான் என்பது நமது கவனத்திற்குரியது.

(மிகுதி அடுத்த வாரம்)

## வானத்தைப்..........

(VI ஆம் பக்கத் தொடர்ச்சி) இருக்கிறார். அது நியமோ? அல்லது 'அக்டேர'? என் மனம் அங்கலாய்ப்பில் தவிக்க முன் வாசலால் ஏறி பின் வாசலால் பின்வாசலை நோக்கி நகர்ந்தேன்.

"என்ன தம்பி..... யாரையாவது தேடுகிறீரோ?"

யாரோ முன்பின் அறிமுகமில்லாத ஒருவர் கேட்டார். "இல்லை... அம்மாவை இப்பதான் ஆஸ்பத்திரியால துண்டு வெட்டிக் கூட்டிக் கொண்டுவாறன். நிக்கிறது கஷ்டமா இருக்கும். அதுதான் இருக்கிறதுக்கு 'ஸீட்' இருக்கோ எண்டு பாத்தனான்"

ஒருவாறு கூறி முடித்தேன். "இதென்ன தம்பி... எத்தனை நிண்டு போகக்கூடியதுகள் இருக்குதுகள்.... இனிமேல் 'வெரிக்கிடப்' போற பஸ்ஸுகளில் கனம் ஸ்கைச்சக்கமா வரும் அதால இந்த பஸ்தான் 'கொளரிப்' படும் கூட்டிவா. இந்தா ஆச்சை இடத்தில இருத்து"

அந்த வயது முதிர்த பெரியவர் எழுந்தார். அம்மாவை கூட்டிவந்து ஏற்றி அமர்த்தி விட்டு அருகிலேயே நின்றேன்.

"சேர்...... இதில இருங்கோ சேர்"

அம்மாவிற்கு இடம் தந்த அந்தப் பெரியவரை நோக்கி ஒருவர் கேட்டார்.

"இல்லை தம்பி... நீர் இரும்"

"இல்லை சேர் இருங்கோ"

எழுந்தார். எழுந்தவர் அந்தப் பெரியவரை உட்காரவைத்தார். என் மனதில் பூக்கள் ஏற ஆரம்பித்தன. பஸ் புறப்பட ஆரம்பித்தது.

"அண்ணை...... ரெண்டு பேர் வருகினம்"

பஸ் தாமதித்தது. இருவரும் ஏறிக்கொண்டனர். இருவரும் வயிற்றில் ஜீவன்களோடு..........

"அக்கா இதிலை இருங்கோ"

இருவர் எழுந்து கொண்டனர்.

"இந்த நிலையில் பஸ்ஸில வாறது கரைச்சல்தான். ஓட்டோ இல்லாட்டி காரைப் பிடிக்கிறதுக்கு வசதியுமெல்லோ வேணும்........"

ஏறிய இருவரின் உரையாடல் பகுதி என மனதிற்கு உறைத்தபோது குறுகிப் போனேன். அறாவது அறிவு அப்போதுதான் என்னோடு ஒட்டியது போன்ற உணர்வுடன் திரும்பினேன். மனம் கல்லாய்க் கனத்தது! ஜன்னல் வழியே வெளியே பார்த்தேன். தூரத்தே கருமுகில் கனை காற்று ஒதுக்கித்தள்ள வானம் பிரகாசமாய்..... தெளிவாய் என் மனமும் அந்த வானத்தைப் போல...... (யாவும் கற்பனை அல்ல)

## 'சிறுவர்சுடர்' விடைகள்

XVI ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள 'சிறுவர் சுடர்' பகுதிக்கான விடைகள் வருமாறு:-

### புத்தாயிரமாம் ஆண்டுப்புதிர்

| | | | | |
|---|---|---|---|---|
| 398 | 411 | 394 | 407 | 390 |
| 391 | 399 | 412 | 395 | 403 |
| 404 | 392 | 400 | 408 | 396 |
| 397 | 405 | 388 | 401 | 409 |
| 410 | 393 | 406 | 389 | 402 |

பொருத்தமற்றதைக் கண்டுபிடியுங்கள்

C

எண் எது?

2

10X 3/15 = 2

பொருத்தமானது எது?

C

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.140

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | |
| 6 | | ■ | 7 | | 8 | | ■ |
| 9 | | 10 | | ■ | 11 | | |
| 12 | | | ■ | 13 | | | ■ |
| | ■ | 14 | 15 | | | ■ | 16 |
| ■ | 17 | | | | ■ | 18 | |
| 19 | | | ■ | 20 | 21 | | |
| 22 | | ■ | 23 | | | | |

சொற்சிலம்பம் இல. 140

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................................

விலாசம்: ..............................................................

..............................................................

..............................இங்கே வெட்டுக..............................

முடிவுத் திகதி:- 11 - 02 - 2000

### இடமிருந்து வலம்

1. ஐயப்பன் உறையும் இடம். 5. நெருப்பில்லாமல் வராது. 6.நெருப்பின் பின் எஞ்சுவது. 7. ஒரு பட்டம். 9. ஓர் இதழுக்கு அவசியமானவன். 11.சகை. 12. சிறிய கற்களை இப்படி அழைப்பர். 13. பாத்திரம். 14.இரத்தல். 17. இந்திய விமானப் பயணிகளை கடத்தல்காரர்கள் வைத்திருந்தது இப்படி. 18. விழி. 19. ரூபாவில் நூறு. 20. புத்துவம் செய். 22. நெருக்க. 23. வேற்றுவர்.

### மேலிருந்து கீழ்

1. உற்ற வாழ்வு. 2. சிறிய மிதவை. 3. புத்திரன். 4. உலகப் புகழ் பெற்ற காதலி. 5. செப்தி. 8. சாவுதானம். 10. திருமணம். 13. காஞ்சிபுர ஈசன். 15. கழித்தல் குறி. 16. கடக்கும். 17. அரிசி இல்லாத நெல். 18.பழுக்க. 19. சபை/கூட்டம். 21. புலவல்ல.

### சொற்சிலம்பம் 138 இன் விடைகள்

#### இடமிருந்து வலம்

1. சகோதரி. 4. பதவி. 7. கடுகு. 8. கரண்டி. 9. திரவம். 11. யோசி. 13. சரி. 14. நெல். 15. கரிசனை. 17. பகு. 18. புலம்பு. 20. கட்புலன். 22.மண்டுகம். 23. மேதி.

#### மேலிருந்து கீழ்

1. சகடயோகம். 2. கோடு. 3. தகுதி. 4. பரம். 5. தூண். 6. விடிதல். 8.கவரி. 10. ரசனை. 12. சிரி. 14. நெடும். 16. சகடு. 17. பகலன். 18.புலம். 19. புலுதி. 20. கண். 21. புக.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

| | |
|---|---|
| முதலாம் பரிசு:- | கு.விமலன்,<br>152, நெடுங்குளம் வீதி,<br>அரியாலை. |
| இரண்டாம் பரிசு:- | செல்வி.ம.ஜெசிதா,<br>வரியவத்தை, புலோலி கிழக்கு,<br>பருத்தித்துறை. |
| மூன்றாம் பரிசு:- | மா.கணேசதாசன்,<br>36/24, பிரம்படி லேன்,<br>கொக்குவில் கிழக்கு. |

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 139 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.





## தவறுகளைத் திருத்துங்கள்!

- ஆடு நடந்து வந்தான்.
- பக்தர்கள் கூட்டம் வருவார்.
- நான் புத்தகத்தை வாசித்தனர்.
- தபால்காரர் சென்றது.
- அரவிந்தன் அங்கு எடுத்தேன்.
- மாணவர்கள் மைதானத்தில் அதிகமாகியது.
- அவர்கள் பத்திரிகையை கூடினர்.

மேலுள்ள ஏழு வாக்கியங்களும் தவறான முறையில் நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாக்கியத்தையும் சரியான முறையில் நிறைவு செய்வதற்கு தேவையான வார்த்தைகள், மற்றைய வாக்கியங்களை நிறைவு செய்யப் பயன்பட்டுள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து சரியான முறையில் பொருத்தி வாக்கியங்களை அமையுங்கள் பார்க்கலாம்!

## எண் எது?




முதலிரு வட்டங்களினுள்ளும் எண்கள் அமைந்திருக்கும் ஒழுங்கையும் அவற்றுக்கிடையிலுள்ள தொடர்பையும் அறிவதன் மூலம் மூன்றாவது வட்டத்தினுள் வினாக் குறியிட்ட இடத்தில் வரவேண்டிய எண் எது என்று கண்டுபிடியுங்கள்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

## பூசணித் திருடன்


தோட்டத்தில் விளைந்த பூசணி கண்டான்
தோலில் படர்ந்த சாம்பலும் கண்டான்
நாட்டத்தில் திருடனும் தோளிற் சுமந்தான்
நாளங்காடியில் விற்றுக் கொண்டான்

தோட்டக்காரனும் தோட்டம் வந்தான்
நோட்டம் விட்டுக் களவைக் கண்டான்
திருடனைப் பிடிக்க எண்ணங் கொண்டான்
திரும்பி மணியை அடித்துச் சென்றான்

திடீரென மக்களைக் கூடச் செய்தான்
'திருடனைத் தோளிலே தெரியும்' என்றான்
தோளைத் துடைத்த திருடனைக்
கண்டான்
தோட்டக்காரன் பிடித்துக் கொண்டான்

-சி.சிவா-
வட்டுக்கோட்டை

## பொருத்தமற்றதை கண்டுபிடியுங்கள்!




இரண்டு தொகுதியாகச் சில உருவங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றில் ஒவ்வொன்றிலும் ஓர் உருவம் தொகுதிக்குப் பொருத்தமற்றது. அது எது என்று கண்டுபிடியுங்கள்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

## இரவல்

முல்லாவின் மனைவி துவைத்த துணிகளைக் காயப்போடுவதற்காக ஒரு கொடி கட்டித்தருமாறு முல்லாவிடம் கேட்டாள்.

முல்லா ஓர் உறுதியான கயிறை எடுத்து வந்து கொடியைக் கட்டினார். முல்லாவின் மனைவி துணிகளைக் காயப்போட்டாள்.

மறுநாள் அக்கொடியை கண்ட அடுத்த வீட்டுக்காரர் முல்லாவை அழைத்து 'முல்லா அவர்களே! உங்கள் கொடிக் கயிறை இரவலாகக் கொடுங்கள். என்னுடைய வீட்டுத்தோட்டத்தில் கட்டித் துணியைக் காய வைத்த பின் கொடுக்கிறேன்' என்று சொன்னார்.



கொடிக்கயிறை இரவல் கொடுக்க முல்லாவிற்கு விரும்பமில்லை. அதனால் தட்டிக்கழிக்கத் தீர்மானித்தார்.

முல்லா அடுத்த வீட்டுக்காரரை நோக்கி 'ஐயா, இந்தக்கயிறில் கோதுமை காயப்போடப்போகிறேன். அதனால் உங்களுக்கு இரவல் தரமுடியாது' என்று கூறினார்.

அவர் பதிலைக்கேட்ட அடுத்த வீட்டுக்காரருக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது.

'முல்லா அவர்களே! கோதுமை மணிகளை கயிற்றில் எவ்வாறு காயவைக்க முடியும்?' என்று அவர் கேட்டார்.

முல்லா சிரித்துக்கொண்டே 'ஒரு பொருளைப் பிறருக்கு இரவல் கொடுக்க விருப்பமில்லை என்றால் அவரால் அந்தப் பொருளைக் கொண்டு என்ன அற்புதம் வேண்டுமானாலும் செய்யமுடியும். கொடியில் கோதுமை என்ன, கழுதைகளைக்கூடக் காய வைக்கமுடியும்' என்றார்.

## உங்களுக்குத் தெரியுமா?

**மனித இதயம் சிலருக்கு மார்பின் வலது பக்கத்தில் அமைந்திருக்கும் என்பது உண்மையா?**

உண்மைதான். மிகவும் அபூர்வமாக ஆயிரத்தில் ஒருவருக்கு இதயம் மார்பின் வலது பக்கத்தில் அமைந்திருக்கும். இந்த நிலையை 'டெக்ஸ்ட்ரோ கார்டியா' (Dextro Cardia) என்கிறார்கள்.

இது ஒரு வியாதியல்ல; தாயின் கருப்பையில் குழந்தை வளரும்போது ஏற்படும் சிலமாறுதல்கள் காரணமாக இதயம் இருக்கவேண்டிய பக்கம் மாறி விடுகிறது. இதனால் இதயத்தின் செயற்பாட்டில் எவ்விதப் பிரச்சினையும் ஏற்படாது.

**நாய் கடித்தால் மருந்து ஊசியைக் கையில் போடாமல் தொப்புளைச் சுற்றிப் போடுகிறார்களே, அது ஏன்?**

நாய்க்கடிக்குப் போடக்கூடிய தடுப்பூசியைத் தோலுக்கும் தசைக்கும் இடைப்பட்ட பகுதியில் செலுத்தினால்தான் அது இரத்தத்தில் கலந்து தடுப்புப் பணியைச் செய்யும். மேலும் அந்தத் தடுப்பு ஊசியைத் தினமும் ஒன்று வீதம் 7 இலிருந்து 14 நாள்கள் வரை தொடர்ச்சியாகப் போடவேண்டும். இதற்குக் கைகள் லாயக்கில்லை; பரந்த இடமான வயிறுதான் வசதியானது.

எனவேதான் அந்தத்தடுப்பூசியை மட்டும் தொப்புள்ளைச் சுற்றிப் போடுகிறார்கள்.

## பாடுபடு

நாட்டைக் காக்கப் பாடுபடு
நலமாய் இருக்கப் பாடுபடு
கேட்டை ஒழிக்கப் பாடுபடு
கொடுமை விலகிடப் பாடுபடு

உண்மை உயர்ந்திடப் பாடுபடு
உயர்ந்தோர் வாழ்ந்திடப் பாடுபடு
நன்மைகள் சிறந்திடப் பாடுபடு
நல்லோர் வாழ்ந்திடப் பாடுபடு

கல்வி உயர்ந்திடப் பாடுபடு
கல்லாமை அகன்றிடப் பாடுபடு
தாய்மொழி வளர்ந்திடப் பாடுபடு
தாயகம் உயர்ந்திடப் பாடுபடு

-கே.பி-

## புத்தாயிரமாம் ஆண்டுப்புதிர் - 2

| | | | | |
|---|---|---|---|---|
| | 411 | | | 390 |
| 391 | | 412 | | |
| | 392 | | | |
| | | 388 | | |
| 410 | | | 389 | |


மேலேயுள்ள அடைப்புக்குள் 25 சதுரங்கள் உள்ளன. அவற்றில் எட்டினுள் ஒவ்வொரு எண்கள் இருக்கின்றன. எஞ்சிய 17 சதுரங்களுக்குள்ளும் சதுரத்திற்கு ஒன்றாக 393 முதல் 409 வரையான எண்களைச் சேர்க்க வேண்டும். (இந்த இரு எண்களும் உட்பட). அப்படிச் சேர்த்தால் அடைப்புக்குள் எந்த நேர் வரிசையில் உள்ள ஐந்து சதுரங்களினுள்ளும் உள்ள எண்களைக் கூட்டினாலும் புத்தாயிரமாம் ஆண்டு விடையாக வரவேண்டும்.

முயன்று பாருங்களேன்!

P.அன்ரன் ஜெயக்குமார்
ஆண்டு 12 (கணிதப்பிரிவு)
யாழ். மத்திய கல்லூரி.

(விடை XV ஆம் பக்கத்தில்)

## பொருத்தமானது எது?




இங்குள்ள உருவத்துடன் சரியாகப் பொருந்தி முழுமையான ஒரு சதுரத்தை உருவாக்கக் கூடிய வடிவத்தையுடைய துண்டு, கீழேயுள்ள A,B,C ஆகிய மூன்று உருவங்களில் எது என்று கண்டுபிடியுங்களேன் பார்க்கலாம்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

## ஒரே மாதிரியானவை எவை?

இங்குள்ள ஆறு படங்களில் இரண்டு படங்கள் மட்டும் ஒரேமாதிரியானவை. அவை எவையென்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

